குறிப்பிட்ட தினத்தில் பதவியுயர்வுகள் வழங்கப்படுவது தாமதமாகியிருந்த பொழுதிலும் பேராசிரியர் பி.மாரம்பே சிரேஷ்ட பேராசிரியராக பதவியுயர்வு பெற்றதுடன் மற்றும் பீடத்தின் பதினொரு உறுப்பினர்களான பேராசிரியர் பி.மாரம்பே பேராசிரியர் என். ஏ. ஏ. எஸ்.பி. நிசங்க கலாநிதி எல். டி. பி சூரியகொட கலாநிதி. கே. டபிளியூ.எல். கே. வீரசிங்க திரு. டி. எம். எஸ்.பி. திசாநாயக்க மற்றும் திரு. எல். வி. வை. வீரரத்ன ஆகியோர் அறுவடை விஞ்ஞானத்துறையில் இருந்தும் திரு. ஏ. எம்.சி. பீ. கே. அத்தனாயக்கா மற்றும் கலாநிதி ஆர். எஸ். தர்மகீர்த்தி அகியோர் மண் விஞ்ஞானத் துறையில் இருந்தும் மற்றும் கலாநிதி ஜே. கே. விதானாராய்ச்சி மற்றும் கலாநிதி கே. கே. எஸ். பி. கொடிதுவக்கு ஆகியோர் மிருக விஞ்ஞானத் துறையில் இருந்தும் மற்றும் விவசாய உயிர்த் தொழிநுட்ப நிலையத்தில் சேர்ந்த கலாநிதி. பீ. எம். பீ. சி. ஜீ. பண்டாரநாயக்க அவர்கள் வெளியீடுகளுக்காக 2015 ஆண்டுக்கான “ ஜனாதிபதி விருதினை” வென்றெடுத்தார். NRC தகுதி விருதினை பீடத்தைச் சேர்ந்த இரு உறுப்பினர்களான பேராசிரியர் ஜி. எல். எல். பி. சில்வா மற்றும் கலாநிதி பி. ஆர்.டி. பத்திரன ஆகியோர் பெற்றுக் கொண்டனர். மண் விஞ்ஞானத் துறையைச் சேர்ந்த கலாநிதி டபிளியூ. எஸ் தன்தெனிய “ஐந்தாண்டு காலப்பகுதிக்குரிய மத்திய மற்றும் தென்னாசிய பிராந்தியத்தைச் சேர்ந்த (TWAS) இளம் இணைப்பாளர்கள் 2017 உலக விஞ்ஞான கல்வித் துறை” என்ற தலைப்புக்காக விருதுக்கு தெரிவு செய்யப்பட்ட அதே நேரத்தில் மிருக விஞ்ஞானத் துறையைச் சேர்ந்த கலாநிதி. கே. கே. எஸ். பி கொடிதுவக்கு அவர்கள் 2017 ஆம் ஆண்டுக்கான கொமன்வெல்த் பல்கலைக்கழகத்தினால் வழங்கப்படும் டிற்டுலர் அங்கத்துவ விருதுதளித்துக் கௌரவிக்கப்பட்டார். உலக வங்கியினாலும் விவசாய அமைச்சினாலும் ஒன்று சேர்ந்து அமுல்படுத்தப்பட்ட விவசாயத் துறையை நவீனமயப்படுத்தும் கருத்திட்டத்தின் ஆலோசகர்களாக அறுவடை விஞ்ஞானத் துறையைச் சேர்ந்த பேராசிரியர். பி. மாரம்பே அவர்களும் மற்றும் விவசாய பொருளியல் மற்றும் வணிக முகாமைத்துவ துறையைச் சேர்ந்த பேராசிரியர் எச். எல். ஜே. வீரகெவா அவர்களும் நியமிக்கப்பட்டனர். விவசாய விரிவாக்கல்த் துறையைச் சேர்ந்த செல்வி. திரு. டி. எம். யூ. ஐ. திசாநாயக்க தனது கலாநிதிப் பட்டத்தை கொழும்பு பல்கலைக்கழகத்தில் பூர்த்தி செய்தார். “மிளகாய் மற்றும் தக்காளிக்கான விவசாய கருத்துக்களுடன் கூடிய ஓர் சூழலுடன் அன்யொன்னியத் தன்மையுடைய அறுவடை முகாமைத்துவ பொதிக்கான பூச்சிக் கொல்லி எச்சங்களும் மற்றும் சில தெரிவு செய்யப்பட்ட நன்மை பயக்கும் மதிப்பீட்டு ஆய்வும்” என்ற தலைப்பிலான மூன்று வருட கருத்திட்டத்திற்கு NRC ஆராய்ச்சி மானியத்திலிருந்து ரூபா.4,977,908 பெற்று பேராசிரியர் டி. எம். டி. கொஸ்தா பெற்றுக் கொண்டார்.

Pro-Food Pro-Pack & Ag-Bizஎன்ற கண்காட்சிப் போட்டியில் பீடம் பங்கு பற்றி அதில் Pro-Food Pro-Pack & Ag-Bizக்கான முதலாம் இடத்தை தட்டிக் கொண்டது.கண்காட்சியிற்காக உணவு விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பத் துறை மாணவர்கள் வடிவமைத்த “பருகத்தகு கோப்பிக் கோப்பை” முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. மேலும் நிருவன ரிதியான பகுதிக்கும் மற்றும் சிறந்த வணிகத்துக்கு சாத்தியமான தயாரிப்புகளும் அதாவது மனை தேங்காய் திருவல் மற்றும் தேங்காய்ப் பால் கரைத்துப் பிரிப்பான் என்ற ஆராய்ச்சியினை திரு. ஏ. ஜே. ஆர்.பி திரு. எஸ். ஆர்.ஜெயனாயக்க ஆகியோர் உருவாக்கினர்.

தேசிய கண்டு பிடிப்பாளர் கண்காட்சி இலங்கை புத்தாக்குனர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டு செப்டம்பர் 26 ஆம் திகதி தொடக்கம் 28 ஆம் திகதி நடைபெற்ற வைபவத்திலும் பீடம் பங்கு பற்றியது. இந்தப் புத்தாக்கங்கள் 2012/2013 இறுதியாண்டு கருத்திட்டங்களுக்காக செயற்பாடுகள் விருத்தி செய்யப்பட்டு கண்காட்சிக்கு வைக்கப்பட்டன சுமார் 10 புத்தாக்குனர்கள் FAuRS – 2016 இல் தெரிவு செய்யப்பட்டு பல்கலைக்கழகத்துக்கும் மூன்றாம் நிலை நிறுவனங்களுக்கும் கீழ் தேசிய கண்டு பிடிப்பாளர்கள் கோர்வையில் கலந்து கொள்ளச் செய்வதற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தன. அவர்களின் விபரங்கள் கீழ்வருமாறு :

i. “ATmega GSM (SIM 900) நீர் கட்டுப்பாட்டு முறைமையைக் கட்டுப்படுத்தல் என்ற தலைப்பினை விவசாய பொறியியல் துறையைச் சேர்ந்த திரு. ஆ.எம். ஆர்.டி. அபயரத்ன, பேராசிரியர் எம். ஐ. எம்.மஜிவூட், திரு. டபிளியூ. எம்.சி. எஸ் ரத்னபால மற்றும் கலாநிதி கே. எஸ். பி. அமரதுங்க ஆகியோர் உருவாக்கியிருந்தனர்.

ii. வேதிவினைக்கான வயோச்சர் தயாரிப்புக்குரிய நடுத்தர அளவிலான வியாபாரத் திட்டம் என்ற புத்தாக்கத்தினை விவசாய பொறியியல் துறையைச் சேர்ந்த திரு. எம். கே. பி. எஸ். சுமணசேன மற்றும் கலாநிதி. ஏ. கே. கருணாநாயக்க ஆகியோர் உருவாக்கியிருந்தனர்.

iii. “கோழி மற்றும் மீன் கறிகளுக்கான உறைப்பு கனசதுரக் கட்டிகளை உணவு விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப துறையைச் சேர்ந்த செல்வி. ஜி. ஏ. டி. டி. டி. சில்வா, திரு பி. சி. அரம்பத் மற்றும் திரு எல். ஜி. ஏ. என். வீரசிங்க ஆகியோர் உருவாக்கி இருந்தனர்.

iv. “தேங்காய் திருவல் மற்றும் பால் கரைத்துப் பிரிப்பானினை உணவு விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்ப துறையைச் சேர்ந்த திரு. ஏ. ஜே. ஆர் பி. பசன் மற்றும் எஸ். எல். ஆர்.ஜெயநாயக்க ஆகியோர் உருவாக்கினர்.

இந்தக் கண்டு பிடிப்பானது, தேங்காய் திருவல் மற்றும் பால் கரைத்துப் பிரிப்பானானது மத்திய மாகாண போட்டியினூடாகவும் மற்றும் மாணவர்கள் அவர்களாகவே விருதுகளுக்கு விண்ணப்பித்து தேசிய மட்டத்திலும் அவ்வாறே ஏனைய மூன்று புத்தாக்கங்களும் FAuRS – 2016 க்கு தெரிவு செய்யப்பட்டது.

உட் கட்டமைப்பு அபிவிருத்தி

நிர்வாகக் கட்டிடத்தின் வலது மாடியின் நிர்மாணிப்பணிகளின் 1 ஆம் கட்டம் 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் நிறைவடைந்ததுடன் விலங்கு விஞ்ஞானத் துறைக்கான கட்டிட நிர்மாணப் பணிகள் தற்போது நிறைவடையும் தறுவாயில் உள்ளது. II ஆம் கட்ட பெரும்பாகத் திட்டமானது (பீடத்திற்கான விரிவுரை மண்டபம்/ பொது அறை/ மாநாட்டு மண்டபம்) ஆகியனவும் ஏப்ரல் மாதம் 2018 ஆம் ஆண்டு முடிவுறுத்தப்படவுள்ளது. மாநாட்டு மண்டபத்தினை செப்பமிடல் மற்றும் மஹாஇலுப்பல்லம உப வளாகத்தின் வீதி வலையமைப்பு நிர்மானிப்பானது பெரும்பாகத் திட்டத்தின் III ஆம் கட்டமாக அதாவது பீடத்தின் உணவு விஞ்ஞான மற்றும் தொழிநுட்ப துறையின் நில வனப்பு நடவடிக்கையானது 2017 ஆம் ஆண்டின் கடைசிப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

வெளியீடுகள்

இவ்வாண்டுக்குள் வழமை போல பீடத்தின் கல்விசார் உத்தியோகத்தர்கள் குறிப்பிடத்தக்க வெளியீடுகளை முன் வைத்திருந்தனர். இவற்றுள் தேசிய, சர்வதேச சுட்டியிடப்பட்ட மற்றும் சுட்டியிடப்படாத சஞ்சிகைகள் மாநாட்டு அறிக்கைகள் ஆய்வு வெளியீடுகள், மாநாட்டு வெளியீடுகள், நூல்கள் நூல்களின் அத்தியாயங்கள் மற்றும் சுருக்கங்கள் ஆகியவை அடங்கும். “கந்தானைப் பூக்கள் என்ற சிறந்த ஆராய்ச்சி சுருக்கத் தொகுப்பு பெப்ரவரி 22 ஆம் திகதி நடைபெற்ற போட்டியில் பீடத்தினால் சமர்பிக்கப்பட்டது.

பாராட்டு வைபவம்

பீடமானது 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பீடத்திற்கும் பல்கலைக்கழகத்துக்கும் தேசத்திற்கும் நற்சேவையாற்றி பீடத்தை விட்டு விலகிச் சென்ற ஏழு கல்விசார் அணியினரைப் (பேராசிரியர்கள் எஸ். டபிளியூ. சிறில்,ஈ. ஆர்.கே .பெரேரா, ஐ. பி. விக்ரமசிங்க, எஸ். பி. இந்திரரத்ன கலாநிதி ஜே. பி. கீர்த்திசிங்க காலம் சென்ற கலாநிதி ஜே. ஏ. எல்.பீ. ஜெயகொடி காலம் சென்ற கலாநிதி எச். ஏ. எம். விக்ரமசிங்க) பாராட்டுவதற்கு கிரான் கண்டியன் விடுதியில் யூலை மாதம் 28 ஆம் திகதி பாராட்டு வைபவத்தை ஏற்பாடு செய்து நடத்தியது.

நிலையங்களும் அலகுகளும்/பீடத்தின் பண்ணைகள் மற்றும் ஆய்வு நிலையங்கள்

AbC, AgBC, மற்றும் AEU என்பன பீடத்திற்குக் செயற்பாட்டு ரீதியாககுறிக்கோள்களை எட்டிப்பிடிக்கும் வண்ணம் அவற்றின் பங்களிப்புகளை வழங்கியுள்ளன. தொடங்கொல்லயில் அமைந்துள்ள மஹா இலுப்பல்லம உப பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக ஆய்வு நிலையம், மாவெலவில் அமைந்துள்ள கால்நடைப் பண்ணை, மீவதுர பண்ணை என்பன அவற்றின் அடிப்படைப் பணிகளாகிய பட்டதாரி மாணவர்களுக்கு பயிற்சிகளை வழங்கியதுடன் கல்விசார் பதவியணியினர், மாணவர்களுக்கு ஆய்வு நடவடிக்கைகளுக்கும் தமது ஒத்துழைப்பை வழங்கியுள்ளன. மாவெலவில் அமைந்துள்ள கால்நடைப் பண்ணை பல்கலைக்கழக சிறந்த முறையில் தொழிற்பட்டதுடன் சுய முதலீட்டு செயற்றிட்டமாகிய விவசாய உற்பத்தி விற்பனை நிலையம் பல்கலைக்கழக சமூகத்திற்கு சிறந்த சேவையை வழங்குகின்றது.

சர்வதேச மற்றும் தேசிய தொடர்புகள்

2017 ஆம் ஆண்டில் பீடம் சார்பாக பேராதனைப் பல்கலைக்கழகமானது ருமேனியாவின் ப்ராசொவ் உடைய ட்ரான்சில்வேனியா பல்கலைக்கழகம், ஜப்பானின் ஒசாக்கா பேபெக்ஷ பல்கலைக்கழகம், அவுஸ்ரேலிய மேற்குப் பல்கலைக்கழகம் மற்றும் மத்திய சீனாவின் நோமல் பல்கலைக்கழகம் என்பவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. பீடமானது ஆராய்ச்சி ஒப்பந்தத்தில் சர்வதேச உணவு குறிக்கோள் ஆராய்ச்சி நிறுவனத்துடன் (IFPRI) மற்றும்உலக உணவுத் திட்டம் (WFP) ஆகியவற்றுடன் கைசாத்திட்டுள்ளது. மேலும் பீடமானது மலேசியாவின் புட்ற பல்கலைக்கழகம், பிலிப்பைன்ஸ் பல்கலைக்கழகம், தாய்லாந்தின் லொஸ் பநோஸ் கெசட்ஸா்ட் பல்கலைக்கழகம், கனடாவின் நியுபவுன்ட்லண்ட் பல்கலைக்கழகம், தாய்வானின் தேசிய பல்கலைக்கழகம், இந்தியாவின் பேராசிரியர் ஜெயசங்கர் தலங்கண மாநில விவசாயப் பல்கலைக்கழகம் மற்றும் இந்தியாவின் மதுரை தியாகராஜர் முகாமைத்துவ பாடசாலை ஆகியவற்றுடன் கலந்துரையாடல்களை ஆரம்பித்துள்ளது.

இலங்கைக்கு வெளியேயான குறிப்பிடத்தக்களவு வேறுபட்ட நிகழ்ச்சிகள் 40 க்கும் மேற்பட்ட மாணவர்கள் சர்வதேச மயமாக்கல் பட்டப்படிப்பு நிகழ்சியின் பகுதியாக பீடத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டவர்கள் கீழ் வருமாறு காட்டப்படுகின்றனர்.

i. “இரசாயணமற்ற உலக சங்கமானது இந்தியாவில் சர்வதேச இரசாயணமற்ற விவசாய அமைப்புகளை கொண்டு மாநாடு ஒன்றை நடத்தின.
ii. வெல்யியத்தில் “இளம் விவசாய மாநாடு – 2017” நடைபெற்றது.
iii. “நிலைத்து நிற்கக் கூடிய தயாரித்தலும் மற்றும் நுகர்தலும் என்ற தலைப்பில் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு ஜப்பானில் சகா பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.
iv. “கிராம எழுச்சி நிகழ்ச்சி” இந்தியாவின் தியாகராஜர் முகாமைத்துவப் பாடசாலையில் நடைபெற்றது.
v. சர்வதேச மாணவர் அரங்கில் தாய்வானில் நடைபெற்றது.

ஏப்ரல் 6 - 8 ஆம்திகதி வரைக்கும் கண்டி அமாயா விடுதியில் சர்வதேச தோட்டக்கலை விஞ்ஞானங்கள் சங்கம், தாவரவியல் பூங்காக்கள் திணைக்களம் மற்றும் அறுவடைக்குப் பின்னரான தொழிநுட்ப நிறுவனம் ஆகியவற்றின் ஒத்துளைப்புடன் பீடத்தின் விவசாய விரிவாக்கல் பிரிவின் மூலம் அறுவடைக்குப் பின்னர் மற்றும் வெப்பமண்டல பிராந்தியம் சார் தோட்டக்கலை உற்பத்தியின் தர முகாமைத்துவ 4 ஆவது சர்வதேச மாநாடு நடாத்தப்பட்டது. அங்கு ஏறக்குறைய 38 சர்வதேச மற்றும் 103 உள்நாட்டு பங்கு பற்றுனர்கள் இந்தப் பயிற்சிப் பட்டறையில் பங்கு பற்றினர்.

அவுஸ்ரேலியாவின் சிட்னிப் பல்கலைக்கழகத்திலிருந்து இளங்கலை மானியினரும் ஜப்பானின் உட்சொநொமிய பல்கலைக்கழகத்தில் பீடத்தின் அரையிறுதிக் கற்கையில் கலந்து கொண்டனர். இலங்கைக்கான கனடாவின் உயர்ஸ்தானிகர் மற்றும் ஐக்கிய அமெரிக்காவின் மிச்சிக்கன் மாநிலப் பல்கலைக்கழகத்தின் பணிக்குழு, ருமேனியாவின் ப்ராசோவினுடைய ரான்சில்வேனியா பல்கலைக்கழகம், இந்தியாவின் மதுரையைச் சேர்ந்த தியாகராஜர் முகாமைத்துவப் பாடசாலை ஆகியவற்றில் இருந்து ஆகியவற்றின் பிரதிநிதிகளாக பீடத்திற்கு விஜயம் செய்தனர்.

ஆராய்ச்சிக்கும் பயிற்சிக்குமான ஒத்துளைப்புக்காக கைத்தொழிலுக்கு அமைவான இணைப்பினை ஒத்துளைப்பு வழங்கும் துறையுடன் பீடமானது கேலிஸ் விவசாய கோல்ட்லின் லிமிட்டட், டீசல் மற்றும் மோட்டார் பொறியியல் (DIMO) PLC and A Baur & Company (Pvt) Limited உடன் கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளது.

சமூகச் செயற்பாடுகள்

பீடத்தின் வருடாந்தச் செயற்பாடுகளாக

i. புது வருட பிரித் உற்சவம் சமய நம்பிக்கைகளை உண்டு பண்ணும் நிகழ்ச்சிகள் ஜனவரி 01 ஆம் 02 ஆம் திகதிகள் நடைபெற்றன.
ii. ஆங்கில 2017 முற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தில் பெற்றுக் கொண்ட திறன்களை வெளிக்காட்டும் நிகழ்வு மார்ச் 16 ஆம் திகதி நடைபெற்றன.
iii. பக் மகா உற்சவம் தமிழ் / சிங்கள புத்தாண்டு ஏப்ரல் 08 ஆம் திகதி நடைபெற்றன.
iv. கலைவிழா 2017 மாணவர்களிடையில் திறமைகளைக் கண்டு பிடித்தல் நவம்பர் 29 ஆம் திகதி நடைபெற்றன.
v. வருடாந்த பதவியணியினர் ஒன்று கூடல் நவம்பர் 30 ஆம் திகதிநடைபெற்றன.

அது தவிர, பீடத்தைச் சேர்ந்த பல்வேறு சங்கங்களைச் சேர்ந்த மாணவர்கள் பல்வேறு மாவட்டங்களிலும் கா.பொ.த (சா/த) மாணவர்களுக்குப் பல்வேறு கருத்தரங்குகளை ஒழுங்கு செய்திருந்தனர். விலங்கு விஞ்ஞான பீடம், அறுவடை விஞ்ஞானம், மண் விஞ்ஞானம் போன்று துறையினர் பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த உயர் தரத்தில் விவசாய உயிரியல் பாடத்தைக் கற்கும் மாணவர்களுக்கு ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தினர். மாவெலவில் அமைந்துள்ள கால்நடை நிலையம், இளைய கலாச்சார

ஆய்வுகூடம், மண் விஞ்ஞான ஆய்வுகூடம் மற்றும் விவசாய உயிரியல் ஆய்வுகூடம் போன்ற நிலையங்களினால் மாணவர்களுக்குச் செயன்முறைப் பயிற்சிகள் வழங்கப்பட்டது.

தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

மாணவர்களின் ஏற்றுக் கொள்ள முடியாத பகிடிவதை நடவடிக்கைகளினால் பேராதனை பல்கலைக்கழக வழக்கறிஞருடன் பிரதி வழக்கறிஞர் பீடத்தின் SAWC ஆகியோர் ஒன்றினைந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைளினால் மாணவர்கள் இரு முறை தமது கல்வி நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தனர். பெரும்பாலான நேரங்கள் பிரதி வழக்கறிஞர் மாணவ ஆலோசகர்கள் மற்றும் SAWC மற்றும் நிர்வாகத்தினர் ஆகியோர் மாணவர்கள், பெற்றோர் மற்றும் பணிக்குழுவினர் ஆகியோருடன் இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு பேச்சுவார்த்தை நடத்துவதில் காலம் கழிந்தது. 2015/16 தொகுதி மாணவர்களை உள்வாங்கச்செய்வதற்கு 2016 ஆம் ஆண்டு கல்வி நடவடிக்கைகள் 2017 ஆம் ஆண்டுக்கு அப்பால் கடந்து செல்ல வேண்டி இருந்தது. ஆனால் பீடமானது மிகப் பாரியதொரு முயற்சியை எடுத்துக் கொண்டு கல்வி நடவடிக்கைகளை உரிய காலத்தில் முடிக்கும் முயற்சியினை வெற்றி கொண்டது. அதாவது விடுமுறைக் காலத்தில் மேலதிக விரிவுரைகளை நடாத்தி குறிக்கோள்களை அடைந்தது. நிதிக் குறைபாட்டினால் சரியாக ஆய்வு கூடங்களையோ சரியாக நடத்திக்கொள்ள முடியவில்லை. இதற்காக விவசாய பட்டப்பின்படிப்பு நிறுவகத்தில் பட்டப்படிப்பு பட்டப்பின்படிப்பு மாணவர்கள் இருசாராருக்கும் பாவிக்கும் வசதிகளுக்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்படுகின்றது.

எதிர்காலத் திட்டங்கள்

மூன்று பட்டப்படிப்பு பாடத்திட்டங்களை மீளாய்வு செய்வதற்குத் 2018 ஆம் ஆண்டில் முன்னுரிமை கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது. விவசாய உயர் கல்வியின் 70 வருட நிறைவும் MI உப பல்கலைக்கழகத்தின் 50 ஆண்டு நிறைவும் கொண்டாடப்படவுள்ளது. விவசாயப் பட்டப்பின்படிப்பு நிலையத்துடன் இணைந்து கல்வி மற்றும் ஆய்வு நடவடிக்கைகளுக்காக மத்திய பகுப்பாய்வு ஆய்வுகூடம் தாபிக்கப்படவுள்ளது. அக்கறை செலுத்தும் தரப்பினரிடையே பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டத்தை பிரபல்யப்படுத்துவதற்காக நடவ டிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வெளிநாட்டு மாணவர் பங்கை நிரப்புவதற்கான திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. பிரதான திட்டத்தைப் பூர்த்தி செய்தல், மாணவர் பரிமாற்றம், கூட்டு ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன. மேலும் பீடம் பீடத்துக்கான நிலவனப்பு பகுதியினை 2018 க்கான எதிர் காலத்திட்டத்தில் முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது. அதனை விட உள்நாட்டு வெளிநாட்டு நிறுவனங்கள் மூலமும் வெளிநாட்டப் பல்கலைக்கழகங்களில் இருந்தும் ஆராய்ச்சிகளை இணைத்துக் கொள்வதற்கும் மாணவர்களை பரிமாற்றிக் கொள்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

3.2 இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம்

(பீடாதிபதி - கலாநிதி டி.பீ.எம்.விக்ரமரத்ன)

அறிமுகம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின்8வது பீடமாக இணைந்த சுகாதாரங்கள் விஞ்ஞான பீடமானது 2007 ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்டது. ஆரம்பத்தில் இப் பீடத்தில் தாதியியல் மற்றும் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் தொடர்பாக நான்கு வருட விசேட இளமாணிப் பட்டங்களை வழங்கியது. இப் பாடநெறிகளில் தாதியியல், இயன்மருத்துவம், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானம், மருந்தியல், கதிரியக்க மற்றும் ஊடுகதிர்ப்படமெடுத்தல் ஆகிய பட்டங்கள்உள்ளடங்குகின்றது. 2010 ஆம் ஆண்டின் போது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வழிகாட்டலின் கீழ் இப்பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் 3+1 (சாதாரண மற்றும் விசேட) என மாற்றப்பட்டன. 2014 ஆம் ஆண்டின் போது மாணவர்களிடமிருந்து ஏற்பட்ட எதிர்ப்புக்கள் மற்றும் பீட அங்கத்தவர்களின் வேண்டுகோளின் பிரகாரம் பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் கட்டமைப்பை சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட 120 திறமைச்சித்தி என்ற நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மீளமைக்கப்பட்டது. இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தில் ஆறு கற்கைத் துறைகளுடன் 57 கல்விசார் அலுவலர்களையும்48 கல்விசாரா அலுவலர்களையும் உள்ளடக்கியுள்ளது. இப்பீடத்திற்காக சேர்க்கப்பட்ட ஐந்தாம் குழு மாணவர்கள் தற்போது அவர்களின் கற்கைநெறியை பூர்த்தி செய்துள்ளனர். இதுவரையில் மேற்குறிப்பிட்ட பல்வேறு துறைகளில் 946 மாணவர்கள் பட்டப்படிப்பினை தொடர்கின்றனர். இதுவரையில் பட்டப்படிப்பினை நிறைவுசெய்த மாணவர்கள் எண்ணிக்கை 594 ஆகும்.

தற்போது பீடமானது வைத்தியசாலை சார்ந்த பயிற்சிகளை மாணவர்களுக்கு வழங்குவதற்காக அரச மற்றும் தனியார் வைத்திசாலைகளுடன் இணைவாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. பீடத்தின் இயன்மருத்துவ சேவைக்கிளை வெளிநோயாளிகளுக்கு தரமான இயன்மருத்துவ சேவைகளை வழங்குவதோடு நோயாளர் சேவையை பீடத்தினுள் பெற்றுக் கொள்ளவும் சிறந்த சிகிச்சை பயிற்சி முன்னேற்ற சூழலை மாணவர்களுக்கு ஏற்படுத்தவும் உதவுகிறது.

அடைவுகள்

பல்கலைக்கழகத்தில் வைர விழாவைக் கொண்டாடும் அதே வேளை பீடத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழா ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. அதே நாளில் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் “வைர விழாக் கட்டிடம்” எனப் பெயரிடப்பட்ட புதிய நிருவாகக் கட்டிடத்தினை வைபவ ரீதியாக திறந்து வைத்தார். இந்த நான்கு மாடிக் கட்டிடம் இரண்டு ஆய்வுகூடங்களையும் ஒரு பெரிய மாநாட்டு மண்டபத்தினையும் மேலதிகமாக நிருவாக மாடியினையும் திறந்தவெளி பரீட்சை மண்டபத்துடன் மாணவர்களின் நடவடிக்கைகளுக்கான பகுதியையும் உள்ளடக்கிக் காணப்படுகின்றது.
வரையறுக்கப்பட்ட சிகிச்சைக்கான பயிற்சிகளைப் பெற்றுக் கொள்ளுதலானது பேராதனை சிறிமாபோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியவாலையினைப் போன்று கண்டி போதனைவைத்தியசாலை மற்றும் பேராதனை போதனாவைத்தியசாலை ஆகியன கருத்தில் கொள்ளப்பட்டதானது இந்த ஆண்டில் அடையப்பட்ட முக்கியமானதொரு பெறுபேறாக கருத முடியும்.
மூன்றுமாடிக் கட்டிடத் தொகுதியினைக் கொண்ட பேராதனை இலங்கை வங்கியுடன் இணைந்த மருந்தியல், ஊடுகதிர் படமெடுப்பு சேவை நிலையம், புண்ணாற்றும் நிலையம் மற்றும் நோய் ஆய்ந்தறியும் நிலையம் ஆகியவற்றிற்கு குறித்து ஒதுக்கப்பட்டது. இச் சகல நடவடிக்கைகளும் 2018 ஆம் ஆண்டில் தொடங்கப்பட உள்ளது.
உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் டிசம்பர் 28 ஆம் திகதி ஆஸ்திரியா அரசாங்கத்தின் மென் கடன் திட்டம் மூலம் உபகரணங்களுக்கான விலை கோரல் ஒப்பந்தத்திற்கான மனுவுக்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டது. இந்த உபகரணங்களானது ஏப்ரல் 2018 இல் வந்தடையவுள்ளது. இணைந்த சுகாதார விஞ்ஞானங்களுக்கான உயர்கல்வி பட்டப்படிப்புக் குழு நவம்பர் மாதம் ஸ்தாபிக்கப்பட்டு M.sc. M.phil மற்றும் ph.d பட்டங்களுக்கு உரிய துறைக் கற்கைகளை பீடம் ஆரம்பிக்கவுள்ளது. ஐந்து கல்விசார் அணியுறுப்பினர்கள் 2017 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் உள் வாங்கப்பட்டுள்ளனர்.

ஊடுகதிர் மற்றும் ஊடுகதிர் படமெடுத்தல், மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானங்கள் துறை

- இத்துறையின் தற்போதுள்ள கட்டிடத்தின் II ம் கட்ட கருத்திட்ட முன்னீர்ச்சியினை விருத்தி செய்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது மேலும் நிர்மானிப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.
- ஊடுகதிர் படமெடுக்கும் சேவை நிலையத்துக்கான ஓர் புதிய இடம் பேராதனை போதனா வைத்தியசாலைக்கு அண்மையில் விலைக்கு வாங்கப்படுகின்றது. இந்நிலையத்தின் சேவை 2018 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ளது.

மருத்துவ இரசாயன ஆய்வுகூட விஞ்ஞான கற்கைத்துறை

- கலாநிதி ஆர்.பி. இளயபெரும 2015 ஆம் ஆண்டுக்கான விஞ்ஞான ரீதியான வெளியீட்டுக்கு ஜனாதிபதி விருதினைப் பெற்றுக் கொண்டார்.
- வெளியீடுகள்
  - சுட்டியிடப்பட்ட சஞ்சிகை - 01
  - சுருக்கவுரைகள்/மாநாட்டு வெளியீடுகள் - 09

  சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டுக்கு சமூகமளித்தல் - 01
- புதிதாக உள்வாங்கப்பட்ட மாணவர் தொகுதி – 2016/17 தொகுதி – 27 மாணவர்கள்

உடற்பயிற்சித் துறை

- பணிக்குழு அபிவிருத்தி
  செல்வி ஈ. லியனகே - 2017 ஏப்ரல் 25 ஆம் திகதியில் இருந்து மலேசியாவின் புனித பல்கலைக்கழகத்தின் சுகாதார விஞ்ஞானங்கள் பாடசாலையில் கலாநிதிப்பட்டத்தினை கற்கச் சென்றுள்ளார்.
- தசைக்கூட்டு ஆராய்ச்சிக் குழு: சிற்னிப் பல்கலைக்கழகத்தின் மாரடைப்பு ஆராய்ச்சிக் குழு - HMR ஆராய்ச்சிக் கருத்திட்டத்தின் ஒத்துழைப்புடன் இசங்கா வீரசேகர ஆராய்ச்சி செய்கிறார்.

தாதியியல் கல்வித்துறை

- பெப்ரவரி 01ஆம் திகதியிலிருந்து மருத்துவ இரசாயன ஆய்வுகூட விஞ்ஞான கற்கை துறையைச் சேர்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ஆர்.பி.இளையபெரும தாதியியல் கல்வித்துறையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டார்.
- M.Philஐ ஆரம்பித்த பணிக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை-1
- M.Philஐ தொடரும் பணிக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை-1
- Ph.D ஐ முடித்த பணிக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை-1
- Ph.D ஐ தொடரும் பணிக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை- 4

மருத்துவ பயிற்சித் துறை

உரிய அதிகாரிகளுடன் பிரயோசனமான பேச்சிவார்த்தைகள் நடத்தப்பட்டதன் பிரகாரம் தாதியல்கல்வித் துறைக்கு பட்டதாரிகளுக்கான மருத்துவ பயிற்ச்சியானது பேராதனை சிறிமாபோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலையில் நடாத்த அனுமதி வழங்கப்பட்டன. எனவே 2013/2014 மாணவ தொகுதியினர் தனது மருத்துவப் பயிற்சியினை பேராதனை சிறிமாபோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலையில் 2017 நவம்பர் 20 ஆம் திகதியில் இருந்து ஆரம்பித்தனர். மேலதிகப் பேச்சுவார்த்தைகள் கண்டி போதனைவைத்தியசாலை மற்றும் பேராதனை போதனா வைத்தியசாலைகளில் தாதிப் பட்டதாரிகளுக்கான மருத்துவப் பயிற்சிப் பிரவேசத்துக்காக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

வெளிநாட்டு ஒத்துளைப்புகள்

- தாதியல் கல்வித்துறைக்கு ஒரு மைல்க் கல்லை அடைந்து கொள்ளும் முகமாக ஐக்கிய அமெரிக்காவின் ஜோன் கொப்கின் பல்கலைக்கழகத்தின் தாதியல் பாடசாலைக்கும் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தின் தாதியல் கல்வித் துறைக்கும் இடையில் ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் முன்வைக்கப்பட்டுள்ளது.
- ஜப்பானின் நிகட்டா பல்கலைக்கழகத்துடன் சகோதர தொடர்புகளின் கீழ் 2012/2013 தொகுதியில் உள்ள இரு தாதியல் மாணவர்கள் ஆராய்ச்சி புலமைப்பரிசில்கள் வழங்குவிக்கப்பட்டு அவர்களுடைய இறுதி வருட ஆராய்ச்சி கருத்திட்ட அறிக்கை நிகாட்டா பல்கலைக்கழகத்தின் வைத்தியப் பீடத்தின் சுகாதர விஞ்ஞானங்கள் பாடசாலையில் ஆராச்சி செய்து கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விளக்கேற்றல் வைபோகம்

தாதியல் கல்வித்துறையில் 9 ஆவது விளக்கேற்றல் வைபோகம் ஜுன் மாதம் 14 ஆம் திகதி நடாத்தி வைக்கப்பட்டது. 2014/2015 பட்டதாரித் தொகுதியினர் தலைக் கவசங்களும் விளக்குகளும் வழங்குவிக்கப்பட்டு பட்டதாரி தாதி மாணவர்களுக்கான சத்தியப் பிரமாணங்கள் பாடல்களால் இசைக்கப்பட்டன.

பயிற்ச்சிப் பட்டறைகள்/சமூக சுகாதார நிகழ்ச்சிகள்

- “வேதனை முகாமைத்துவம் என்ற தலைப்பிலான பயிற்சிப்பட்டறை ஒன்று பெப்ரவரி 03 ஆம் திகதி தாதியல் பட்டதாரிகளுக்கு நடாத்தி வைக்கப்பட்டது.
- இரு சமூக சுகாதார வேலைத்திட்டங்கள் ஒக்டோபர் 04 ஆம் மற்றும் 06 ஆம் திகதிகளில் கந்தானப் பிரதேசத்திலும் தோட்டப் புறங்களிலும் 2011/2012 தொகுதி மாணவர்களால் நடாத்தி வைக்கப்பட்டன.

- ஒரு தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சியானது போட்டிப் பரிச்சைக்கு தோற்றவிருக்கும் இறுதி வருட மாணவர்களுக்காக 2017 நவம்பர் மாதம் 09 ஆம் திகதி நடாத்தி வைக்கப்பட்டது.
- 2006/2007 தொகுதியைச் சேர்ந்த இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தின் மூன்று தாதிப் பட்டதாரிகளுக்கு ஒன்லைன் பேச்சுவார்த்தைகள் மூலம் கனடாவின் தொழில் வாய்ப்புகளின் தகவல் முக்கியத்துவத்தினை பரிமாற்றிக் கொண்டு தாதியர்கள் இந்த நாடுகளில் பொருத்தத் தன்மை வழங்குவிக்கப்பட்டன.
- பாடசாலை சுகாதாரக் கல்வி நிகழ்ச்சி ஒன்று பிலிமதலாவ தீரானந்த மத்திய கல்லூரியில் செப்டம்பர் 18 ஆம் திகதியில் இருந்து 23 ஆம் திகதி வரைக்கும் 2013/2014 மாணவத் தொகுதியினரால் ஒழுங்குபாடு செய்யப்பட்டது.

மருந்தியல் கல்வித்துறை

- சகல 11/12 தொகுதி மாணவர்களும் தமது மருந்தியல் பட்டப்படிப்பினை வெற்றிகரமாக பூர்த்தி செய்து கொண்டனர்.
- பேராதனை சிறிமாபோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலையினைப் போன்று கண்டி போதனா வைத்தியசாலை மற்றும் பேராதனை போதனா வைத்தியசாலைகளில் வைத்தியவாலைப் பயிற்ச்சிகள் பெற்றுக் கொள்ளப்பட்டன.
- மாணவர்கள் கைத்தொழில் பயிற்சிகள், கைத்தொழில் விஜயங்கள் மற்றும் மருந்தியல் தொடர்பான மாநாடுகள் ஆகியவற்றில் பங்கு பற்றினர்.
- M.Phil ஐ ஆரம்பித்த பணிக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை - 1
- M.Philஐ தொடரும் பணிக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை- 2
- Ph.D ஐ முடித்த பணிக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை- 1
- Ph.D ஐ தொடரும் பணிக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை– 1
- இலங்கை அரச மருந்தாக்க கூட்டுத் தாபனத்துடன் “பல்கலைக்கழக அரச ஒசுசல” உடன் அரச கலை மருந்தகம் ஓர் ஒப்பந்தத்தினைக் கைச்சாத்திட்டுள்ளது.

அடிப்படை விஞ்ஞானத் துறை

- ஆய்வுகூட வசதிகள்
  புதிதாக அமைக்கப்பட்ட கட்டிடத்தின் 2 ஆம் மாடியின் பகுதியாக அடிப்படை விஞ்ஞானத்தின் பீடத்தின் வைரவிழாக் கட்டிடமாக ஒதுக்கப்பட்டது.
- 2016 ஆம் ஆண்டு இத் துறை உருவாக்கப்பட்டு நடைமுறைக்கு வந்ததன் பின்னர் MLS துறையின் ஒரு பிரிவாக ஒரு வருடமாக இயங்கி வந்தது.
- MLS துறையின் ஒரு சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம்1 நியமனம் பெற்றார்)

தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

தாதியல் துறை

2011/2012 தொகுதி பட்டதாரிகள் தமது கல்விப் பாடத் திட்டடத்தினை மாணவர்களால் நடாத்தப்பட்ட வெவ்வேறு அடையாளப் பகிஸ்கரிப்புகள் காரணமாக உரிய நேரத்தில் முடிக்கப்படவில்லை. எவ்வாறிருந்த பொழுதிலும் ஒக்டோபர் இறுதியில் மற்றும் நவம்பர் 09 ஆம் திகதி நடைபெற்ற போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதாக முடிவெடுக்கப்பட்டு சகல கல்வி நடவடிக்கைகளும் முடிக்கப்பட்டு 2018 ஆம் ஆண்டு பொதுப் பட்டமளிப்பு விழாவில் தோற்றி தமது பட்டங்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

அடிப்படை விஞ்ஞானத் துறை

இத் துறையானது ஆய்வு கூடத்தைப் பெற்றிருந்த பொழுதிலும் வளாகத்தினுள் மனித உடலியல் மற்றும் உயிரியல் இரசாயணத்திற்கான செயன்முறை செயற்றிட்டங்கள் ஆரம்பிக்க முடியாததன் காரணம் கீழ் கட்டமைப்பு வசதிகள், உபகரணங்கள், அன்றாடப் பாவனைப் பொருட்கள் மற்றும் மனிதவளம் ஆகியன இந்த நேரத்தில் கிடைக்காமை ஆகும்.

எதிர்காலத்திட்டங்கள்

உடற்பயிற்சித் துறை

- உள்நாட்டு வெளிநாட்டு விசேட நிபுணர்களுடன் செயலமர்வுகள் மற்றும் பயிற்சிபட்டறைகளை நடாத்துதல்.
- உள்நாட்டு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து ஆய்வுகளை நடாத்துதல்.

MLS கல்வித் துறை

- திவிநெகுமக் கட்டிடத்தில் நோயாய்வு கூடத்தினை ஸ்தாபித்தல்
- வைத்திய ஆய்வு கூட விஞ்ஞானிகளுக்கு பயிற்ச்சிப் பட்டறையை நடத்துதல்
- பட்டதாரி மாணவர்களில் இறுதியாண்டு மாணவர்களுக்கு பயிற்சிப் பட்டறை நடத்துதல்

ஊடுகதிர் மற்றும் ஊடுகதிர் படமெடுத்தல்

- உள்நாட்டு வெளிநாட்டு விசேட நிபுணர்களுடன் செயலமர்வுகள் மற்றும் பயிற்சி பட்டறைகளை நடாத்துதல்.
- உள்நாட்டு வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து ஆய்வுகளை நடாத்துதல்.

மருந்தியல் துறை

- பட்டப்படிப்பு பாடநெறிக்கான பாட மீளாய்வு ஒன்றினைச் செய்தல்
- திறந்த பல்கலைக்கழகத்தில் அரசாங்க ஒசுசல சமூக சேவைக்கும் மாணவர் பயிற்சிகளையும் வழங்குதல்
- பட்டப்படிப்புகளின் செயன் முறை நடவடிக்கைகளை விரிவுபடுத்தும் முகமாக புதிய மருந்தியல் ஆய்வு கூட நிர்மான வேலைப்பாடுகளை ஆரம்பித்தல்

அடிப்படை விஞ்ஞானத் துறை

- புதிய உபகரணங்களை கொள்வனவு செய்து ஆய்வு கூடப் பணிக்குழுவினரை ஆட்சேர்ப்பு செய்வதன் மூலம் அடிப்படை விஞ்ஞானத் துறையின் ஆய்வு கூடத்தினை அபிவிருத்தி செய்து முழுமையான செயற்பாட்டில் ஈடுபடுத்துதல். இதனை விட மேலதிகமாக, நாம் மனித உடலியல் விரிவுரைகளை நடாத்துவதுடன் இவ்வாறே செயன்முறை தொடர்களை நடாத்தி பொதுவான பாடங்களான புள்ளிவிபரவியல் போன்ற பாடங்களை சகல பட்டப்படிப்பு பாடநெறிகளுக்கும் நடத்துதல்.
- இத்துறையானது பழைய பீடாதிபதிக் காரியாலயத்தில் இட அமைவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டது.
- கல்விசார் மற்றும் கல்விசாரா அணியில் புதிய பணிக்குழு உறுப்பினர்களை ஆட்சேர்ப்பு செய்து கொண்டு சகல ஐந்து பட்டப்படிப்பு பாடநெறிகளுக்குமான பட்டதாரிகளுக்கு முக்கியமான சேவைகளை இத் துறைக்கு வழங்குதல்.

தாதியல் துறை

- 2018 ஆம் ஆண்டு மார்ச் மாதம் FAHS க்கும் ஜோன் கொப்கின்ஸ் பல்கலைக்கழகத்தின் தாதியல் பாடசாலைக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை முன்வைக்கப்பட்டு கைச்சாத்திடப்படவுள்ளது.
- எடின்வேக் பல்கலைக்கழகத்தில் இருந்து பிரதிநிதிகள் நவம்பர் மாதம் 15 ஆம் திகதி புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று கைசாத்திடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் இந்தியாவின் மும்பாயில் உள்ள எடின்வேக் பல்கலைக்கழகத்தின் பிராந்தியக் காரியாலயத்திலிருந்து ஒப்பந்தத்தை கைசாத்திடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.
- செயன் முறை நடவடிக்கைகளை சுமூகமாக நடத்துவதற்கு தாதி மாணவர்களின் வெவ்வேறு தொகுதியினருக்கு மனித வளமற்றும் கீழ்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து பழைய தரத்திலான ஆய்வு கூடம் (OSL) மூலம் உடனடி சேவைப் பிரிவு மற்றும் சிகிச்சை சேவைப் பிரிவு ஆகியவற்றினை உருவாக்குதல்.
- தாதியல் துறையானது புண் ஆற்றும் நிலையத்தினை பேராதனை கட்டம்பேயில் உள்ள திவி நெகும கட்டிடத்தில் கீழ் மட்ட மாடியில் இணைந்த சுகாதாரப் பீடத்தின் தாதியல் துறையின் மேற்பார்வையிலும் கண்காணித்தலின் கீழும் இயங்கச் செய்தல்.
- தாதியல் துறையானது ஓர் வருடாந்த தாதியல் மாநாட்டினை பீடக் குழுவின் அனுமதியுடன் தொடங்கி பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தின் 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது தாதியல் மாநாடு என்ற பெயரில் நடத்துதல்
- தாதியல் கல்வியில் முன்னணியில் திகழும் உயர் கல்வி நிறுவனமாக விழங்குவதற்கு தாதியல் கல்வித் துறை ஏற்பாடுகளைச் செய்துள்ளதுடன் மேலும் நாட்டில் உள்ள தாதியல் பட்டதாரிகளை M.Sc பட்டப்பின்படிப்பு பாடநெறிக்கு சேர்த்துக் கொள்ளுதல்.

3.3 கலைப்பீடம்

(பீடாதிபதி - பேராசிரியர் ஓ.ஜீ தயாரத்ன பண்டார)

அறிமுகம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடம் இலங்கையில் மானுடவியல் மற்றும் சமுக விஞ்ஞானம் ஆகிய துறைகளில் கற்பித்தல் ஆய்வு நடவடிக்கைகளின் முன்னோடியான நிலையமொன்றாகும். இப்பீடம் சமூக விஞ்ஞானம் மற்றும் மானுடவியலில் துறைகளில் 19 கலை இளமாணிப்பட்டங்களையும் வழங்குவதோடு வியாபார நிர்வாக மாணிப்பட்டம் (LLB) மற்றும் சட்டமாணிப் பட்டம் என்ற இளமாணிப் பட்டங்களையும் வழங்குகின்றது.2017 ஆம் ஆண்டின் போது பீடம் 3280 கலை (கலைமானி - 3202, சட்டம்- 207) முதல் பட்டதாரி அபேட்சகர்களுக்கு வசதிகள் வழங்கப்பட்டன. 2017 ஆம் ஆண்டில் கல்வியாண்டிற்காக 921 மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். அவர்களுள் கலைமானி 871 மற்றும் சட்ட பட்டப் படிப்பிற்காக 50பேரும் சேர்க்கப்பட்டிருந்தனர்.

அடைவுகள்

கலை பீடம் 2017 ஆம் ஆண்டின் போது 942 பட்டதாரிகளை உருவாக்கியுள்ளது.

BA(கௌரவ)	BA(கௌரவ)	சட்டமானிவணிகமானி	
616	212	60	54

கீழே தரப்பட்டுள்ளவாறு முதலாவது பட்டப்படிப்பு பட்டங்களை சுருக்கமாக வகைப்படுத்திக் கொள்ள முடியும்.

முதலாம் வகுப்பு	இரண்டாம் வகுப்பு		சித்தி
	கீழ்	மேல	
27	421	304	190

இவ்வாண்டில் பீடமானது மானுடவியல் மற்றும் சமுக விஞ்ஞானங்கள் துறையில் இரண்டாவது சர்வதேச கருத்தரங்கை (ICHSS) நடாத்தியது. இது 2017 ஆம் ஆண்டின் பல்வேறு துறைகளில் நடாத்தப்பட்ட ஆய்வுகள் தொடர்பான விடயங்களைப் பரிமாறிக் கொள்வதற்கு ஏதுவாக அமைந்தது. மேலும், 2017 ஆம் ஆண்டின் ICHSS 2017மாநாட்டில் முன் வைக்கப்பட்ட பல்வேறு ஆய்வுக் கட்டுரைகள் கலை பீடத்தின் ஆய்வு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் ஆய்வுத்துறையில் தடம் பதிப்பதற்கும் உருதுணையாக அமைந்துள்ளன. அத்துடன், இக்காலப்பகுதியில் பாளி மொழியில் பல்வேறு விடயங்களை இளம் மற்றும் சிரேஷ்ட ஆய்வாளர்கள் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்கின்ற நோக்கத்தில் பாளி மற்றும் பௌத்த கற்கைகள் துறை 3 ஆவது சர்வதேச பாளி மொழிக் கருத்தரங்கையும் ஒழுங்கு செய்திருந்தது. அது தவிர, கலை பீடத்தின் இளம் பட்டதாரி மாணவர்களின் ஆய்வு நடவடிக்கைகளை வெளிக் கொண்டு வருவதற்கு அடித்தளம் அமைக்கக் கூடியவாறு 2017 ஆம் ஆண்டில் கலை பீட ஆய்வு மாநாடு பீடத்தினால் மிக வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

இவ்வாண்டில் பீடமானது கீழ்வரும் பல்கலைக்கழகங்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டது.

துறை	புரிந்துணர்வு ஒப்பந்தம்	நாடு
புவியியல்	பேராதனைப்பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை மற்றும் சூர்ச் பல்கலைக்கழகத்தின் புவியியல் துறை (மாணவர் ஆராய்ச்சி பரிமாற்றம் மற்றும் கல்வி வெளியீடுகளை இணைத்தல்)	சுவிட்ஸலாந்து
சட்டம்	பென்சில்வேனியா மாநில பல்கலைக்கழகத்தின் சட்டத்துறை டிக்சன் பாடசாலை (பணிக்குழு/மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டம்)	ஐக்கிய அமேரிக்கா

கீழ் கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்களின் கீழ், பின்வரும் புதுப்பித்தல் வேலைப்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

1. 75 வருடம் பழைமை வாய்ந்த கலைக் காட்சிக் கூடம் மற்றும் பிரதான கலைத்துறைக் கட்டிடத்தினை புதுப்பித்தல்
2. பிரதான கலத்துறைக் கட்டிடத்தின் மலசல கூடத் தொகுதியினை புதுப்பித்தல்
3. புதிய கலைக் கூடக் கட்டிடத்தின் மலசல கூடத் தொகுதியினை புதுப்பித்தல்

புலமைப்பரிசில்கள்/

பீடமானது பல்வேறு வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடன் இணைந்து மேற்கொண்ட நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ், பின்வரும் பல மாணவர்களுக்குப் புலமைப்பரிசில்களையும் வழங்கியது.

பல்கலைக்கழகத்தின் பெயர்	புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை	கால அளவு
ஜப்பான் - சகா பல்கலைக்கழக மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டம்	01	ஒரு வருடம்
ஜப்பான் - பூகுஓகா பெண்கள் பல்கலைக்கழக மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டம்	05	ஒரு வருடம்
கொரியா, டொங்க்குக் பல்கலைக்கழக மாணவ பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டம்	03	அரை வருடம்
ஜப்பான், ஹொக்கைடோ பல்கலைக்கழக மாணவ பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டம்	01	ஒரு வருடம்

எதிர்காலத் திட்டங்கள்

கலை பீடமானது கலைப் பட்டப்பாடநெறிகள், ஆய்வு மற்றும் அபிவிருத்திச் செயற்பாடுகள் என்பனவற்றை விருத்தி செய்வதன் மூலம் நாட்டிற்குப் பல்வேறு துறைகளிலும் பங்களிப்புச் செய்கின்றது. காணப்படும் பட்டப்படிப்புப் பாடநெறிகளைப் புதுப்பித்தல், புதிய பட்டப்படிப்புப் பாடநெறிகளை அறிமுகஞ் செய்தல், செயற்பாடு மற்றும் களப்பயிற்சி நிகழ்ச் திட்டங்களை வழங்குதல், முன் தொழிற் பயிற்சிகளை வழங்குதல் என்பன இதில் அடங்கும். பதவியணியினரினதும் மாணவர்களினதும் ஆங்கில மொழிப்புலமையை விருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். வகுப்பறைகள், கலந்துரையாடல் அறைகளை விருத்தி செய்வதன் மூலம் பௌதீக, உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்வதற்கும் நாம் நடவடிக்கை எடுத்துள்ளோம். சர்வதேச மாநாடுகளையும் பட்டப்படிப்பு மாணவர்கள் ஆய்வுக் கருத்தரங்குகளையும் வருடாந்தம் நடாத்துவதன் மூலம் பீடத்தின் ஆய்வு, ஆராய்ச்சி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் உத்தேசித்துள்ளோம். அத்துடன் நாம் நாட்டின் கலை மற்றும் இலக்கியத் துறையை மேம்படுத்துவதற்குப் பங்களிப்புச் செய்வதற்கும் உத்தேசித்துள்ளோம்.

எதிர்வரும் ஐந்தாண்டுகளில் கலைமானிப் பட்டப் படிப்பு நிகழ்ச்சித்திட்டத்தைப் பின்வரும் துறைகளில் தொழில் வாய்ப்புக்களைப் பெறக் கூடியவாறு மாற்றியமைப்பதற்கு உத்தேசித்துள்ளோம்:

- பீடத்தை மையமாகக் கொண்ட கலைமானி விசேட பட்டப் பாடநெறிகளுக்கு மாணவர்களைப் பதிவு செய்வதனைக் குறைத்து திறன் மற்றும் தேர்ச்சி மட்ட விருத்தியை மையமாகக் கொண்ட கலைமானி விசேட பட்டங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல்.
- மரபு ரீதியான மூன்று பாடங்களைக் கொண்ட பொது, விசேட பட்டப் பாடநெறிகளுக்கு மாணவர்களைப் பதிவு செய்வதனைக் குறைத்து தொழில் மையமாகக் கொண்ட கலைமானி விசேட பட்டங்களை அறிமுகம் செய்தல். அறிவுக் கூறுகளைக் குறைத்து திறன்கள் மற்றும் தேர்ச்சிக் கூறுகளை அதிகரிப்பதன் மூலம் இதனை மேற்கொள்ளலாம்.

கலைப் பாடநெறிகளை மேம்படுத்துவதற்குத் தேவையான நிதி மற்றும் ஏனைய வளங்கள் எமக்குக் கிடைக்கும் என நாம் நம்புகின்றோம்.

2018 ஆம் ஆண்டில் கலைப்பட்டப் பாடநெறியை மேம்படுத்துவதற்கு கீழே குறிப்பிடப்பட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

1. பீடத்தின் தரக்கட்டுப்பாட்டுக் கலத்தின் (FAQC) கீழ் அனைத்துத் தரக்கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளையும் மேற்கொள்ளுதலும் மற்றும் வழமையான தரக்கட்டுப்பாட்டு FAQC கூட்டங்களை நடாத்துதல்
2. பீடத்தின் மூலம் வழங்கப்பட்ட பாடத்திட்ட அபிவிருத்திக்கு தேவையான வழிகாட்டல்களை வழங்கல்
3. கல்விசார் அணியினருக்கு பாடத்திட்ட அபிவிருத்தில் கரத்தரங்குகளையும் பயிற்ச்சிப் பட்டறைகளையும் நடத்துதல்
4. பாடத்திட்ட மீளாய்வில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல்
5. பாடத்திட்ட மீளாய்வு மற்றும் மீளமைப்பு
6. பீடத்தினால் வழங்கப்பட்ட பாடத்திட்ட மீளாய்வுக்கும் மீளமைப்புக்குமான விழிப்புணர்வு நிகழ்ச்சி
7. தற்போது பாவனையில் உள்ள கற்பித்தல் முறைகளை மதிப்பீடு செய்தல்
8. உரிய பாடநெறிகளுக்கான புதிய கற்பித்தல் முறைமைகளை அடையாளம் கண்டு கொள்ளல்
9. மாணவர் மையக் கற்றல் நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்காக கற்பித்தல் முறைகளைப் புதுப்பித்தல்.

10. மலலசேகர கட்டடத்தை புதுப்பித்தலும் மேம்படுத்தலும்
11. முன்மொழியப்பட்ட 7 மாடிக் கட்டடத்தை நிர்மாணித்தல்.
12. புவியியல் துறைக்கட்டடத்தை விரிவாக்கும் நிர்மானப்பணிகளை மேற்கொள்ளுதல்.
13. கல்வி துறைக்குரிய மாதிரி வகுப்பறையை நிர்மானித்தல்
14. மனநல ஆய்வு கூடம் ஒன்றை அமைத்தல்.
15. தொல்பொருள் ஆய்வு கூடத்தை புத்தாக்கம் செய்தல்
16. GIS ஆய்வு கூடத்தை மேம்படுத்துதல்
17. மொழி ஆய்வு கூடத்தை நிர்மானித்தல்
18. பீடத்தின் கற்பித்தல் உபகரணங்களையும் தளபாடங்களையும் கொள்வனவு செய்தல்
19. புதியகாரொன்றை பீடாதிபதிக்கு கொள்வனவு செய்தல்
20. முழு பீடத்தினையும் வலையமைப்பிற்கு உட்படுத்துதல்
21. WI-FI வலையமைப்பை ஸ்தாபித்தல்
22. பீட நூலகத்தை விஸ்தரித்தல்
23. உரிய நுல்களையும் சஞ்சிகைகளையும் கொள்வனவு செய்தல்
24. புதிய கல்விசார் கல்விசாரா பணிக்குழுவினரின் பதவி நிலைகளை கோருதல்
25. சகல பாடநெறிகளையும் - கற்கைநெறிகளையும் மாணவர்கள் மூலம் மதிப்பாய்வு செய்தல்
26. அனைத்துப் பாடநெறிகளிலும்.ஃ நிகழ்ச்சித்திட்டங்களிலும் ஆசிரியர்களின் கற்பித்தலை மதிப்பிடுதல்.
27. தரமான கற்பித்தல் விருது ஒன்றினை அறிமுகப்படுத்தல்
28. ஆசிரியர் மதிப்பீட்டில் கல்விசார் அணிக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சி
29. உரிய சிரத்தை உடையோர்களிடம் திறந்த நாட்களை மாணவர்களுக்காக நடத்துதல்
30. உள்ளுறைவாளர் பயிற்சியினை நடத்துதல்
31. மாணவர்களுக்கு கட்டாய முன் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் மூலம் தேவையான தொழிற்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை வழங்குதல்.
32. உரிய சிரத்தை உடையோர்களுடன் இணைப்பிணை மேம்படுத்தி பீடம் - தொழில் தருணர்களுடன் ஆலோசனை முறைமையை ஏற்படுத்துதல்
33. ஆலோசனை உள்ளுறைவாளர் நிகழ்ச்சியின் ஊடாக பாடத்திட்டத்தரிற்கான உரியகைத் தொழில் பயிற்ச்சியை சேர்த்துக் கொள்ளல்
34. பட்டப்படிப்புகள், மற்றும் மாணவர் பரிமாற்றத்தினை வெளிநாட்ட பல்கலைக்கழகங்களுடன் இணைப்பினை ஸ்தாபித்தல்
35. அளவைக்குரிய பொருளியலில் புதியபட்டப்படிப்பு பாடநெறியை அறிமுகப்படுத்துதல்
36. விஞ்ஞானக் கல்வி கற்பித்தலில் பட்டப்படிப்பு
37. ஒப்பிட்டு சமயத்தில் பட்டப்படிப்பினை அறிமுகப்படுத்தல்
38. ஆலோசனைத் துறையில் பட்டப்படிப்பினை அறிமுகப்படுத்தல்
39. பல்- கலாச்சார கல்வியில் பட்டப்படிப்பினை அறிமுகப்படுத்தல்
40. கலைமானிப் பட்டத்தில் ஒப்பீட்டு இலக்கியத்தினை அறிமுகப்படுத்தல்
41. கலைமானிப் பட்டத்தில் மொழி பெயர்ப்பு கல்வியினை அறிமுகப்படுத்தல்
42. கல்விமானியில் ஆங்கில மொழி கற்பித்தல் பாடசாலைகள்
43. கல்விமானியில் உடற் கல்வி
44. கல்விமானியில் கணிதம் கற்பித்தல்
45. BA(கௌரவ) இல் அவிவிருத்தி திட்டமிடல் மற்றும் பயிற்ச்சி
46. BA(கௌரவ) இல் வங்கியல் கல்வி
47. டிப்ளோமா பாடநெறிகள் மற்றம் சான்றிதழ் பாடநெறிகள்
48. சமூக முனைப்பு அபிவிருத்திப் பிரிவினை ஸ்தாபித்தல்
49. பிரஞ்சு துறையினை ஸ்தாபித்தல்
50. மனிதவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் ஆராய்ச்சி நிலையத்தினை ஸ்தாபித்தல்
51. சீன மொழி கற்பித்தல் பிரிவினை ஸ்தாபித்தல்
52. வங்கியல்கல்வித் துறையினை ஸ்தாபித்தல்.
53. கலை மாணவர்களுக்கான டிப்ளோமா பாடநெறியினை (ELTU) ஆரம்பித்தல்
54. MM மற்றும் ஏனைய IT வசதிகள் / SMART வகுப்பறைகளுடன் சகல வகுப்பறைகளையும் சகலருக்கும் மேம்படுத்துதல்
55. Moodle ஐ சகல துறைகளுக்கும் அறிமுகப்படுத்தல்
56. வாசித்தல்.ஃ கற்றல் பொருட்களை (பாடநெறிப் பொதிகள்) அறிமுகப்படுத்தல்
57. பட்டப்படிப்பு மாணவர்களுக்கு 2008 ஆராய்ச்சி மாசபை
58. களப் பயிற்ச்சி ஒத்துளைப்பு மற்றும் சகல கற்பித்தல் நிகழ்ச்சிகளையும் எட்டிப் பிடித்தல் செயற்பாடுகளை உட்படுத்தல்
59. பீடத்தின் இணையத்தள மேம்பாட்டு பிரிவு கற்புல செவிப்புல பிரிவு ஆகியவற்றினை ஸ்தாபித்தல்
60. சகல விடய சங்கங்களிலும் போட்டிகளையும் திறமைக் காட்சிகளையும் ஏற்பாடு செய்தல்

61. பீடாதிபதியின் பட்டியலை அறிமுகப்படுத்தல்
62. 4 ஆம் வருட இறுதியில் தொழில் சந்தையை ஏற்பாடு செய்தல்
63. தேசிய தேவை மற்றும் பகுத்தறிவு அடிப்படையில் வருடாந்த ஆராய்ச்சி மானியங்களை பகிர்ந்தளித்தல்
64. பீடத்திற்கு ஒதுக்கப்பட்ட சஞ்சிகைகளில் கட்டடாயமாக்கப்பட்ட வெளியீடுகளுக்கு வருடாந்த ஆராய்ச்சி மானியங்களை இணைத்தல்
65. பீட ஆராய்ச்சிக் குழுவின் செயற்பாடுகளை பலமாக்குதல்
66. புகழ் பெற்ற ஆராய்ச்சிகளுக்கு அடையாளம் காணப்பட்ட நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை உருவாக்குதல்.
67. புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு ஏற்ப பாடநெறிகளில் இணைப்புகளை உருவாக்குதலும் ஒருங்கிணைத்தலும்
68. உயர் தரத்திலுள்ள வெளிநாட்டு பல்கலைக்கழகங்களில் இருந்து வருகை தரு புலமையாளர்களை அழைத்தல்
69. சிறந்த நபர்களுடைய சமூகமளித்தல்களை மாதாந்த பொது கருத்தரங்கு தொடர்களை நடாத்துதல்
70. கற்கைநெறிகளுக்காக சிறந்த நபர்களை விருந்தினர்களாகவும் வருகை தரு விரிவுரையாளர்களாகவும் அழைத்தல்
71. மனிதவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்களில் சர்வதேச ஆராய்ச்சி நிகழ்ச்சிகளை உருவாக்குதல்
72. புகழ் பெற்ற இணைந்த ஆராய்ச்சிக் கருத்திட்டங்களுக்கு பீட ஒப்பந்தங்களை.˙.புரிந்துணர்வு ஒப்பபந்தங்களை ஏற்படுத்துதல்
73. கலைக்களுக்கிடையிலான பல்கலைக்கழகங்களுக்கிடையிலான உடனுழைப்பினை (மனிதவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள்) ஆராய்ச்சிகளுக்காக நாடு முழுவதும் உள்ள பீடங்களுடன் தொடர்பை மேம்படுத்தல்
74. பீட அல்லது தனிப்பட்ட துறைகளை அடிப்படையாகக் கொண்டு தேசியத் தேவைக் கேற்ப பல் கோட்பாட்டு ஆராய்ச்சி நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு ஆர்வமுள்ள நிறுவனங்களையும் மற்றும் ஆராய்ச்சியாளர்களையும் உரிய முறையில் ஊக்குவித்தல்
75. பரிந்துரைக்கப்பட்ட எழுத்தாற்றல் அல்லது மற்றும் ஆராய்ச்சிகளில் பயிற்ச்சிப் பட்டறைகளையும் கருத்தரங்குகளையும் நடத்துதல்
76. IELTS, TOFEL, மற்றும் GRE தகுதி ஆகியவற்றை கற்க்க தகுதிகாண் விரிவுரையாளர்களை ஊக்கவித்தல்
77. தொழில் வழிகாட்டல் பிரிவினூடாக பட்டப்பின்படிப்பு சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொண்ட இளம் பணிக்குழுவினருக்கு தொழில் ஆலோசனை சேவையை ஸ்தாபித்தல்
78. பீட ஆலோசனைப் பிரிவை ஸ்தாபித்தல்
79. பீட மாணவர் நலன்புரி நிலையத்தை மேம்படுத்தல்
80. பல்கலைக்கழக கலாசார நிலையத்தினை மேம்படுத்துதல்
81. பட்டப்படிப்பு பாடத்திட்டத்திற்கு உடற் கல்வி அலகினை அறிமுகப்படுத்தல்
82. வழமையான பீட விளையாட்டு நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தல்
83. பீடக் கலைச் சபையின் ஊடாக சங்கீதம், கலை மற்றும் நாடகம் ஆகிய பயிற்ச்சி நிகழ்ச்சிகளை அறிமுகம் செய்தல்
84. துறைகள் / சங்கங்கள் / நிலையங்கள் ஆகியவற்றினூடாக கருத்திட்டங்கள் / CSR சமூக அபிவிருத்திகளை மேற் கொள்ளுதல்
85. பீட உறுப்பினர்களுக்காக பீடத்தின் பாதுகாப்புக் குழு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடாத்துதல் ஆகியவற்றை ஸ்தாபித்தல்
86. அடையாளப் படுத்தப்பட்ட இடங்களில் தீ முன் எச்சரிக்கை மற்றும் தீயணைப்புக் குளாய் ஆகியவற்றினை பொருத்துதல்
87. கணணி ஆய்வு கூடங்கள் மற்றும் சேவர் அறைகள் போன்ற அடையாளப் படுத்தப்பட்ட CCTV நிழல் படக்கருவி / பாதுகாப்பு முறைமைகளை நிறுவுதல்

3.4 பல் மருத்துவ விஞ்ஞானங்கள் பீடம்

(பீடாதிபதி - பேராசிரியர் டப்ளி.எம்.திலகரத்ன)

அறிமுகம்

பேராதனைப் பல்கலைக்கழக பல்மருத்துவ விஞ்ஞானபீடம் (FDS) மற்றும் பல்மருத்துவ (போதனா) வைத்தியசாலையும் கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் நோயாளர் பராமரிப்புக்கு உதவுவதோடு அதன் கட்டிடத்தொகுதிகள் சர்வதேச நியமங்களுக்கு அமைவான நவீன கருவி வசதிகளையும் கொண்டுள்ளது. பல்மருத்துவ விஞ்ஞான பீடமானது நாட்டின் பல்மருத்துவர்களை பயிற்றுவிக்கும் ஒரே நிறுவனமாக காணப்படுவதோடு அதன் 7 கல்வித்துறைகளாக அடிப்படை விஞ்ஞானம், சமூக பல்மருத்துவ சுகாதாரத் துறை, வாய் மருத்துவம்,வாய் மற்றும் தாடைமுக சத்திர சிகிச்சை, வாய் நோயியல்,செயற்கை பல்கட்டுதல், மற்றும் பல் நிரப்பல் துறைகளை கொண்டுள்ளது. பல்மருத்துவ விஞ்ஞான பீடமானது (FDS) வருடாந்தம் 80 பல் மருத்துவர்களை பயிற்றுவிக்கின்றது. பட்டதாரி மாணவர்களை பயிற்றுவிப்பதற்கு மேலதிகமாக பல்மருத்துவ நிபுணர்களைபட்டப்பின் படிப்பு முகாமைத்துவங்களுக்கான மருத்துவ நிறுவகத்துடன் கூட்டிணைந்து பயிற்றுவிக்கவும் ஏனைய உதவி பல்மருத்துவர்களை பயிற்றுவிப்பதும் ஏனைய தொழிற்பாடுகளாக காணப்படுகின்றது. மேலும் பல்மருத்துவ பீடத்தின் (FDS) (போதனா) வைத்தியசாலையானது மூன்றாம் நிலை ஆலோசனை நிலையமாக நோயாளர் பராமரிப்பிற்காக காணப்படுவதோடு அதன் வசதிகளை மருத்துவ பீட மற்றும் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீட மாணவர்களும் அவர்களின் பயிற்சிகளுக்காக பயன்படுத்துகின்றனர். கற்பித்தல் மற்றும் சேவை வழங்கல் நடவடிக்கைகள் தவிர குறிப்பிடத்தக்களவு ஆய்வு செயற்றிட்டங்களும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பங்களிப்புக்களுடன் மேற்கொள்ளப்படுகின்றன. 2017 ஆம் ஆண்டில் இருந்து பட்டப் பாடநெறியானது ஐந்தாண்டுகளுக்கு நீட்டப்பட்டுள்ளது.

அடைவுகள்

- முதலாவதாக உள்வாங்கப்பட்ட (2017/2018) தொகுதி மாணவர்கள் ஐந்துவருட பாடத்திட்டத்திற்கமைவாக ஐந்து வருடத்திற்கான பட்டப்படிப்பு பாடத்திட்டத்தினை 2018 ஜனவரி 30 ஆம் திகதி இலங்கையின் பல் மருத்துவத்தில் ஆரம்பித்தது. மிகவும் குறிப்பிடத்தக்க நிகழ்வாக காணப்படுகின்றது.
- அடிப்படை விஞ்ஞானங்கள் முதலாவது இரண்டாவது அரையாண்டுகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஐந்து வருட பல் மருத்துவ பாடத்திட்டம் வெற்றிகரமாக அமுல்படுத்தப்படுகின்றது. நாம் மேலும் இந்த புதிய பாடத்திட்டத்தினை அமுல்படுத்தப்பட்டதன் பின்னர் பற்றிய பின்னூட்டல்களை அதன் பகுதி சாரரிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கு ஒரு பயிற்சி பட்டறை நடத்தினோம்.
- தடயவியலில் M.Sc பட்டப்பின் படிப்பினை கொண்டு நடாத்துவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு அனுமதி வழங்கியுள்ளது. பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக் குழுவின் தரநிர்ணயக் குழுவினால் வாய் வழி வைத்திய மற்றும் வாய்வழி கதிரியக்க சிகிச்சை ஆகியவற்றில் M.Sc பட்டப்பின்படிப்பு பாடநெறிகளை கற்பிப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளது. வாய்வழி நோயியலில் M.Sc பட்டப்பின்படிப்பினை கற்பிப்பதற்கு பல்கலைக்கழகத்தின் மூதவை அனுமதி வழங்கி அதனை பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக் குழுவின் அனுமதியைப் பெறுவதற்கு அனுப்பப்பட்டுள்ளது.
- சிறிய ரக வாய்வழி சிகிச்சையில் முதுநிலை விஞ்ஞான மானி (MSc) பாடநெறியை பல்கலைக்கழகத்தின் பேரவை கூட்டத்தில் (428) 22.11.2017 அன்று அனுமதி வழங்கியுள்ளது.
- 5 மில்லியன் ரூபா சர்வதேச ரோட்றி கழகத்தினால் புற்றுநோய் விழிப்புணர்வு கருத்திட்டத்திற்கு புற்று நோய் பாதுகாப்பு சேவை நிகழ்ச்சிக்காக பெறப்பட்டது. OMFS, FDS
- செயற்கை முறை பல்வைத்தியத் துறை கல்வியியல் கண்ணொளித் தொடரொன்றினைத் தயாரிப்பதற்கு ஏழு (7) கண்ணொளிகளை பட்டப்படிப்பு மாணவர்களுக்கும் பல்வைத்திய தொழிநுட்பவியலாளர்களுக்கும் கற்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ளன.
- சீரமைப்பு பல்மருத்துவத் துறை 2017 ஆம் ஆண்டு விஷேட சட்டதிட்டங்களுக்கான நோயாளிகளின் செலவை மீட்டுக் கொள்வதற்காக 5,020,729.23 சம்பாதித்துக் கொண்டது.
- DELU உடைய முகப்பு பக்கத்தினை FDS இல் முகப்பு பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளது.(weblink: http://dental.pdn.ac.lk/e-learn1.php).
- பதினைந்து மேசைக் கணணிகள் (1.3 மில்லியன் பெறுமதியானது) பீடாதிபதி/ FDS உடைய வழிகாட்டலிலும்UK இன் உடைய இலங்கை வைத்திய மற்றும் பல்வைத்திய சங்கத்தின் பேராசிரியர். டி. வை. டி சமரவிக்ரம (UK) உடைய உயரிய ஒத்துளைப்புடனும் புதிய கணணி ஆய்வுக்கூடத்திற்கு பெற்றுக் கொள்ளப்பட்டது. 60 மாணவர்களுக்கான புதிய கணணி மேசைகளுக்கான கொள்வனவு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

  DELU சில சுகாதாரக் கல்வி கண்ணொளிகளைத் தயாரித்துள்ளது.

காணொளி நிகழ்ச்சிகள்	ஆசிரியர்கள்
வாய் புற்றுநோயும் மற்றும் பாக்கும்	பேராசிரியர்.டபிளியூ. எம்.திலகரத்ன
தாடை இணைப்புகளும் அதனுடன் கூடிய நோய்களும்	பேராசிரியர். ருவான் ஜெயசிங்க
பாற்பற்கள்	கலாநிதி சந்ர கேரத்
செயற்கைப்பல்களும் அதனை பாவிப்பதற்கான ஆலோசனைகளும்	கலாநிதி விஜிர ஜெயசிங்க கலாநிதி இந்திக்க திலக்குமார
நீங்கிய பற்களுக்கு செயற்கைப்பற்களைப் பொருத்துதல்	கலாநிதி விஜிர ஜெயசிங்க கலாநிதி இந்திக்க திலக்குமார
பல் பாதுகாப்பு	கலாநிதி மானில் பொன்சேகா கலாநிதி கிஷான் எதிரிசிங்க

- பல்வைத்திய விஞ்ஞானங்களின் இலத்திரனியல் கற்கை நெறிகளை நோக்காகக்கொண்டு FDS கல்விசாரா அணி அங்கத்தவர்களுக்கும் மற்றும் மாணவர்களுக்கும் “DENTMOODLE”என்ற பயிற்சிப் பட்டறை நடத்தப்பட்டது.
- சராசரியான எண்ணிக்கையான சத்திரசிகிச்சைகள் 01.01.2017 இலிருந்து 20.12.2017 வரைக்கும் நோயாளிகளுக்கு பிளவுபட்ட உதடுகளையும் மற்றும் தகடுகளையும் திருத்துவது உட்பட சுமார் 200 வரை மேற்கொள்ளப்பட்டன.

ஏனைய நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்களும் மற்றும் ஒப்பந்தங்களும்

- சித்தாலேப, கெட்டிகொட குறூப் குழுமத்துடனும் (HGC) பேராதனைப் பல்கலைக்கழக பல்வைத்திய பீடத்துடனும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. – 23.01.2017
- ஐக்கிய அமெரிக்காவின் ரெம்பில் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. - 23.01.2017
- இந்தியாவின் கூர்க் பல்வைத்திய பாடசாலையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. – 28.07.2018
- வைத்திய பீடத்தின் பல் வைத்திய மற்றும் மயக்கமருந்தியல் நிபுணத்துவ மற்றும் நெருக்கடியான பாதுகாப்பு துறையினதும் வாய்வழி முக என்பு மேற் பல்லுக்கசூரிய சிகிச்சை துறையுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. - 28.12.2017

ஆராய்ச்சி அடைவுகள்

- பேராசிரியர் டபிளியூ எம் திலகரத்ன மற்றும் பேராசிரியர் ஆர்.டி. ஜெயசிங்க ஆகியோர் 2017 க்கான ஜனாதிபதி ஆராய்ச்சி விருதினைப் பெற்றுக் கொண்டனர்.
- பேராசிரியர் டபிளியூ எம் திலகரத்ன அவர்கள் தேசிய கல்வியியல் விஞ்ஞானத்திற்கு அங்கத்தவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்வி அடைவுகள்

கீழே உள்ள உறுப்பினர்கள் பேராசிரியர் தரத்திற்கு பதவியுயர்த்தப்பட்டுள்ளனர்.

- கலாநிதி ஜே. ஏ. எம். எஸ். ஜெயதிலக்க அவர்கள் சிறுபாக உயிரியல் பேராச்சியராக கலாநிதி எச்.ஆர். டி. பீரிஸ் உடலியல் பேராசிரியராகவும் மற்றும் கலாநிதி ஆர். டபிளியூ பல்லெகம உடலியல் பேராசிரியராகவும் பதவியுயர்த்தப்பட்டுள்ளனர்.
- பல புதிய ஆட்சேர்ப்புகள் கல்விசார் அணியினரில் சிரேஸ்ட விரிவுரையாளராக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டார். கலாநிதி கே. எஸ். எம். டி குணவர்த்தன (உயிரியல் இரசாயணப்பிரிவில் உயிரியல் விஞ்ஞானத்துறை), கலாநிதி டி. ஜே. ஏப்பாசிங்க (சமூக பல் வைத்திய அலகின் சமூக பல் வைத்திய சுகாதாரதுறை) மற்றும் தகுதி காண் விரிவுரையாளராக கலாநிதி ஆர்.எம். ஜி. எஸ். கே. ரஸ்னாயக்க (செயற்கை பல் வைத்திய துறை
- கலாநிதி. டபிளியூ. ஏ. எம். யூ. எல். அபயசிங்க – தற்காலிக விரிவுரையாளர் அவர்கள் ஒக்டோபர் 20 ஆம் திகதி 2017 இலிருந்து நவம்பர் 20 ஆம் திகதி 2017 வரைக்கும் தென் கொரியாவின் சேஓயுள்ளில் உள்ள ஜோன்சேஜ பல்வைத்திய பல்கலைக்கழக கல்லூரியின் வாய் வழிப் புற்றுநோய் ஆராய்ச்சி நிறுவகத்தில் நடைபெற்ற புற்றுநோய் ஆராய்ச்சியாளருக்கான ஒரு மாத கால மூலக்கூற்று உயிரியல் பயிற்சி நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.
- வைத்திய கலாநிதி.ஐ. பி. திலக்குமார – சிரேஷ்ட விரிவுரையாளர் பல்வைத்திய துணைப் பயிற்ச்சிப் பாடசாலைக்கு பணிப்பாளராக 2017 ஆம் ஆண்டு நியமிக்கப்பட்டார்.
- வைத்தியக் கலாநிதி ரவி சங்கர் நுட்டாளபட்டி இந்தியாவின் வாய் வழி மற்றும் முக எலும்பு மேற் பல்லுக்குரிய துறையின் சத்திரசிகிச்சையாளர் பல்வைத்தியப் பீடத்தின் வாய் வழி மற்றும் முக

எலும்பு மேற் பல்லுக்குரிய துறையின் வாய் வழிப் புற்றுநோய் சத்திரசிகிச்சை முகாமைத்துவ மீள் கட்டமைப்பு முறைகளில் சான்றிதழ் பாடநெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்தார்.

- கீழ் வரும் துறைகளுக்கு கல்விசாரா அணியின் தொழிநுட்ப அதிகாரிகள் புதிதாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டுள்ளனர்.
  திரு. ஏ. எம். எஸ் அழககோன் - அடிப்படை விஞ்ஞானங்கள்
  திரு. எஸ். ஜி. எஸ். டி. பண்டார – வாய்வழி நோயியல் துறை
  திரு. பீ. எம். ஒபாநாயக்க - வாய்வழி நோயியல் துறை
  திரு பி. ஜி. எஸ். சி குணதிலக - செயற்கைப் பல் வைத்திய துறை
  திருமதி. பீ. எம்.கே. சுனேத்ரா - செயற்கைப் பல் வைத்திய துறை
  திருமதி. பி. எச். எம். குணதிலக - செயற்கைப் பல் வைத்திய துறை
  திருமதி. வை. டி. எஸ். விஜயரத்ன -செயற்கைப் பல் வைத்திய துறை
  திரு. பி. எம். எஸ். குமார – சீரமைப்பு பல் வைத்தித் துறை
- புதிதாக ஆட்சேர்க்கப்பட்ட இரண்டு சுருக்கெழுத்தாளர்கள் துறைகளுக்கு வேலைக்கு கீழ் அமர்த்தப்பட்டனர்.
  திரு. ரிசானி யுனைடின் - பீடாதிபதி காரியாலயம்
  திரு. சஜினி குணதிலக - வாய்வழி நோயியல் துறை
- கீழ் வரும் தொழிநுட்ப அதிகாரிகள் கீழ் வருமாறு பதவியுயர்த்தப்பட்டுள்ளனர்.
  திருமதி. எம். ஆர். னு. எம். சேனநாயக்க – சிரேஸ்ட்ட பதவிநிலை தொழிநுட்ப உத்தியோகத்தர் 2010 யூனில் இருந்து பதவியுயர்த்தப்பட்டார்.திரு ரீ. எம்.பி. வி. தென்னக்கோன் - பதவிநிலை தொழிநுட்ப உத்தியோகஸ்தர் தரம் I க்கு ஏப்ரல் 16 ஆம் திகதி 2015 இல் இருந்து பதவியுயர்த்தப்பட்டார். மற்றும் திருமதி.எஸ். எச். கே. வீரசேகர தொழிநுட்ப உத்தியோகத்தர் ஏ பிரிவிற்கு 2016 இல் இருந்து பதவியுயர்த்தப்பட்டார்.
- கீழ் வரும் எழுது வினைஞர் பணிக்குழுவினர் கீழ் வருமாறு பதவியுயர்த்தப்பட்டுள்ளனர்.
  திரு ஏ. எம். ரீ. விஜயரத்ன எழுதுவினைஞர் சேவையில் சிரேஸ்ட பதவிநிலை உதவியாளராக 2016 மார்ச் 1 ஆம் திகதியில் இருந்து பதவியுயர்த்தப்பட அதே வேளை மீண்டும் திருமதி கே. ஏ. எஸ். என். டீ. குணவர்த்தன - எழுது வினைஞர்சேவையில் பதவிநிலை அலுவலகராக 2016 ஒக்டோபர் 1 ஆம் திகதியில் இருந்து பதவியுயர்த்தப்பட்டார்.

நூல் வெளியீடுகள்

- வைத்திய கலாநிதி எச். எம். ரி. டி. கே. கேரத் “சுவ கெகுளு” என்ற தலைப்பிலான நூலை வெளியிட்டுள்ளார்.
- பேராசிரியர் டபிளியூ. எம்.திலகரத்ன “கழுத்திலும் தலையிலும் கட்டிகளின் பாகுபாடு WHO என்ற நூலை அன்பளிப்பு செய்தார்.
- வெளியிடப்பட்ட நூல் - ஒத்தோடொன்ரிக் நோய் கண்டறிதல் -இரண்டாம் பதிப்பு ISBN 978-955-98549-1-3
- வைத்திய கலாநிதிஈ.எம்.யூ.சி. கே. கேரத் “பல் ஒன்று கழன்று விட்டது” என்ற நூலை வெளியிட்டார்.

அன்பளிப்புகள்

- கீழ் வரும் நூல்கள் /சஞ்சிகைகள் பல்மருத்துவ நூலகத்துக்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.

இல	தலைப்பு	அன்பளிப்பு செய்தவர்கள்
01	பல் மருத்துவத்தில் வாட் - 2017 (7 ஆவது பதிப்பு)	வைத்திய கலாநிதி அன்ரு சட்லர்
02	மருத்துவம் படைக்கும் இழகுத்தன்மை	வைத்திய கலாநிதி உதய ரலபாணவ
03	பல் மருத்துவம் - படங்களுடன் கூடிய வரலாறு	வைத்திய கலாநிதி சீவனி விஜயரத்ன
04	பல் மருத்துவ மேன்பாடு (05 சஞ்சிகைகள்) (செப்டம்பர் ஒக்டோபர் நவம்பர் 2016 மற்றும் ஜனவரி பெப்ரவரி 2017)	வைத்திய கலாநிதி டி.நந்தசோம,UK– 1965 ஆம் தொகுதி பல்மருத்துவ விஞ்ஞானங்கள்
05	சர்வதேச பற்கூல் தடுப்பு மருத்துவ சஞ்சிகை 2008, பல்மருத்துவ நூலகத்திற்கு அன்பளிப்பு செய்யப்பட்டது.	பேராசிரியர் கே.எம். விஜயரத்ன
06	15 கணணிகள் இலத்திரனியல் கற்பித்தல் ஊடாக SLMDA/UK	13 கணணிகள் - ஐக்கிய இராச்சியத்தின் இலங்கை வைத்தியர்கள் சங்கம் மற்றும் 02 கணணிகள் பேராசிரியர் டி. வை. டி.சமரவிக்ரம
07	ஒரு தொகுதி உடலை வெட்டி சோதிக்கும் உபகரணங்கள் அடிப்படை விஞ்ஞானங்களின் உடற் கூற்றியல் பிரிவிற்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.	பேராசிரியர். இக்குஓ கயோமா, ஜப்பானின் நைக்காட்டாவில் உள்ள நிப்போன் பல் வைத்தியப் பல்கலைக்கழகத்தில் வாழ்க்கைப் பல்மருத்துவப் பாடசாலை

இல	தலைப்பு	அன்பளிப்பு செய்தவர்கள்
08	ஒரு விஞ்ஞான ரிதியான ஆராய்ச்சிக் கட்டுரையை எவ்வாறு எழுதுவது மற்றும் வெளியிடுவது என்ற நூலினை பல் மருத்துவ நூலகத்திற்கு அன்பளிப்பு செய்தார்.	வைத்திய கலாநிதி. பார்பாரா கஸ்டெல்
09	பல் மருத்துவர்களின் வாட்டு என்ற நூலினை பல் மருத்துவ நூலகத்திற்கு வழங்கினார்.	வைத்திய கலாநிதி அன்ரு சட்லர்
10	ரூபா. 750,000.00 பெறுமதியான 12 எண்டோமோட்டஸ் மற்றும் எண்டோ டொண்டிக்ஸ் கைத்துண்டுகள்	வைத்திய கலாநிதி சர்பில் டிஜெமல், ஐக்கிய ராச்சியத்தில் கிங்ஸ் கல்லூரி வைத்தியசாலையின் பல் சீரமைப்பு துறையின் வெளிவாரிப் பரீட்சகர்
11	“தத்த கட்ட கென தத்த யுத்து தே” என்ற நூலினை பல் மருத்துவ நூலகத்திற்கு அன்பளிப்பு செய்தார்.	வைத்திய கலாநிதி இரத்னகுமார திசாநாயக்க, ஒழுங்கற்ற பற்களை சரிசெய்யும் நிபுணர்களின் ஆலோசகர்

பவள விழா வைபவம்

- பேராதனை பல்கலைக்கழக பவள விழா வைபவத்திற்கு கீழ்வரும் நிகழ்ச்சிகள் பல் மருத்துவங்கள் விஞ்ஞானங்கள் பீடத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. 2017 ஜனவரி 10 ஆம் திகதி CROC என்றபுதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டும் விழா இடம் பெற்றது. பேராசிரியர் உப்பில் பி. திசாநாயக்க, உபவேந்தர் பேராதனைப் பல்கலைக்கழகம், பேராசிரியர் ஆர்.எல். விஜயவர்த்தன பிரதி உபவேந்தர் பேராதனைப் பல்கலைக்கழகம், மற்றும் பேராசிரியர் டபிளியூ. எம். திலகரத்ன பீடாதிபதி பல்மருத்துவ விஞ்ஞானங்கள் பீடம் ஆகிய பேர் அடிக்கல்களை நாட்டினர். பேராசிரியர் ருவான் ஜெயசிங்க, பணிப்பாளர் சீ ஆர் ஒ சி ஏனைய பீடங்களின் பீடாதிபதிகள் மற்றும் கல்விசார் மற்றும் நிர்வாகத்துறை பணிக்குழு உறுப்பினர்கள் ஆகியோர் இந்த குறிப்பிடத்தக்க நிகழ்வில் பங்கு பற்றினர்.

- பேராதனை பல்கலைக்கழகத்தில் பவள விழாவுடன் இணைந்த அடுத்த நிகழ்ச்சியாக உலக வாய் வழி சுகாதார தினம் 2017 உடைய பிரதான நிகழ்ச்சி 2017 மார்ச் 20 ஆம் திகதி பீட வளாகத்தில் இடம் பெற்றது. “இலங்கையில் வாய் வழி மருத்துவம் நாம் எங்கே என்ற தலைப்பில் பேராசிரியர் ருவான் ஜெயசிங்க அதிதி விரிவுரையை நிகழ்த்தினார். இந்த நிகழ்ச்சி பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பவள விழா பீடக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.உபவேந்தருடைய பவள விழா வைபவத்தின் புகழுரை விரிவுரை தொடர் கலைக் கூடத்தில் சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார நிலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி திலிப் டி சில்வா அவரால் 2017 மே 16 ஆம் திகதி பல்மருத்துவ பீடத்தின் பவள விழா வைபோவத்தில் இடம் பெற்றது.

மாநாடுகள் பயிற்ச்சிப் பட்டறைகள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள்

- “சிகிச்சை முறைக்கான வைபோவத்தினை” இறுதியாண்டுப் பகுதி I பகுதி IIபட்டப்படிப்பு மாணவர்கள் பேராதனை பல்கலைக்கழகத்தின் பிரதி உபவேந்தரான ஆர். எல். விஜயவீரவின் பங்கு பற்றுதல்களுடன் CPC மண்டபத்தில் பல்மருத்துவ பீட வளாகத்தில் காலை எட்டு மணிக்கு 2017.01.30 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. துறைத் தலைவர்கள், கல்விசார் ஊழியர்கள், மற்றும் சிகிச்சை மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

- 2 ஆவது இலங்கை ஜப்பான் பேரியலான உடற்கூற்று பயிற்சிப் பட்டறை அடிப்படை விஞ்ஞானங்கள் துறையில் உடற் கூற்றுப் பிரிவில் 20117 பெப்ரவரி 13 – 15 வரை நடைபெற்றது. நான்கு ஜப்பானியப் பேரியலான உடற் கூற்று நிபுணர்கள் இந்த பயிற்சிப் பட்டறை நடத்தியதுடன் மேலும் அதில் 20 சிகிச்சையாளர்களும் பட்டப்பின்படிப்பு மாணவர்களும் கலந்து கொண்டனர்.

- தர உத்தரவாதக் கோட்பாட்டில் பல் மருத்துவ பீட கல்விசார் ஊழியர்களுக்கும் மற்றும் கல்விசார் அணிக் குழுவினர்களுக்கும் ஓர் விழிப்புணர்வு நிகழ்ச்சி 2017 மார்ச் மாதம் 30 ஆம் திகதி நடைபெற்றது. பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக் குழுவின் கீழ் உள்ள சமபங்கு/சமத்துவத்துக்கான நிறுவனம் இந்த நிறுவனத்திற்கான பணிப்பாளர் உமாகுாரசுவாமி கல்விப் பல்கலைக்கழகத்தில் நுண்கலைத் துறையின் பேராசிரியர் பி. டி. நந்த தேவா ஆகியோார். இந்த நிகழ்ச்சியின் வளவாளர்களாக கடமையாற்றினர்.

- மருத்துவ விசாரணைகள் என்ற தலைப்பினை பயிற்ச்சிப் பட்டறை ஒன்று நெறிமுறைகள் மிளாய்வு குழுவினால் 2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முற்பகல் 11 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வைத்தியத் துறையைச் சேர்ந்த பேராசிரியர் பீ. வி. ஆர் குமாரசிறி வளவாளர்களாக கடமையாற்றினர்.

- கீழே காணப்படும் பீடத்தின் பயிற்ச்சிப் பட்டறைகள் ஆலோசனைகள் (CCGU) மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவினால் பல் வைத்தியத்துறை மாணவர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

  - நேர முகாமைத்துவம் என்ற தலைப்பில் இறுதியாண்டு பகுதி I பகுதி II மாணவர்களுக்கு கலாநிதி ஜெயலத் எதிரி சிங்கவால் நடாத்தப்பட்டது.
  - வஸ்துக்களை தவறாகப் பயன்படுத்தல் - எவ்வளவு அதிகம் என்ற தலைப்பில் பல்மருத்துவத் துறையில் இறுதியாண்டு பகுதி பகுதி 1 மற்றும் பகுதி 3 மாணவர்களுக்கு கலாநிதி மெச்சிரி கேரத்தினால் நடாத்தப்பட்டது.
  - வாழ்க்கைக்கு சரியென்று சொல்லுங்கள் என்ற தலைப்பில் சகல பல் மருத்துவ மாணவர்களுக்கும் செல்வி சிபில் பத்மசிறி சிபில் பத்மசிறி அவர்களால் பயிற்ச்சிப்பட்டறை ஒன்று நடாத்தப்பட்டது.

- ஆலோசனைகள் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவினால் (CCGU) SWOT பகுப்பாய்வில் பயிற்ச்சிப் பட்டறை தொடரொன்று சகல மாணவ ஆலோசகர்களுக்கும் (வைத்திய கலாநிதி எச். எம். ரி. டி. கே. கேரத், கலாநிதி பி. எம் எச்.எஸ்.கே. பன்னெகெக்க வைத்திய கலாநிதி வி.எஸ்.என். விதானாராச்சி கலாநிதி ஆர் எம். ஜெயசிங்க) கலாநிதி என்.சி. வணிகசூரிய மற்றும் ஜே. ஏ.எம். எஸ். ஜெயதிலக சகல பல் வைத்திய மாணவர்களுக்கும் நடாத்தப்பட்டது.

- “நெறிகள் என்ற தலைப்பில்” ஆலோசனைகள் மற்றும் தொழில் வழிகாட்டல் பிரிவினால் பயிற்ச்சிப்பட்டறை தொடர் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு வைத்திய கலாநிதி எச். எம். ரி. டி. கே. கேரத், மற்றும் திருமதி சாந்தினி குரே ஆகியோரினால் நடாத்தப்பட்டது

- நான்கு தொடர்ச்சியான பயிற்ச்சிப் பட்டறைகள் “DNTMOODLE ஐ எவ்வாறு பயன்படுத்துவது” என்ற தலைப்பில் பல் மருத்துவ விஞ்ஞானங்கள் CAL அறையில் 13/6/2012 4/7/2012 வரைக்கும் பிற்பகல் ஒரு மணியளவில் இருந்து பிற்பகல் 4 மணி வரைக்கும் ஒவ்வொரு செவ்வாய் கிழமைகளிலும் நடாத்தப்பட்டது. பல்மருத்துவ விஞ்ஞான கற்கை நெறிகளை இலத்திரனியல் கற்கைகளில் ஊக்குவிப்பது இந்த பயிற்ச்சிப் பட்டறைகளின் நோக்கமாகும். இந்த பயிற்ச்சிப் பட்டறைகளில் சகல பல் மருத்துவ விஞ்ஞானங்கள் பீடத்தின் துறைகளில் இருந்தும் 13 கல்விசாரா அணி உறுப்பினர்கள் LMS (MOODLE)ஐப் பயன்படுத்துவதில்பயிற்சியைப் பெற்றுக் கொண்டனர். பங்கு பற்றுனர்களுக்கான சான்றிதழ்கள் பீடசபையறையில் 2017 ஜுலை 4 ஆம் திகதி பல் மருத்துவ விஞ்ஞானங்கள் பீடபீடாதிபதி பேராசிரியர் டபிளியூ. யூ. எம். திலகரத்ன அவர்களால் வழங்குவிக்கப்பட்டன. இந்த பயிற்ச்சிப் பட்டறைகள் பேராசிரியர் சாந்த ஜெயவர்த்தன பல் மருத்துவ விஞ்ஞானங்கள் பீடத்தின் கூட்டுனர், இலத்திரனியல் கற்பித்தல் மற்றும் நூலக குழுவால் ஒழுங்கு செய்யப்பட்டு திரு. தம்மிக்க இதல கெதர வளவாளர்களாக செயற்பட்டார்.

- திறந்த நாள் பல் மருத்துவ கண்காட்சி பீட வைரவிழாக் குழுவினால் தலைமை தாங்கப்பட்டு வைத்திய கலாநிதி BGTL நந்தசேனவால் ஏற்பாடு செய்யப்பட்டு 2017 ஜுலை 22 மற்றும் 23 ஆம் திகதிகளில் நடாத்தப்பட்டது.

- ஆராய்ச்சி விதிகள், வெளியீட்டு விதிகள் மற்றும் தரவு முகாமைத்துவம் என்ற தலைப்புகளில் பல் மருத்துவ விஞ்ஞானங்கள் பீடத்தின், பீட ஆராய்ச்சி மற்றும் உயர் பட்டப்படிப்புக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டு 2017 ஒக்டோபர் 31 ஆம் திகதி பயிற்ச்சிப் பட்டறை ஒன்று நடாத்தப்பட்டது. விவசாயப் பீடத்தின் அறுவடை விஞ்ஞானத் துறையைச் சேர்ந்த பேராசிரியர் எஸ். சமித்த, பல்மருத்து விஞ்ஞானங்கள் பீடத்தைச் சேர்ந்த பேராசிரியர் எல் ஏக்கநாயக்கா, பேராசிரியர் டபிளியூ எம். திலகரத்ன ஆகியோர் பயிற்சிப் பட்டறைக்கு வளவாளராக காணப்பட்டனர். இதில் பீடத்தில் கல்விசார் அணியினர், தற்காலிக விரிவுரையாளர்கள்,மற்றும் பட்டப்பின் படிப்பு மாணவர்கள் ஆகியோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

- தர உறுதி விடயங்களும் மற்றும் பாடத்திட்ட மீளாய்வு செயற்பாடுகளுக்கு கல்விசாரா அணியினரின் பங்களிப்பு என்ற தலைப்பிலான விழிப்புணர்வு நிகழ்ச்சியொன்று பேராசிரியர் பிரசாத் சேதுங்க வினால் 2017 நவம்பர் 9ம் திகதி நடாத்தப்பட்டது.

- பல் மருத்துவ விஞ்ஞானங்கள் பீடத்திற்கு 2016/2017 தொகுதி புதிய மாணவர்களுக்கான வரவேற்ப்பு வைபவம் பேராதனை பல்கலைக்கழக உபவேந்தர், ஏனைய பீடங்களின் பீடாதிபதிகள், நிர்வாக உத்தியோகத்தர்கள் பல் மருத்துவ விஞ்ஞானங்கள் பீடத்தின் கல்விசார் அணியினர், புதியமாணவர்களும் அவர்களது பெற்றோரும் ஆகியோரின் சமூகமளிப்புடன் பல் மருத்துவ விஞ்ஞானங்கள் பீடத்தின் CPC மண்டபத்தில்2017 நவம்பர் 14 ஆம் திகதி நடைபெற்றது.

- வெவ்வேறு நாடுகளில் உள்ள வேறுபட்ட பல் மருத்துவ பாடசாலைகளின் நீலப் பதிவுகளின் மதிப்பீடுகள் மற்றும் மதிப்பீடுகளுடன் தொடர்புடைய வெவ்வேறு அம்சங்கள் என்ற தலைப்பில் பேராசிரியர் DYD சமர விக்ரம. 2017 நவம்பர் 7 ஆம் மற்றும் 9 ஆம் திகதிகளின் இரு பயிற்சிப் பட்டறைகளை நடத்தினார்.

- பாடத்திட்ட பயிற்ச்சிப் பட்டறைகளின் அடிப்படை விஞ்ஞானங்களின் விஞ்ஞானிகளின் பங்காளர்களினால் பல் மருத்துவ விஞ்ஞானங்கள் பீடத்தில் 2017 நவம்பர் 23 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

தோல்விகளும் சரிப்படுத்துதலும்

- கட்புல – செவிப்புல கலையகம் முடிவுறுத்தப்படவில்லை. பீடாதிபதி/FDS ஊடாக உபவேந்தர் காரியாலயத்திற்கு தற்கால வரவு செலவுத்திட்டம் சமர்பிக்கப்பட்டிருந்த பொழுதிலும் அது வெற்றியளிக்கப் படவில்லை.
- DELU முகப்பக்கம் ஆரம்ப வடிவம் தயாரிக்கப்பட்டிருந்த பொழுதிலும் அதற்கு இன்னும் விருத்தி தேவைப்படுவதாக காணப்படுகின்றது.
- ஆய்வு வெளியீடு போதுமானதாக இல்லை.
- பல்மருத்துவ MOODLE பயன்பாடு திருப்தியளிப்பதாக இல்லை.

எதிர்காலத் திட்டங்கள்

- ஐந்தாண்டு கலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.
- தற்போதைய கலைத்திட்டம் மேம்படுத்தப்பட்டது
- பீடத்தின் நிர்வாக செயற்பாடு சீராக்கப்பட்டது.
- மாணவர், நோயாளர்களின் தரவுத் தளம் ஒன்று வடிவமைக்கப்பட்டுள்ளது.
- திறன் ஆய்வு கூடம் மேம்படுத்தப்பட்டது.
- இலத்திரனியல் கற்கை ஆய்வுகூடம், வாசிகசாலை என்பன தாபிக்கப்பட்டன.
- வாய்ப்புற்று நோய் ஆய்வு நிலையத்தின் (CROC) நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளது.
- விஞ்ஞான முதுமானிப் பாடநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது.
- வாய்ப்புற்று நோய் ஆய்வு நிலையம் (CROC), ஏனைய புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் அனுசரணையுடன் ஆய்வு நடவடிக்கைகளை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- மாணவர் உணவகத்தை விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.
- DATS கட்டிட நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளது.
- கேட்போர் கூட நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளது.
- பீடொன்ரிட்க் பிரிவுடன் இணைந்து குழந்தைகள் நோயாளிகள் பகுதி தணிப்பு பிரிவு ஒன்றை ஆரம்பித்தல்.
- சிறு சத்திர சிகிச்சைக் கூடத்தில் பொதுவான உணர்விழக்கச் செய்தலில் சிறு சத்திர சிகிச்சை விதிமுறைகள் ஆரம்பிக்கப்பட இருக்கிறது.
- உயர் சார்புநிலை அலகு ஒன்றுக்கு (HDU) பல் வைத்திய வாட்டில் ‘‘கண்காணிக்கும் கட்டில்’’ மேன்படுத்தப்படவுள்ளது.
- சரியானதொரு ‘‘உணர்விழக்கும் சிகிச்சையகம் ஆரம்பிக்கப்படவுள்ளது.
- 2 ஆம் வருட பல்வைத்தியப் பீட மாணவர்களுக்காக சிகிச்சையக வேலைப்பாடுகளுக்கான கையேடொன்று தயாரிக்கப்படவுள்ளது. இன்பிலான்ட் செயற்கை உறுப்புகளைப் பொருத்தும் சிகிச்சைகளில் ஈடுபடுவதற்கு உதவியாக துறைசார் அபிவிருத்திகளை விஸ்தரிக்க வேண்டியுள்ளது.
- எண்டோ டொன்டிக்ஸ் முதுநிலை விஞ்ஞானமானி பாடநெறியை உருவாக்க வேண்டி உள்ளது.DELU வெளியீடுகளுக்கான விதிமுறைகளை உருவாக்க வேண்டியுள்ளது.
- DELU க்கான டிஜிரல் தரவுகளை உருவாக்கி அதனை பல்வைத்திய விஞ்ஞானங்கள் பீட முகப்பக்கத்தில் வெளியிடப்பட உள்ளது.
- கட்புல செவிப்புல DELU காரியாலயத்தில் கணணி ஆய்வு கூடத்தை மேன்படுத்த வேண்டியுள்ளது. புன்னகைக்கும் பயிற்சிகள் திட்டம் மற்றும் பேச்சு நோய் நீக்கும் பிரிவு என்பன அலுவலக கட்டிடத் தொகுதிக்கான வடிவமைப்புக்கும் நிர்மானத்திற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.
- அதனை விட 2017 ஆம் ஆண்டில் கருத்திட்டங்களின் நோக்கங்களை அதிகரித்து சிகிச்சைகளின் எண்ணிக்கையை ஒப்பீட்டளவில் அதிகரிக்கப்படவுள்ளது.
- ‘‘நலனறியும்’’அழகு ஸ்தாபிக்கப்படவுள்ளது.

3.5 பொறியியல் பீடம்

(பீடாதிபதி - பேராசிரியர் எல். ராஜபக்ச)

அறிமுகம்

பொறியியல் பீடம் தனது வழமையான கல்வி நடவடிக்கையை மேற்கொண்டு 400 பொறியியலாளர் அடங்கிய பட்டதாரிகள் குழுவினை உருவாக்கிய அதே வேளையில் இந்த துறையில் பொறியியல் சிவில் பொறியியல், மின்சார மற்றும் மின்னியல் பொறியியல், கணினி பொறியியல், உற்பத்திப் பொறியியல், இயந்திர கைவினைஞர் பொறியியல் மற்றும் இரசாயன மற்றும் செயலாக்கப் பொறியியல் ஆகியன அடங்கியிருக்கின்றன. பட்டப்பின் படிப்பு கற்கையினைப் பொறுத்த மட்டில் மேலும் சில முதுமாணி கற்கை நெறிகளை பீடம் ஆரம்பித்ததோடு மொத்த வழமையான பட்டப் பின் படிப்பு கற்கை நெறிகள்12 ஆக அதிகரிக்கப்பட்டன.

கடந்த வருடம் போலவே உள்வாங்கப்பட்ட E/16 குழுவிற்கான மாணவர் அனுமதியாகிய 415 எனும் எண்ணிக்கை கடந்த சில வருடங்களைப் போன்றே ஒப்பந்தப்படி கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டிருந்ததுடன் நாட்டிலுள்ள அனைத்து பொறியியல் பீடங்களிலும் இப்பீடமே முதலில் கல்வியியல் கற்கைநெறியினை ஆரம்பித்தது.

அடைவுகள்

வொசிங்டன் ஒப்பந்த அதிகாரம் மற்றும் பேராதனை பல்கலைக்கழக பொறியியல் பீடத்தினால் வழங்கப்படுகின்ற Bsc Eng பட்டத்திற்கான சர்வதேச அங்கீகாரம் ஆகியன கிடைக்கப்பெற்ற பின்னர் இரசாயன மற்றும் செயலாக்கப் பொறியியல் துறை மற்றும் இயந்திர கைவினைஞர் பொறியியல் துறைஆகிய இரு துறைகள் கடந்த ஆண்டில் பட்டப்படிப்பு கற்கைநெறி தொடர்பான மீளாய்வினை வெற்றிகரமாக நடாத்தியிருந்தது. முன்னைய தயாரிப்பு பொறியியல் துறை (தற்பொழுது தயாரிப்பு மற்றும் கைத்தொழில் பொறியியல் துறை என அடையாளம் காணப்பட்ட) அங்கிகாரத்துக்கு எதிர்பார்க்கின்றது.
20 பீடத்தினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட பல புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் பல்கலைக்கழகம் கைச்சாத்திட்டதுடன் சீனக் கல்வித் துறை விஞ்ஞானங்கள் மற்றும் நீர் வழங்கல் சபை ஆகியவற்றுக்கிடையில் கைச்சாத்திடப்பட்ட பரிந்துரைக்கப்பட்டுள்ள நீர் ஆராய்ச்சி ஆய்வுகூடம் தொடர்பான இரு ஒப்பந்தங்களும் தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றதோடு அதற்கான அடிக்கல் நாட்டு விழா இடம் பெற்றுள்ளது. அத்தோடு கடந்த வருடத்திற்கான பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொது பட்டமளிப்பு விழாவினையும் பீடம் வெற்றிகரமாக ஏற்பாடு செய்திருந்தது. CPD நிகழ்ச்சிகள் அடங்கலாக உள்நாட்டுக் கைத்தொழில் துறைக்காக பீடத்தினால் வழங்கப்பட்ட பல்வேறு சேவைகள் காரணமாக பீட – கைத்தொழில் உறவுகள் வளப்படுத்தப்பட்டன. இலங்கை பொறியியலாளர் நிறுவகம் (IELS)மற்றும் பொறியியல் வடிவமைப்பு நிலையம் (EDC) ஆகிய அமைப்புகளுடன் இணைந்து நடாத்தப்பட்ட கருத்தரங்குகள் அரச சேவையில் உள்ள தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் க. பொ.த. (உ/த) கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பயிற்ச்சி நிகழ்ச்சிகளை நடாத்தியமை EDCஉடைய முக்கிய இரு நிகழ்ச்சிகளாக கருதப்படுகின்றது.
கைத்தொழிலுடன் உடனுளைப்பு ஆராய்ச்சி பலத்தினை நோக்கி, பீடமானது கீழ் வரும் நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள்/நிறுவகங்கள் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை கைசாத்திட்டுள்ளது.

i. இலங்கை ரெலிகொம்
ii. LTL கோல்டிங்(பிரைவேட்) லிமிரட்
iii. கொரியாவின் கடல் சார்ந்தமற்றும் சமூத்திர பல்கலைக்கழகம் - கொரியா
iv. ஒவ்லு பல்கலைக்கழகம், பின்லாந்து சர்வதேச இரட்டைப் பட்டப் படிப்புக்கான முதுநிலைமானிக் கற்கைநெறி
v. ப்ராசோவ்வின் ரான்சில்வேனியா பல்கலைக்கழகம் - ரொமேனியா, நங்யங் தொழிநுட்ப பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு உடன்படிக்கை

பீடமானது ஒரு உண்மையான வெளியீடுகளின் அடிப்படையை நோக்கி முயற்சிப்பதுடன் மாணவர்களுடைய கல்வி நெறிகளை மையப்படுத்தி /வழங்குகின்றது. அதனடிப்படையில் நீண்டகாலம் பொறுக்கப்பட்ட கற்கை சூழல் மற்றும் கருத்திட்டங்கள் விருத்தியான சேவைகள் கடந்த 5 – 6 ஆண்டுகளுக்கு மேலாக நேரடியாக பங்களிப்பு செய்வதுடன் மேலும் மறைமுகமாகவும் தரமான மற்றும் தரநிலை உடைய கல்வி நடவடிக்கைகள் வழங்கப்படுகின்றது. இந்த திட்டத்திற்கு அமைவாக, பீடமானது இரண்டு முக்கியமான நான்கு அடுக்கு மாடிக் கட்டிடங்களை நிர்மானிக்க ஆரம்பித்ததுடன் அதன் பிரதான திட்டப்படம் அமைச்சு குழுவின் அங்கிகாரத்தைப் பெற்று அது கீழ்வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

i.) பீடத்தின் பட்டப்பின்படிப்பு கட்டிடம் அமைப்பதற்கு, கணணி நிலையம், கைத்தொழில் பயிற்சி மற்றும் தொழில் வழி காட்டல் பிரிவு/அலகு, கணித பொறியியல் துறை மற்றும் கணித முகாமைத்துவ துறை
ii.) இயந்திர பொறியியல் துறைக் கட்டிடம். கணணி விஞ்ஞானத்துறை விஸ்தரிப்பானது முடிவுக்கு கொண்டு வரப்பட்டு மேலும் கையளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

கைத்தொழில் பின்னூட்டலை அடிப்படையாகக் கொண்டு மனித வள அபிவிருத்தி மற்றும் மாணவர்களுக்கான தொழில் வழி காட்டல் விதிமுறைகள் ஆகியன பெறப்பட்டு 2017 இல் அதிக கவனம் செலுத்தப்பட்டு வழமையான பருவ நேரசூசியில் குறித்த நேரம் அளவு ஒதுக்குவதற்கு இடமளிக்கப்பட்டு அதே போன்று பணிக்குழுவை தயார்படுத்தும் முகமாக TOT நிகழ்ச்சித் திட்டங்களை தொழில் வழி காட்டலிற்கு உட்படுத்தப்படுகின்றது. சில தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்காக கைத்தொழில் பயிற்சிகளுக்கு வெளிநாட்டு நிறுவனங்களில் /வசதிகள் பெற்றுக் கொண்டதினை (6 மாத காலப்பகுதிகள் வரைக்கும்) கருத்தில் கொள்ளப்படுவது பீடமும் ITCGU அடைந்து கொண்ட முக்கியதொரு வெற்றியாக கருதப்படுகின்றது.

கற்றல் சூழலில் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் ஊழியர்களினால் வழங்கப்பட்ட ஊக்குவிப்புக்கள் ஆகியன காரணமாக அதிகமான மாணவர்கள் தமது இறுதி ஆண்டில் நடைமுறை சார்ந்த முக்கியமான ஆய்வுத் திட்டங்களை நடாத்தினர். இத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு கணினி பொறியியல் திணைக்களம் கொழும்பில் ஒரு நாள் கலைநிகழ்வுகளுடன் கூடிய தொழில் சந்தையொன்றினையும் உற்பத்தி பொறியியல் திணைக்களம் ஒரு நாள் திட்டக் கண்காட்சியுடன் கூடிய கருத்தரங்கொன்றினையும் மின்சார மற்றும் மின்னியல் பொறியியல் திணைக்களம் ஒரு நாள் திட்டக் கண்காட்சியுடன் கூடிய கருத்தரங்கொன்றினையும் நடாத்தின. மாணவர்களது ஆக்கங்களை சமூகத்திற்கு எடுத்துக் காட்டிய இவ்வனைத்து நிகழ்வுகளும் மிகவும் வெற்றிகரமாக அமைந்ததுடன் இத் துறையிலிருந்து வினைத்திறன் மிக்க பின்னூட்டல்களைப் பெற்றுத்தரும் வகையில் அமைந்திருந்தன.

பீடம் மூன்று உலக நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச மாநாடு / கருத்தரங்கு /பயிற்சிப் பட்டறை ஆகியவற்றை நடத்தின. அவையாவன

i. போக்குவரத்து நிகழ்வுகளினுடைய சர்வதேச மாநாடு –ISTP 28, ஜப்பானின் வெப்ப திரவ பொறியியல் பசுபிக் நிலையத்தினால் வழங்கப்பபட்டது.
ii. பெரியதரவு பகுப்பாய்வு : அண்மையப் போக்கு மற்றும் நடைமுறைகள் - இந்தியாவின் அழகாபாத் IIIT உடனுழைப்புடன் கூட்டாக ஏற்பாடு செய்யப்பட்டது.
iii. கைத்தொழில் மற்றும் தகவல் முறைமையில் 12 ஆவது சர்வதேச மாநாடு (ICIIS) IEEE இன் உடனுழைப்புடன் நடத்தப்பபட்டது.

இவை எல்லாம் நல்லதொரு சர்வதேச பரஸ்பரத் தொடர்புகளையும் ஆராய்ச்சி தேடல்களை பரப்புதல்களையும் / பரிமாற்றங்களையும் நோக்காக கொண்டிருந்தன.

எதிர்காலத் திட்டங்கள்

1.2 மில்லியன் ரூபாவை விஞ்சிய முதலீட்டுடன், பூர்த்தியாக்கப்பட்ட பெரும்பாக மூலவள, கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக பீடமானது வெளியீடுகளை அமுல்படுத்துவதற்கு அடிப்படை வினியோக முறைமை திருப்திகரமான மட்டத்திற்கு தற்போது தயாராக உள்ளது. ஒரு போக்குவரத்து நெருக்கடியை ஏற்படுத்தும் குறுகிய பாதை தடையுற்ற சிபாரிசுகளை அமுல்படுத்தலை உருவாக்கி வொசிங்டனில் இசைவாக குறைந்தளவு பணிக்குழு, கடந்த சில வருடங்களுக்குள் அடையாளப்படுத்தப்பட்டுக் கொண்டும் 30 க்கும் மேற்பட்ட தகைமை உடைய பணிக்குழுவினை ஆட்சேர்த்துக் கொள்ளப்படுவதன் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. மேற்படி சேவைகளில் விருத்திகள் மற்றும் மனித வளங்கள், தனிப்பட்ட துறைகள் தீவிரமாக கவனம் செலுத்தி அவர்களுடைய பாடத்திட்டங்களின் மீளாய்வுகளை அறிந்து கொள்ளலாகும். இதன் பெறுபேறாக பீடமானது முழுவதும் பாடத்திட்ட மீளாய்வில் ஈடுபடுத்திக் கொள்வதற்கு அதன்மூலம் நிபுணர்களின் அபிப்பிராயம் இணைக்கப்பட்டு வொசிங்டன் இசைவுக்கு மற்றும் IESL, எமது பாடத்திட்டங்களையும் மூல வளங்களையும் மதிப்பீடு செய்வதற்கு பீடத்திற்கு விஜயம் செய்வோர். அதிகரித்துள்ளனர்.

இவ்வகையில் மாணவர்களது செயற்றிறன் மற்றும் ஆசிரியர்கள் மாணவர்களது பின்னூட்டல்கள் என்பனவற்றைக் கருத்திற் கொண்டு முதலாம் வருட பாடவிதானம் மற்றும் அதன் முன்வைப்பினை அவதானிப்பதற்கான பீட சபையினால் அனுமதிக்கப்பட்ட விசேட சபையாகிய பொது கற்கை நெறிக்கான கற்கை சபையானது (BoSGP) பீடத்தின் தரம், மேன்னிலை, முன்வைத்தல் மற்றும் கற்பித்தல் அணுகுமுறைகள் ஆகியன தொடர்பில் முதலாம் வருடத்தின் பட்டப்படிப்பு கற்கைநெறியினை வெகுவாக முன்னேற்றுவதற்கு 2017 இல் உறுதுணையாகவிருந்தது.BoSGP இன் வகிபங்கினை வலுப்படுத்துவதற்கும் தனி துறைகளினால் வழங்கப்படுகின்ற விசேட கற்கை நெறிகளின் அவ்வாறான தன்மையின் துறை ரீதியிலான நடவடிக்கைகளை 2018 அறிமுகப்படுத்துவதற்கும் பின்னூட்டல்களை WA குழுவில் பெறுவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும் பொறியியல் முகாமைத்துவத் திணைக்களமானது புதிதாக நியமிக்கப்பட்ட கல்விசார் பணிக்குழுவுடன் இணைந்து பல்வேறு விசேட துறைகளின் கீழ் தேவையான பொதுவான பாடங்களை அறிமுகம் செய்வதற்கும் ஒவ்வொரு விசேட துறையின் கீழ் வழங்கப்படுகின்ற பொதுத் தெரிவுகளை வகைப்படுத்துவதில் பங்கெடுப்பதற்கும் திட்டமிடுகின்றது. மேலும் இந்தத் துறைத் பொறியியல் முகாமைத்துவத்தில் முதுநிலைமானி பாடத்திட்டத்தினை ஆரம்பிக்க உள்ளது.

3.6 முகாமைத்துவ பீடம்

(பீடாதிபதி - கலாநிதி எம்.அல்பிரட்)

அறிமுகம்

தோற்றம்

முகாமைத்துவ பீடமானது 2014 ஒக்டோபர் 20 ஆம் திகதி வெளியிடப்பட்ட அரச வர்த்தமாணி அறிவித்தலின் வழிகாட்டல்களுக்கமைய 2015 மார்ச் 25 ஆம் திகதி நிறுவப்பட்டது. வர்த்தமாணி அறிவித்தலின் படி எட்டு பிரிவுகளுடன் முகாமைத்துவ பீடத்தினை ஆரம்பிப்பதற்கு பேராதனைப் பல்கலைக்கழகத்திற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தது. பீடத்தின் முதல் கட்டம் தற்பொழுது செயற்பட்டு வருகின்ற அதேவேளை அது வர்த்தக நிதிப் பிரிவு, முகாமைத்துவக் கற்கை, மனித வள முகாமை, சந்தைப்படுத்தல் முகாமை மற்றும் செயற்படு முகாமை ஆகிய பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. பீடத்தின் மனித மற்றும் பௌதிக வளங்கள் விருத்தியடைகின்ற பொழுது கணக்கியல் பிரிவு, வர்த்தக பொருளியல் மற்றும் வர்த்தக தகவல் தொழில்நுட்பம் ஆகிய மூன்று பிரிவுகள் இரண்டாம் கட்டமாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

கற்கை நெறிகள்

முகாமைத்துவ பீடமானது குறித்த நேரத்தில் சுமார் 1500 மாணவர்களுக்கான சில பட்டப்படிப்பு கற்கை நெறிகளை வழங்கி வருகிறது. முகாமைத்துவ பீடமானது வர்த்தக நிர்வாகப் பட்டதாரி (BBA) விசேட பட்டக் கற்கை நெறிகளை முகாமைத்துவ பீடத்தில் பதிவாகும் மாணவர்களுக்காக வழங்கி வருகிறது. வருடாந்தம் 175 மாணவர்கள் அடங்கிய குழுவொன்று ஒழுங்குபடுத்தல் முகாமைத்துவம், கணக்கியல் மற்றும் நிதி, சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், மனித வள முகாமைத்துவம் மற்றும் செயற்படு முகாமைத்துவம் ஆகிய ஐந்துவிசேட துறைகளுக்காக உள்வாங்கப்படுகின்றனர். கலை மற்றும் விஞ்ஞான பீடங்களுடன் இணைந்து வர்த்தக மற்றும் விஞ்ஞான பட்டதாரி கற்கை நெறிகள் (கணினியியல் மற்றும் முகாமைத்துவம்) வழங்கப்படுவதுடன் ஒவ்வொரு கற்கைநெறிக்கும் வருடாந்தம் மாணவர்கள் உள்வாங்கப்படுகின்றனர். வருடாந்தம் தொலை மற்றும் தொடர்ந்தேர்ச்சியான கல்வி நிலையத்தினூடாக (CDCE) வர்த்தக நிர்வாக பட்டதாரி (இணையத்தினூடாக) கற்கை நெறிகள் முறையே 200 மற்றும் 100மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. மேலும் கலை பீடத்தின் கலைப் பட்டதாரி கற்கை நெறியில் பாடங்களாக அதிகமான கற்கைநெறிகள் கலைத்துறை மாணவர்களுக்காக வழங்கப்படுகின்றன. பட்டப்படிப்பு கற்கைநெறிகளுக்கு மேலதிகமாக வருடாந்தம் சுமார் மாணவர்களுக்கு தொலை மற்றும் தொடர்ந்தேர்ச்சியான கல்வி நிலையத்தினூடாக (CDCE) முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி கற்கைநெறி வழங்கப்படுகின்றது. மேலும் பீடம் கணக்கியல் மற்றும் நிதி பட்டப்பின் கல்வி டிப்ளோமா மற்றும் முகாமைத்துவப் பட்டப்பின் கல்வி டிப்ளோமா ஆகிய இரண்டு பட்டப்பின் கல்வி டிப்ளோமாக்களையும் வழங்கி வருகிறது. மேலும்,

இரண்டு பெயர்களை கொண்ட பட்டப்பின் படிப்பு டிப்ளோமாக்கள் அதாவது கணக்கியல் மற்றும் நிதியில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா, முகாமைத்துவத்தில் பட்டப்பின் படிப்பு டிப்ளோமா மற்றும் கலாநிதி பட்டப்படிப்பு ஆகியன மனிதவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்களுக்கான பட்டப்பின் படிப்பு நிறுகத்தின் (PGIHS) உடனுளைப்புடன் நடத்துகின்றது.

மனித மற்றும் பௌதீக வளங்கள்

பீடத்திற்கான அனுமதிக்கப்பட்ட கல்விசார் ஆளணியினர் எண்ணிக்கை 59 ஆக உள்ளதுடன் இதில் 33 பேர் ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை கல்வி சாரா மற்றும் முகாமைத்துவ ஆளணியினர்களுக்கான வெற்றிடங்கள் பூர்த்தியான நிலையில் உள்ளன.

பீடத்தின் நிர்வாக மற்றும் கற்கை நடவடிக்கைகளுக்காக 30,000 சதுர அடி பரப்பிலான இரண்டு கட்டடங்கள் காணப்படுவதுடன் அவை வினைத்திறன் மிக்க வகையிலே பயன்படுத்தப்பட்டு வருகின்றன. பீடத்திற்கான கணினி ஆய்வுகூடம் இல்லாத காரணத்தினால் அதற்காக தகவல் தொழில்நுட்ப பிரிவின் வசதிகளில் தங்கியிருக்க வேண்டியுள்ளது. இந்த ஆண்டுக்குள் பீடமானது 60,000 சதுர அடிகளைக கொண்ட நிலப்பரப்பில் ஆறு மாடி கட்டிடத்தினை நிறுவுவதற்கு அனுமதியினை பெற்றுக் கொண்டது.

அடைவுகள்

- புதுக்கட்டிட நிர்மாணப் பணிகள் நிறைவடைந்த பின் மேலும், 15000 சதுர அடி பரப்பிலும் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன.
- 6 தகுதிகாண் விரிவுரையாளர்கள், சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அனைத்து கல்விசாரா ஊழியர்களினதும் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டன.
- மூன்று உத்தியோகத்தர்கள் கலாநிதிப் பட்டத்திற்காக பதிவு செய்தனர். (இருவர் வெளிநாட்டிலும் ஒருவர் உள்நாட்டிலும்) ஒரு உறுப்பினர் தனது கலாநிதி பட்டத்தினை நோர்வேயில் நிறைவு செய்து துறையில் இணைந்து கொண்டார்.

- இரண்டு உறுப்பினர்கள் அவர்களது முதுநிலைமானிப் பட்டத்தினை முடிவுறுத்தினர்.
- இரண்டு தகுதிகாண் விரிவுரையாளர்கள் பதவிகளில் உறுதிப்படுத்தப்பட்டனர்.
- ஒரு உறுதிப்படுத்தப்பட்ட விரிவுரையாளர் சிரேஷ்ட விரிவுரையாளர் - தரம் II க்கு பதவியுயர்த்தப்பட்டார்
- பீட கருத்தரங்குகள் தவிர துறைகளினால் மாதாந்த கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டன. உறுப்பினர்கள் இலங்கையில் நடைபெற்ற சர்வதேச மாநாடுகளில் ஐந்து நூல்களையும் பதினைந்து ஆய்வுப் பத்திரிகைகளையும் பிரசுரித்தனர்.
- ஆறு சான்றிதழ் நிகழ்ச்சித் திட்டங்களும் ஐந்து டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டங்களும் உரிய துறைகளுக்கு அனுமதிகள் பெறப்பட்டன.
- BBA பாடத்திட்டத்திற்கு இப்போதுள்ள 2+2 கட்டமைப்பிற்குப் பதிலாக 1+3 கட்டமைப்பிற்கு திருத்தப்பட்டு அனுமதி தரப்பட்டது.
- பீடத்தின் தர உறுதிப்படுத்தல் தாபிக்கப்பட்டது.
- இரு தங்கப் பதக்கங்களை வழங்குவதற்கு பேரவை அனுமதி கிடைத்துள்ளது. ஒன்று பிரன்டிக்ஸ் இருந்தும் மற்றும் அடுத்தது இலங்கை பட்டயக் கணக்குகள் நிர்வகத்தில் இருந்தும் ஆகும்.

தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

- உரிய கற்றல் துறையில் போதிய விண்ணப்பங்கள் கோரப்படாத காரணத்தினால் பீடமானது சிரேஷ்ட தரத்தினாலான பதவி வெற்றிடங்களை நிரப்ப முடியாதுள்ளது.
- செயற்பாட்டுத் தாமதம் காரணமாக MBA, MSc. படநெறிகள் ஆரம்பிக்கப்படவில்லை. இதற்கான உத்தேசங்கள் இன்னும் திரையிடல் செயற்பாட்டு நிலையிலேயே உள்ளது.
- இன்னும் வரையறுக்கப்பட்ட பணிக்குழுவுடன் புதிய பீடமாகத் திகழ்வதால் அறிவார்ந்த வேலைப்பாடுகளில் குறைபாடுகள் அன்றாட வேலைச் சுமையில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துவதாக உள்ளது.

எதிர்காலத் திட்டங்கள்

- 2018 ஆம் ஆண்டில் இரண்டு பெயர்களை கொண்ட துறைகளை கணக்கீட்டுத் துறையையும் மற்றும் வணிக பொருளியல் துறையையும் தாபிப்பதற்குத் திட்டங்கள் இடப்பட்டுள்ளன.
- மூன்று புதிய பெயர்களையுடைய பட்டப்படிப்பு பாடநெறிகள் கணக்கியலும் மற்றும் ஆட்சி முறையிலும் BBA நிதியில் BBA சர்வதேச வணிகம் மற்றும் சட்டத்தில் BBA ஆகியன 2018 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
- மீளாய்வு செய்யப்பட்டBBA பாடத்திட்டம்2018/19 கல்வியாண்டில் அமுல்படுத்தப்படுகின்றது.
- வழமையான வெளியீடுகளின் தலைப்புகளான 2018 ஆம் ஆண்டில் “முகாமைத்துவம் தொடர்பான பேராதனை மீளாய்வு”,“முகாமைத்துவ வாசகன்” என்பன வெளியிடப்படவுள்ளன.
- மூன்றாவது கட்டிட நிர்மாணத்திற்கான முன்மொழிவு சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதில் மாணவர் சிற்றுண்டிச்சாலை, கழிவறை, மாணவர் பொது அறை, மாநாட்டு மண்டபம், விரிவுரை மண்டபம் போன்ற வசதிகள் இன்மை சுட்டிக்காட்டப்படவுள்ளது.
- ஆறு சான்றிதழ் பாடநெறிகள், ஐந்து டிப்ளோமா பாடநெறிகளுக்கு அனுமதி கிடைத்துள்ளது. மூன்று டிப்ளோமா பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட உள்ளன.
- B.Com பட்டப்படிப்பு பாடத்திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு 2018 இல் ஆரம்பிக்கப் படவுள்ளது

3.7 மருத்துவ பீடம்

(பீடாதிபதி - பேராசிரியர் வீ. எஸ்.வீரசிங்க)

அறிமுகம்

பேராதனை பல்கலைக்கழகத்தின் வைரவிழாவுடன் பல்கலைக்கழகத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட வைபவத்தின் தொடர்களை நோக்கி செயற்பாட்டு ரீதியான பங்களிப்பை பீட உறுப்பினர்கள் மேற் கொண்டு வந்தனர். வைத்திய பீடமானது மேன்மை தாங்கிய முன்னாள் மாணவன் என்ற விதத்தில் பேராசிரியர் சந்தன ரணதுங்கவை நியமித்து பீடத்திற்கான பாராட்டு விழாக்கள் வேந்தரின் ஆதரவுடன் கலைப்பீடத்தின் கலைக் கூடத்தில் நடைபெற்றது. உபவேந்தரின் பீடத்துக்கான மேன்மைதங்கிய உரையானது "சிறுநீரக நோயின் உறுதி இல்லாத தோற்றம்" என்ற தலைப்பில் ஓய்வு பெற்ற வைத்திய ஆலோசகரான கலாநிதி திலக் அபயசேகரவிற்கு வழங்கப்பட்டது. பீடத்தின் பழைய மாணவர்கள் சங்கத்தின் (PEMSSA) 13 ஆவது சர்வதேச வைத்திய மகாசபை ஜனவரி 10 ஆம் திகதி நடைபெற்றது. பீடமானது 2016 ஆம் ஆண்டுக்கான புது பட்டமளிப்பு விழாவை பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் வெற்றிகரமாக ஏற்பாடு செய்தது. மயக்கவியல் துறை குழந்தை, ஒவ்வாமை மற்றும் தொய்வு ஆகிய தலைப்புகளில் செப்டம்பர் மாதத்தில் ஒரு சர்வதேச மாநாட்டை நடத்தியது. வைத்தியத் துறையினால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்ட வயோதிபர் காப்புப் பிரிவு ஒன்று பேராதனை போதனா வைத்தியசாலையில் திறந்து வைக்கப்பட்டது. வெப்பமண்டல வைத்திய ஆராய்ச்சி நிலையத்தினால் (CRTM) ஏற்பாடு செய்யப்பட்ட வெப்ப மண்டல வைத்தியத்தின் இரண்டாவது சர்வதேச மாநாடு டிசம்பர் மாதத்தில் நடைபெற்றது. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு விஞ்ஞான பூர்வமான வெளியீடுகள் கிடைப்பனவுக்கு 1.6 மில்லியன் ரூபா மானியத்தினை சர்வதேச வலையமைப்பில் இருந்து பெற்றுக் கொண்டது. நான்கு பீட உறுப்பினர்கள் சிரேஸ்ட விரிவுரையாளர் தரம் II க்கு பதவியுயர்த்தப்பட்டனர். திருமதி டி. எஸ். சி. பி. குமாரி சிரேஸ்ட உதவி நிதியாளர் பதவிக்கு தரமுயர்த்தப்பட்டார். புதிய மாணவர்களான 2016/17 தொகுதி வைத்திய மாணவர்களுக்கு வரவேற்பு வைபவம் டிசம்பர் நான்காம் திகதி ஆரம்ப விரிவுரையான எழுச்சியூட்டும் பேராசிரியர் சந்தன அபயசேகர அவர்களின் பேச்சுடன் இடம் பெற்றது.

அடைவுகள்

2010/2011 தொகுதியின்MBBS பரீட்சையில் தகுதிநிலைப் பட்டியலில் இருந்து எமது மாணவர்கள் 1 ஆம் 2 ஆம் மற்றும் 3 ஆம் இடங்களை வென்று இருந்தனர். பணியிலிருந்து மான்புடன் விடுவிக்கப்பட்ட பேராசிரியர் நிமால் சேனநாயக்க அதி மேன்மைதங்கிய ஜனாதிபதி விருதான "வித்திய ஜோதி" விருதினைப் வழங்குவிக்கப் பட்டார். மற்றும் ஓய்வு பெற்ற வைத்தியக் கலாநிதி திலக் அபயசேகர என்பவர் பீடத்தின் அங்கத்தவராக நீடிக்கப்பட்டதுடன் "வித்தியநிதி" மேன்மைதங்கிய ஜனாதிபதி விருதினை வழங்குவிக்கப் பட்டார். பீடத்தின் பேராசிரியர் அர்ஜுன மெதகம, பேராசிரியர் ஆர். சிவகணேசன் மற்றும் வைத்திய கலாநிதி கலனமதுவகே ஆகியோர் ஆராய்ச்சிக்கான ஜனாதிபதி விருதைப் வழங்குவிக்கப் பட்டார். பேராசிரியர் எஸ். ரி.தர்மரத்ன கூகல் புலமையில் 26645 மேற்கோள்களை பெற்றுக் கொண்டதுடன் மற்றும் வைத்திய கலாநிதி கலன மதுவகே அதிமதிப்பு மிக்க KSM சுகாதார ஆராய்ச்சி பரிசு 2017 ஐ வழங்குவிக்கப் பட்டார். வைத்திய கலாநிதி திலினி ராஜபக்ச மற்றும் வைத்திய கலாநிதி தேவஸ்மிக்க "இலங்கையில் தாய்க்குரிய தற்கொலை என்ற தலைப்பில்" ஆராய்ச்சிப் பத்திரிகையினை பேளினில் WAP இல் உளவியலுக்கான 17 ஆவது உலக மகாசபையில் ஒக்டோபரில் சமர்பித்தார். 21 ஆராய்ச்சிப் பத்திரிகைகளை பீடத்தின் அங்கத்தவர்களால் உயர்தாக்கம் செலுத்தும் துறைகளில் புகழ் பெற்ற சர்வதேச சஞ்சிகைகளில் வெளியிடப்பட்டன. தடயவியல் வைத்தியத் துறையானது "தடயவியல் மருத்துவம், விஞ்ஞானம் மற்றும் சட்டம் ஆகியவற்றுக்கான இலங்கை சஞ்சிகை" யின் 7 ஆவது இதழினை வெளியிட்டுள்ளது. மேலும் எட்டுப் புத்தகங்கள் பீட அங்கத்தவர்களாள் வெளியிடப்பட்ட அதே வேளை எட்டுப் பீடங்களின் அங்கத்தவர்கள் தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களில் பிரசங்கங்களை வழங்கினர். மகப்பேறியல் மற்றும் மகளிர் நோய் மருத்துவ இயல் துறை 4.0 மில்லியன் மற்றும் 5.0 மில்லியன் பெறுமதியான ரூபாய்களை தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஆராய்ச்சி இரண்டு மானியங்களில் பெற்றுக் கொண்டது. மூன்று பீட அங்கத்தவர்கள் பேராசிரியர் பதவிக்கு தரம் உயர்த்தப்பட்டுள்ளனர்.

தோல்வியும் நியாயப்படுத்தலும்

பீடத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட காரணங்களினால் பீடாதிபதியின் காரியாலயம் மற்றும் ஏனைய திணைக்களங்கள் மற்றும் பிரிவுகளினது நிர்மாணப் பணிகள் தாமதமாயின. பல்கலைக்கழகத்தின் உயர் அதிகாரிகளுக்கும் மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய பிரிவுகளுக்கும் விடுக்கப்பட்ட தொடர்ச்சியான நினைவுபடுத்தல்கள் மூலமாக எதிர்பார்க்கப்பட்ட பலன் கிடைக்கவில்லை. நிதி நெருக்கடி மற்றும் நிர்வாக பின்னடைவுகள் காரணமாக பரா மருத்துவக் கட்டடத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணம் மிக மெதுவாக நடந்துள்ளது.

எதிர்காலத் திட்டங்கள்

- பரிந்துரைக்கப்பட்ட மருத்துவ விஞ்ஞானங்கள் பட்டப்பின் கற்கை நிறுவனத்தினை நிறுவுவதற்கும்
- பீடத்தின் கட்டட நிர்மாணத் திட்டத்தினை துரிதப்படுத்துவதற்கும்
- மீளாய்வு செய்யப்பட்ட பாடவிதானத்தினை அமுல்படுத்துவதற்கும்.

3.8 விஞ்ஞான பீடம்

(பீடாதிபதி - பேராசிரியர் எஸ்.ஆர்.கொடிதுவக்கு)

அறிமுகம்

விஞ்ஞான பீடம் புத்தாக்க நிர்மாண ஆய்வு மற்றும்கல்வி துறைகளிற்குத் தனித்துவமான வாய்ப்புக்களை வழங்குகின்றது. 1942 இல் ஆரம்பிக்கப்பட்டு தற்போதுள்ள இடத்திற்கு 1961 ஜூலை மாதம் மாற்றப்பட்ட விஞ்ஞானபீடமானது 70 வருட காலமாக நாட்டின் விஞ்ஞானக் கல்வியின் முன்னோடியாக இருந்து வருகின்றது. இதுவரை கல்வியை மேம்படுத்துவதற்கு அவசியமான அத்தியாவசிய தேவைகளை வழங்கிக் கொண்டு, பாரியளவு மாணவர்களுக்கு விடுதி வசதிகளையும் புதிய பீடங்கள், திணைக்களங்கள் மற்றும் மத்திய நிலையங்களை அமைத்து காணப்படும் வசதி வாய்ப்புக்களை விஸ்தரித்துள்ளது. தற்போது இப்பீடத்தில் எட்டு திணைக்களங்கள், தொழில்சார் மற்றும் கல்விசார் பதவியணியினர் 100 பேர், இளமானிப் பட்டத்தைப் பயிலும் மாணவர்கள் 1800 பேர் மற்றும் பட்ட மேற்கல்விப் பட்டத்தைப் பயிலுவோர் 200 பேர் காணப்படுகின்றனர். விஞ்ஞானக் கல்வி அலகு, ஆங்கில மொழிக் கற்பித்தல் அலகு, விஞ்ஞான கைத்தொழில் தொடர்பு அலகு என்பனவும் விஞ்ஞான பீடத்திற் காணப்படுகின்றது.

பீடமானது 15 இளமானிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளை வழங்குவதற்காக ஏறத்தாழ 530 மாணவர்களை வருடாந்தம் அனுமதிக்கிறது.உயிரியல், தாவரவியல், இரசாயனவியல், கணனி விஞ்ஞானம்,பூகோளவியல்,கணிதவியல்,கரு உயிரியல் மற்றும் உயிரியல் தொழிநுட்பம்,பௌதீகவியல், சுற்றாடல்சார் விஞ்ஞானம், புள்ளிவிபரவியல் மற்றும் விலங்கியல் ஆகிய துறைகளுக்கு உரிய நான்காண்டு விஞ்ஞானமானிவிசேட பட்டம் விஞ்ஞான பீடத்தினால் வழங்கப்படுவதுடன், புள்ளிவிபரவியல் மற்றும் செயற்பாட்டு ஆய்வு, கணனியியல் மற்றும் முகாமைத்துவம் (கலை பீடத்துடன் இணைந்து) ஆகிய பாடங்கள் தொடர்பான நான்காண்டு விஞ்ஞானமானிப் பட்டமும் விஞ்ஞான பீடத்தினால் வழங்கப்படுகின்றது. அவ்வாறே, பிரயோக விஞ்ஞானங்கள் தொடர்பான நான்காண்டு விஞ்ஞானமானிப் பட்டத்தைப் பயிலுவதற்கான வாய்ப்புடன் கூடிய மூன்றாண்டு விஞ்ஞானமானிப் பட்டமும் விஞ்ஞான பீடத்தினால் வழங்கப்படுகின்றது.

இங்கு பிரயோக விஞ்ஞானங்கள் தொடர்பான நான்காண்டு பட்டக்கல்வியின் இறுதி ஆண்டில் மாணவர்கள் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்படுவதன் மூலம் கைத்தொழில் துறையுடன் தொடர்புடைய ஒரு ஆண்டு காலப் பயிற்சியும் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றது.

அனைத்து பட்டப்படிப்பு பாடநெறிகளை பின்பற்றும் அனைத்து மாணவர்களும் நாட்டின் அபிவிருத்தியை மையமாகக் கொண்ட பயிற்சியைப் பெறுவதற்காக, பீடமானது விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவனத்துடன் இணைந்து பட்டப்பின் படிப்பு கற்கை மற்றும் ஆய்வு நடவடிக்கைகளை வழங்குகின்றது. அடிப்படை மற்றும் பிரயேக விஞ்ஞான துறையில் ஆய்வுகளை நடாத்துவதற்காகப் பீடத்திற்குப் பல்வேறு நவீன உபகரணங்களும் பௌதீக வளங்களும் வழங்கப்பட்டுள்ளன. பீடத்தின் பல கல்விசார் உத்தியோகத்தர்கள் தேசிய மற்றும் சர்வதேச விருதுகளை வென்றுள்ளனர். அவர்கள் தமது ஆய்வு நடவடிக்கைகளுக்காக தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் பல வெளியீடுகளையும் முன் வைத்துள்ளனர்.

அடைவுகள்

2017 ஆம் ஆண்டில் பீடத்திற்காக மூன்று சிரேஷ்ட விரிவுரையாளர்களையும், மூன்று விரிவுரையாளர்களையும் இரண்டு தகுதிகாண் விரிவுரையாளர்களையும் ஆட்சேர்ப்பு செய்ய இயலுமை கிடைத்தது.ஒருகல்விசார் பதவியணியினர் பேராசிரியராக பதவியுயர்வு பெற்றுள்ளார்.ஒரு கல்விசார் பதவியணியினர் துணைப் பேராசிரியராக பதவியுயர்வு பெற்றுள்ளார்.ஒரு கல்விசார் பதவியணியினர் சிரேஷ்ட பேராசிரியராக பதவியுயர்வு பெற்றுள்ளார். நான்குகல்விசார் பதவியணியினர் சிரேஷ்ட விரிவுரையாளர்களாகப் பதவியுயர்வு பெற்றுள்ளார்கள். நான்கு கல்விசார் பதவியணியினர் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I இற்கும் இரண்டு கல்விசார் பதவியணியினர் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II இற்குப் பதவியுயர்வு பெற்றுள்ளார்கள். பல அங்கத்தவர்கள் வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கு மற்றும் ஆய்வுகூடங்களுக்கு விசேட பயிற்சி நிகழ்ச்சிகள், பயிற்சிப் பட்டறைகள், மாநாடுகள் மற்றும் கூட்டிணைவு ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக சென்றிருந்தனர்.

பீடமானது இரண்டு தொகுதி மாணவர்களை (2016/2017 மற்றும் 2017/2018) 2017 ஆம் ஆண்டில் அனுமதித்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது. பா. மா. ஆ. குழுவின் உடனுளைப்புடன் 508 மாணவர்கள் 2017/2018 கல்வியாண்டுக்கு முழுவதுமாகவும் வெற்றிகரமாகவும் உள்ளெடுக்கப்பட்டுக் கொண்டிருந்தனர்.

2015 ஆம் ஆண்டில் பீடத்தினால் பதினான்கு உறுப்பினர்களுக்கு விஞ்ஞான வெளியீட்டிற்காக ஜனாதிபதி விருதினை வென்றெடுத்தனர். ஆராய்ச்சி பிரசுரங்களுக்காக பதவியணியின் அங்கத்தவர்களுக்கு ஜனாதிபதி விருதுகள் வழங்கப்படுகின்றது. பதவியணி அங்கத்தவர் ஒருவர் இளம் ஆராய்ச்சியாளர்களுக்கான விருதினைப் பெற்றுக்கொண்டார்.

பீடம் ஊவா மாகாணத்தில் க.பொ.த (உ.த) பிரிவைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு பயிற்சிப் பட்டறையொன்றை நடாத்தியது. இப்பட்டறையில் க.பொ.த(உ.த) இரசாயனவியல், உயிரியல், பௌதீகவியல் ஆசிரியர்களும் உள்ளடக்கியிருந்தனர். இருபத்தாறுஒரு நாள் பாடசாலை விஞ்ஞான நிகழ்ச்சித்திட்டங்கள் 1000 க.பொ.த(உ.த) மாணவர்களுக்கு விஞ்ஞான கல்வி நிலையத்தில் நடாத்தப்பட்டது. பீடம் நாட்டின் பின் தங்கிய பிரதேசங்களில் காணப்படும் க.பொ.த(உ.த, ச.த) மாணவர்களுக்கு விஞ்ஞான பயிற்சிப் பட்டறைகளை நடாத்தியது. இப்பயிற்சிப் பட்டறையில் ஏறத்தாழ 1000 மாணவர்கள் பங்குபற்றினர். அவர்களுக்கு விரிவுரை, செய்முறைப் பயிற்சி, கலந்துரையாடல் உட்பட பிரபல "இரசாயனவியல் அதிசயங்கள்" எனும் நிகழ்ச்சியும் நடாத்தப்பட்டது.

அண்மைய பட்டதாரிகள் மற்றும் இறுதியாண்டு மாணவர்களின் நன்மை கருதி தொழில் துறையிலுள்ள தொழில் கொள்வோரை வரவழைத்து "தொழிற்துறை தினம்" மூன்றாவது வருடமாகவும் வெற்றிகரமாக ஒழுங்கு செய்யப்பட்டது.

பல கல்விசார் பதவியணி அங்கத்தவர்கள் தொடர்ச்சியாக பணிப்பாளர்களாக, தலைவர்களாக குழு தலைவர்களாக அவர்களது சேவையை வழங்கி வருவதுடன், இன்னும் சிலர் தேசிய நிறுவகங்கள் மற்றும் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த செயற்திட்டங்களிலும் பங்காற்றி வருகின்றனர்.

இவ் ஆண்டில் 97 கல்விசார் உத்தியோகத்தர்கள் ஆய்வுக் கட்டுரைகளை, 19 பரிந்துரைக்கப்படாத ஆய்வுக் கட்டுரைகள், 5 புத்தகங்களில் 200 சுருக்கங்கள் என்பனவற்றை வெளியிட்டனர். பீடத்தினால் இரு தேசிய காப்புரிமைப் பட்டயங்கள் என்பன வெளியிடப்பட்டன.

புள்ளிவிபரவியல் மற்றும் கணணி விஞ்ஞானத் துறைக்கான நான்கு மாடிக்கட்டடத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. நிலவியல் துறை கட்டிடத்தின் இரண்டாம் கட்ட நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பீடத்தின் நிர்வாகக் கட்டடத்தையும் மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிர் தொழிநுட்பக் கட்டடம் என்பனவற்றை விஸ்தரிப்பதற்கான மந்திரி சபையின் அனுமதி கிடைக்கப் பெற்றுள்ளது. இரு புதுப்பித்தல் செயற்றிட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

சிறந்ததொரு பதவியணி அங்கத்தவர் பல்கலைக்கழக சேவையிலிருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக விலகியுள்ளார். தற்போது காணப்படும் ஆய்வு கூடம், நூலகம் கீழ் கட்டமைப்பு வசதிகள் ஆகியன அதிக எண்ணிக்கையான மாணவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான கோரிக்கைகளுக்கு போதாமல் உள்ளது.

எதிர்காலத் திட்டங்கள்

சமூகத்தின் கோரிக்கைகளுக்கு முகம் கொடுக்கும் வண்ணம், அக்கறை செலுத்தும் தரப்பினருடன் கலந்துரையாடி உயிரியல் பட்டப்படிப்புப் பாடநெறியை மீளமைப்பதற்கு பீடம் திட்டமிட்டுள்ளது.

புள்ளி விபரவியல் மற்றும் கணணி விஞ்ஞானத் துறைகள் ஆகியவற்றை நிலவியலைப் போன்று புதிய கட்டிடத்துக்கு இடமாற்றம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. பீடத்தின் நிர்வாக பகுதியினையும் மற்றும் மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியல் தொழிநுட்ப கட்டிடம் 2018 ஜனவரியில் விஷ்தரிப்பதற்கு எதிர் பார்க்கப்படுகின்றது.

3.9 மிருக வைத்திய மற்றும் விலங்கு விஞ்ஞான பீடம்

(பீடாதிபதி - பேராசிரியர் எஸ்.பீ.எல். ஆரியரத்ன)

அறிமுகம்

இலங்கைப் பல்கலைக்கழக முறைமையில் கால்நடை வைத்தியக் கற்கைப் பட்டத்தினை வழங்குகின்ற ஒரே நிறுவனம் கால்நடை மருத்துவ மற்றும் கால்நடை விஞ்ஞான பீடமாகும். இந்த நான்கு வருட கற்கை நெறிக்காக வருடாந்தம் உள்வாங்கப்படும் மாணவர் தொகை சுமார் 80 ஆகும். இந்த பீடத்தில் 5 பிரிவுகளாக வகுக்கப்பட்ட பல்வேறு பாடப்பரப்புகளில் விசேடத்துவம் பெற்ற 41 கல்விசார் ஊழியர்கள் கடமை புரிகின்றனர். உயர் தரத்திலான கல்விசார் மற்றும் நிர்வாக மட்டத்தினைப் பெற்றுக் கொள்வதற்காக பீடாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் பீட சபையினால் நியமிக்கப்பட்ட 15இற்கும் மேற்பட்ட உபகுழுக்களுக்கு பொறுப்புகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. பீடத்தின் கற்கைச் சூழலானது கால்நடை போதனா வைத்தியசாலை, நடமாடும் மருந்தகங்கள், கால்நடை போதனா பண்ணைகள், கால்நடை நூலகம், கணினிப் பிரிவு, புதுவகை கால்நடை நோய்களுக்கான இனங்காணல் மற்றும் ஆராய்ச்சி நிலையம் என்பனவற்றோடு நவீன பால் நிலையம் மற்றும் விசர் நாய்க்கடி இனங்காணல் பிரிவு ஆகிய சேவை மையங்களைக் கொண்டுள்ளது.எட்டு அரையாண்டுகளைக் கொண்ட இக் கற்கைநெறி மொத்தமாக 23 பாடங்களை உள்ளடக்கியுள்ளதுடன் ஒவ்வொரு பாடமும் கால்நடை சுகாதாரம் அல்லது உற்பத்தி தொடர்பான ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களுடன் ஒரு அல்லது இரண்டு அரையாண்டுகள் கற்பிக்கப்படுகின்றன. இதற்கமைவாக பாட நெறியின் போதான கணிப்பீடுகள் மற்றும் அரை வருட இறுதி – வருட இறுதி பரீட்சைகள் என பரவலான கணிப்பீட்டு முறைமையினை பீடம் நடாத்தி வருகின்றது.

அடைவுகள்

மாணவர் அனுமதியினை 100 ஆக அதிகரிக்கும் நோக்கில் பீடத்தின் அடிப்படை விஞ்ஞானக் கட்டடம், உயிர் இரசாயனவியல் கட்டிடம், நோய் உயிரியல் கட்டிடம், பண்ணை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரக் கட்டடம் ஆகியவற்றின் வகுப்பறைகள் மற்றும் ஆய்வுகூடங்களை விரிவு படுத்தல் உட்பட பல்வேறு நிர்மாண மற்றும் புனர் நிர்மாண வேலைகள் ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டுள்ளன. பரீட்சைகள் கட்டடத்தின் இரண்டாம் மாடி நிர்மாணப் பணிகள் தற்பொழுது நடைபெற்று வருவதுடன் இது பரீட்சைகள் நடாத்துவதற்கான மேலதிகமகன இடமாகவும் சிறிய குழுக் கற்பித்தலுக்கான இடமாகவும் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. பெரிய கால்நடை வைத்தியசாலையினை ரூபா. 139 மில்லியன் செலவில் நவீன வசதிகளுடன் விரிவு படுத்துவதற்கான அமைச்சரவை அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது.

கால்நடை மருத்துவ விஞ்ஞானப் பிரிவு தனது புதிய அமைவிடத்தில் வெற்றிகரமாக செயற்பட்டு வருவதுடன் கால்நடை போதனா வைத்தியசாலையானது வீட்டு வளர்ப்பு மற்றும் வன விலங்குகளுக்கான முழு நேர சுகாதார சேவையினை வழங்கும் வகையில் நவீன வசதிகளுடன் கூடியதாக அமைக்கப்பட்டுள்ளது. HETC – Window – 2 திட்டத்தின் மூலமாக ஒதுக்கப்பட்ட நிதியினைப் பயன்படுத்தி மாணவர் விடுதி அமைத்தல் கோழிப் பண்ணையை விருத்தி செய்தல், பன்றி வளர்ப்பினை திருத்தியமைத்தல் மற்றும் கால்நடை பிரிவிற்கான விருத்தி ஆகியன அடங்கலாக கால்நடை போதனா பண்ணையின் திருத்த மற்றும் தரமுயர்த்தல் நடவடிக்கைகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. கால்நடை மற்றும் கிராமியப் பொருளாதார அமைச்சு பன்றி வளர்ப்புப் பிரிவின் அபிவிருத்திக்காக ரூபா. 20 மில்லியனை வழங்கியுள்ளது. பல கல்விசார் அங்கத்தவர்கள் தமது பட்டப் பின் கற்கையினைப் பூர்த்தி செய்துகொண்டு திரும்பியதன் காரணமாக பீடத்தின் கற்கைத்துறை முன்னேற்றமடைந்தது. கால்நடை தொடர்பான பாடவிதானத்தின் மீளாய்வுசெய்வதற்கும் பிராந்திய நிறுவனங்கள் மற்றும் அவுஸ்திரேலியாவின் அதிகாரப்படுத்தலினை உறுதி செய்துகொள்வதற்கும் மஸி பல்கலைக்கழகத்தின் உதவியைப் கொள்வதற்காக நியூஸிலாந்தின் மஸி பல்கலைக்கழகத்துடன் இணைந்து உருவாக்கப்பட்ட OIE ஒன்றிணைந்த நிகழ்ச்சித்திட்டம் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளோடு மூன்றாவது வருடமாக வெற்றிகரமாக செயற்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் கால்நடை கற்கை பாடவிதானமானது ஐந்து வருடங்களுக்கு விரிவாக்கப்படவுள்ளது. OIE ஒன்றிணைந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு நியூஸிலாந்து அரசாங்கத்தின் உள்நாட்டுக் கைத்தொழில் மற்றும் வியாபார அமைச்சு ஐந்து வருடங்களுக்கு நிதியுதவியை வழங்குகிறது. தியரிஒகெநொலொஜியில் மிருகவைத்திய விஞ்ஞானத்தில்(MVSc- தியரிஒகெநொலொஜி) முதுநிலைமானியில் மூன்றாம் சுழற்ச்சி 25க்கும் அதிகமானமாணவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டு மற்றும் 2 வது சுழற்சியின் அதே பாடநெறி வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மிருக வைத்திய பொது சுகாதார, உயிர் நோயியல் மற்றும் தொழுவ சுகாதார முகாமைத்துவ பாடநெறிகள் உட்பட MVScஆரம்பிப்பதற்கு தயாராக உள்ளது.

பின்வருவன ஆளணி அங்கத்தவர்களின் குறிப்பிடத்தக்க அடைவுகளாகும்.

- இலங்கை வன விலங்கு சுகாதார நிலையத்தின் (SLWHC) இணை நிறுவனமான கால்நடை மருத்துவ மற்றும் மிருக விஞ்ஞான பீடம் இலங்கையில் மிருக மற்றும் மனித சுகாதாரம் தொடர்பான ஆராய்ச்சியில்

சிறப்புத் தேர்ச்சியினைக் கட்டியெழுப்பும் நோக்கில் கனடாவின் சர்வதேச அபிவிருத்தி ஆராய்ச்சி நிலையத்தின் (IDRC) அனுசரணையுடன் ஒன்றிணைந்த ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டத்தினை நான்காவது தடவையாக மிக வெற்றிகரமாக நடாத்தி வருகிறது. இத் திட்டத்தின் கீழ்ஐந்து பட்டப்பின் கற்கை பட்டங்கள் வழங்கப்படும்.

- பேராசிரியர் பிரெனி அபயநாயக்க, கலாநிதி மதுர முனசிங்க கலாநிதி நிரோமி ஜெயசேகர, கலாநிதி அனோஜா வணிகசேகர மற்றும் கலாநிதி ருவனி கலுப்பான ஆகியோர் உட்பட ஒரு குழுவுக்கும் விவசாய ஆராய்ச்சியில் SLCARP தேசிய விருதினை வழங்கி கௌரவிக்கப்பட்டார்.
- பேராசிரியர் ஆர்.பி. வி. ஜே. ராஜபக்ஷ இரண்டு புதிய உடனுளைப்பு ஆய்வு கருத்திட்டங்களை அதாவது ஒன்று டெங்கு காய்ச்சலுக்கு எதிரான எதிர்ப்பை அதிகரிக்கும் ஜேர்மனுடனான மூலக்கூற்று அம்சங்கள் மற்றது இலங்கையின் நச்சுத் தன்மைப் பாம்புகளின் இந்தியாவுடனான எதிர்ப்பு விசம் தயாரிப்பு என்பனவற்றை வெற்றிகரமாக ஆரம்பிக்கவுள்ளார்.
- இரண்டு பணிக்குழு அங்கத்தவர்கள் கலாநிதி சாந்த கொட்டவத்த மற்றும் கலாநிதி அணில் கழுப்பான ஆகியோர் தமது கலாநிதிப் பட்டங்களை முடித்துக் கொண்டு தமது பீடத்திற்கு திரும்பியுள்ளளனர்.
- பேராசிரியர் ஆர்.பி. வி. ஜே. ராஜபக்ஷ IAEA இல் இருந்து தடுப்பாற்றல் பிரதியீடுகள் மற்றும் ஒரு ஒளிவீசுகிற லாவாப் தடுப்பூசியை கேமன்கஸ் வளை உருமாறும் படிக்குறுக்கை பயன்படுத்துவதற்காக கட்டுப்பாட்டு நிகழ்ச்சி ஒன்றை அமுல்படுத்துவதற்கான கற்றலுக்கு ஆராய்ச்சி மானியத்தை பெற்றுக் கொண்டார்.
- கலாநிதி நில்மினி ஜெயசேன கலாநிதி திலான் சத்தரசிங்க மற்றும் கலாநிதி ரசிக்க ஜினசேன ஆகியோர் NRC யிடம் இருந்து அவர்களது பரிந்துரைகளுக்காக ஆராய்ச்சி மாணியங்களைப் பெற்றுக் கொண்டனர். கலாநிதி ருசிக்க பெர்னாந்து ப.மா.ஆ.கு விலிருந்து அவரது கலாநிதி பட்டத்தின் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்காக ஆராய்ச்சி மானியத்தை பெறுவதற்கு தொடர்ந்து கொண்டிருக்கிறார்.
- கலாநிதி சாந்தா கொட்டவத்த 2015 ஆம் ஆண்டு அவரது ஆராய்ச்சியின் பங்களிப்புகளுக்காக ஜனாதிபதி ஆராய்ச்சி விருதுகள் விருதளிக்கப்பட்டுள்ளார்.
- பேராசிரியர் பசில் அலெக்ஸ்ஸாண்டர் இலங்கையில் பன்றி வளர்ப்பை மேம்படுத்துவதற்கு கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்துதல்

தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

பெரிய மிருக போதனா வைத்திய சாலையின் நிர்மானப் பணிகள் ஒப்பந்தக் காரர்களுக்கு வழங்கப்படுவது தாமதமாகி உள்ளதால் அதன் பணியும் தாமதமாகியுள்ளது. பொருத்தமான தகமை இல்லாத விண்ணப்பதாரர் காரணமாக சில துறைகளில் காணப்படும் கல்விசார் பணிக்குழுவின் வெற்றிடங்களை நிரப்புவது சாத்தியமற்றதாக காணப்படுகின்றது.

எதிர்காலத் திட்டங்கள்

கற்கை நெறிகள்

- OIE ஒன்றிணைந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நியூஸிலாந்து நாட்டின் மஸி பல்கலைக்கழகத்தின் உதவியுடன் தற்போதைய பாடவிதானத்தை விளைவு மையப்படுத்திய இ மாணவர் மையப்படுத்திய 5 ஆண்டு திட்டமாக மாற்றுவதற்காக பாடவிதானமானது மீளாய்வு செய்யப்படுகின்றது.

- MVSc கற்கையின் பாடவிதானம்மாணவர்கள் தங்களது கற்கை நெறிகளை டிப்லோமா,MSc,MVSc அல்லது MPhil ஆகியதரங்களில் நிறைவு செய்வதற்கான தெரிவினை வழங்குகின்ற வகையிலே MVSc கற்கைநெறியினது பாடவிதானம் மீளாய்வு செய்யப்படுகின்றது. மிருக வைத்திய பொது சுகாதார, மிருக வைத்திய நோயியல் மற்றும் கோழி வாத்து முதலியவற்றின் சுகாதாரம் மற்றும் முகாமைத்துவத்தில் புதிய MVSc பாடநெறிகள் விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கின்றன.

உட்கட்டமைப்பு அபிவிருத்தி

- பிரதான திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டதற்கிணங்க சிறு கால்நடை போதனா வைத்தியசாலையை விரிவு படுத்துவதற்கும் வன விலங்குகள் வைத்தியசாலைக்கான புதிய வசதிகளை வழங்குவதற்குமான ஒரு பிரேரணை தயாரிக்கப்பட்டு பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்து.

- கால்நடை போதனா வைத்தியசாலைக்கு அருகே மிருக உயிரியல் பிரிவினை கொண்டு செல்லும் வகையில் நான்கு மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்காக உத்தேசிக்கப்பட்டு பிரேரணையொன்று கையளிக்கப்பட்டுள்ளது.

3.10 பட்டப்பின் படிப்பு நிறுவகங்கள்

3.10.1 விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகம் (PGIA)

(பணிப்பாளர் - பேராசிரியர் சி. எம். பி. தெமட்டவெவ)

அறிமுகம்

விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகமானது 1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நியதிச்சட்டத்தின் படி 1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பழைய இலங்கை பல்கலைக்கழக சட்டத்திற்கு அமைய 1975 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு இலங்கை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது. 1978 ஆம் ஆண்டின் பல்கலைக்கழக சட்டத்தின் 16 ஆம் இலக்க ஏற்பாடுகளின் கீழ் மேற்படி நியதியானது 1979 ஆண்டு 9 ஆம் இலக்க கட்டளைச் சட்டமாக்கப்பட்டது. இதற்கமைய இந் நிறுவகமானது 1980 ஆம் ஆண்டு ஜனவரி 1 ஆம் திகதி முதல் செயற்படுத்தப்படுகின்றது. இத்தனித்துவமான நிறுவகத்தை தாபிப்பதற்கான பிரதான நோக்கம் உள்நாட்டு பட்டப்பின்படிப்பு கல்வி இயலளவை அபிவிருத்தி செய்தலும் போதுமான பயிற்சிகளை விஞ்ஞான ரீதியாக ஆளணிகளுக்கு துரிதமாக விரிவடைந்துவரும் விவசாய துறைக்காக வழங்குவதுமாகும். இது பேராதனைப் பல்கலைக்கழகத்துடனும் இணைந்ததாகவும் காணப்படுகின்றது.

கல்விசார் நிகழ்ச்சிகள்

தனது நோக்கங்களை அடைவதற்காக நிறுவகமானது தற்போதைய இலங்கைப் பொருளாதார துறையில் முக்கியத்துவம் வாய்ந்த பல உயர்கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை வடிவமைத்துள்ளது. நாட்டின் கேள்விக்கு ஏற்றவாறு கலைத்திட்டமும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது. தற்போது விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகம் கலாநிதி, DBA, தத்துவமானி மற்றும் 31 முதுமானி பட்டங்களை வழங்குகின்றது. தனது பட்டப்பின் படிப்புத் துறையில் நிறுவகமானது முழு நேர வதிவிட பயிற்சியை வழங்குகின்றது. இதனால் பட்டப்பின் படிப்பு மாணவர்களுக்கு முழு நேரம் பல்கலைக்கழக கல்விசார் நடவடிக்கைகளிலும் ஆய்வு நடவடிக்கைகளிலும் ஈடுபடக் கூடியதாகவுள்ளது. விவசாயப் பட்டப்பின் படிப்பு நிறுவகம் எதிர்கொள்ளும் பிரதான சவால் ஒழுக்கமும், தியாக சிந்தையும் உடைய கல்விசார் மற்றும் ஆய்வு நடவடிக்கைகளில் அதிக நேரத்தை செலவிட்டு உரிய துறையில் சிறந்த பெறுபேறைப் பெறக்கூடிய சிறந்த மாணவர்களை கல்விசார் நடவடிக்கைகளுக்கு அனுமதிப்பதாகும்.

இலங்கை தகைமைச் சட்டகத்தின் படி (SLQF) நிறுவகம் தனது நியதிகளை மீளமைத்துள்ளது. 2017 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தக் கூடியவாறு வழிகாட்டல் அறிவுறுத்தல்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன. பட்டக் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களாவன,

முதுமானி/ வியாபார முதுமான - கற்கை நெறி கற்கை நடவடிக்கைகளுக்காக 5 தர மதிப்புக்கள்

முதுமானி/ வியாபார முதுமானி- கற்கை நெறி மற்றும் ஆய்வு நடவடிக்கை ஒரு வருட கால ஆய்வு நடவடிக்கை

தத்துவமானி /கலாநிதி/ DBA - ஆய்வு நடவடிக்கை மாத்திரம்

முதுமானி பாடநெறிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் அவர்களது பட்டப்பின் படிப்பு டிப்ளோமா அல்லது சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டங்களைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். பட்டப்பின் படிப்பு டிப்ளோமா பாடநெறிகளைப் பூர்த்தி செய்திருந்தால் 25 தர மதிப்புக்களும் பட்டப்பின் படிப்பு சான்றிதழ் பாடநெறிகளைப் பூர்த்தி செய்திருந்தால் 20 தர மதிப்புக்களும் வழங்கப்படுகின்றன. முதற் தடவையாக விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகமானது சான்றிதழ் பாடநெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கு மிகக் குறுகிய காலத்தில் முதுமானிப் பட்டங்களை வழங்குகின்றது.

கல்விசார் பதவியணியினர்

தற்போது கல்விசார் பதவியணியினரின் எண்ணிக்கை 300 இலும் அதிகமாகும். இவர்கள் பரந்த கற்பித்தல் மற்றும் ஆய்வு அனுபவங்களைக் கொண்டவர்கள். இவர்களுள் அதிக பதவியணியினர் பேராதனைப் பல்கலைக்கழக விவசாய பீடத்தைச் சேர்ந்தவர்கள். ஏனையவர்கள் பல்கலைகழத்தின் ஏனைய பீடங்களையும் அரச திணைக்களங்களையும், ஆய்வு நிறுவகங்களையும், கூட்டுத்தாபனங்களையும், தனியார் நிறுவகங்களையும் சர்வதேச தாபனங்களையும் அரச சார்பற்ற நிறுவனங்களையும் சேர்ந்தவர்கள்.

இவ்வாண்டுக்குள் மாணவர்கள் 11 கல்வி சபைகளின் கீழ் கல்வி நடவடிக்கைகளுக்காகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அவற்றின் விபரம் வருமாறு,

விஞ்ஞான முதுமானி - 271 வியாபார முதுமானி - 43 தத்துவமானி /கலாநிதி – 14

2017 ஆம் ஆண்டு பொதுப் பட்டமளிப்பு விழாவில் தமது பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

தத்துவ முதுமானி – 8		தத்துவமானி	- 24
விஞ்ஞான முதுமானி – 240		நிர்வாக முதுமான	- 23

PGIA க்கான ஒரு கொழும்பு கிளையை திறத்தல்

பெப்ரவரி 9 ஆம் திகதி இலங்கை மன்ற நிறுவகத்தில் (SLFI)வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்ட கொழும்பு கிளையை கொழும்பில் பாடநெறிகளை விரிவுபடுத்தும் ஆரம்ப நடவடிக்கைகளானது நிறுவகத்தின் இன்னும் ஒரு மைல்க் கல்லாக கருதப்படும் அதே நேரத்தில் இது விவசாய கைத்தொழில் நிறுவனங்களை அடிப்படையாக கொண்ட தலை நகரில் இருக்கும் மாணவர்களுக்கு உறுதுணையாக இருக்கும். தொடக்கத்தில், பிரயோக புள்ளிவிபரவியல், உயிரியல் புள்ளிவிபரவியல் மற்றும் உணவு விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் ஆகியவற்றில் மூன்று முதுநிலை விஞ்ஞான பட்டப்படிப்பு பாடநெறிகளை அவற்றின் பாடநெறிகளாக கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அமைவிடமானது பின்னர்கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துக்கு (KDU) மாற்றப்பட்டுள்ளதுடன் மேலும் பாடநெறிகளானது KDU ஆல் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

QUT இணைந்த பட்டப்படிப்பு பாடநெறிகள்

சில மாணவர்கள் அவர்களது ஆராய்ச்சிக் கூறுகளை குயின்லாந்து தொழிநுட்ப பல்கலைக்கழகத்துடன் (QUT) ஒரு வருட காலத்திற்கு, புலமைப் பரீட்சை பெறுநர்களாக சென்று QUT இனதும் மற்றும் PGIA இனதும் சிறந்த கல்வியாளர்களின் மேற்பார்வையின் கீழ் தொடர்கின்றனர். PGIA உடைய உரிய பட்டப்படிப்பு பாடநெறிகளுக்கு கோரும் சகல தகமைகளுக்கும்அமைவாக பேராதனை பல்கலைக்கழகம் அவர்களது பட்டப்படிப்பினை வழங்குகின்றது.

ஆராய்ச்சி வசதிகள் நிதியம்

2017ஆம் ஆண்டு விவசாய பட்டப்பின் படிப்பு நிறுவகம் ஆராய்ச்சி வசதி நிதியத்தின் (RFF) கீழ் தத்துவமானி மற்றும் கலாநிதிப் பட்ட ஆய்வு நடவடிக்கைகளுக்காக ரூபா 6 மில்லியன் தொகையை செலவிட்டது. இந்நிதியம் தேசிய ரீதியான முக்கிய துறைகளில் தமது ஆய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு மானியங்களை வழங்குவதற்காக 2010 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது.
ஆய்வு வெளியீட்டு நிதியம்

எட்டு மாணவர்களுக்கு வெளிநாட்டில் சர்வதேச ஆய்வு மாநாட்டில் தமது ஆக்கங்களை முன்வைப்பதற்கான வாய்ப்புக் கிடைத்தது. நிறுவகம் அவர்களுக்கு ரூபா 50,000ஐ ஒவ்வொரு மாணவர்களுக்கும் பிரயாணம்/ பதிவு ஆகியவற்றிற்கு அனுசரணையாக வழங்குகின்றது.

விவசாய பட்டப்பின் படிப்பு மாணவர் ஒன்றியம்

விவசாய பட்டப்பின் படிப்பு மாணவர் ஒன்றியம் (PASA) PGIA தினத்தினை ஏப்ரல் எட்டாம் திகதி ஏற்பாடு செய்திருந்ததடன் அது முழுநாளும் பல்கலைக்கழக மைதானத்தில் காலைத் தொடர் இடம் பெற்றது. முதலாவது தொடரானது பல்கலைக்கழக உப வேந்தரினால் தேசிய கொடி ஏற்றப்பட்டு பல்கலைக்கழக கொடி பணிப்பாளரினால் ஏற்றப்பட்டது. மாணவர்கள், கல்விசார் அணியினர் மற்றும் கல்வி சாரா அணியினர் PGIA தினத்தில் பங்கு பற்றினர். பல பொழுது போக்கு நிகழ்ச்சிகள் PASA ஆல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. மாலைத்தொடரினை மெருகூட்டியது PGIA இன் roof top ல் ஆகும்.

மேற்போன்றவற்றினை விட 2017 ஆம் ஆண்டில் கீழ் வரும் நிகழ்ச்சிகளை PGIA ஒழுங்கு செய்திருந்தது.

- "உதவும் கரங்கள்" என்ற பெயரினை உடைய பாடசாலை அபிவிருத்தி கருத்திட்டம் ஒன்று CSR கருத்திட்டமாக உடபேராதனை ஆனந்த வித்தியாலயத்தில் இடம் பெற்றது.இந்த நிகழ்ச்சியில் இரண்டு முக்கிய நடவடிக்கைகள் உள்ளடக்கப் பட்டிருந்ததுடன் சிறுவர் பூங்கா ஒன்று திறந்து வைத்தல் மற்றும் மாணவர்கள், பணிக்குழுவினர் மற்றும் PGIA உடைய நலன்புரிச் சங்கம் ஆகியவற்றின் உதவியுடன் மாணவர்களுக்கான பரிசுப் பொதிகளும் வழங்கப்பட்டன.

- பேராதனை போதனாவைத்திய சாலையினுடைய ரத்த வங்கியின் உதவியுடன் ரத்ததான முகாமொன்று ஜுன் மாதம் நடாத்தப்பட்டது. நிறுவகம் அந்த நடவடிக்கைக்கு அனுசரணை வழங்கியதுடன் 92 பேர் இதற்கு ரத்த அன்பளிப்பு செய்தனர்.

- PASA பொசன் பருவதினத்தில் நிவித்திக்கல மாநகர சபைக் காரியாலயத்தின் உடனுளைப்புடன் நிவித்திக்கல DS பிரிவின் வெள்ள நிவாரண பிரிவிற்கு மாணவர்களினதும் PGIA பணிக்குழுவினரதும் உதவியுடன் பல பொருட்களை சேகரித்து வழங்கியது. PASA மேலும் முழு நாள் நிகழ்ச்சியாக பல்கலைக்கழகத்தின் கலை மற்றும் வைத்தியப் பீட மாணவர்களின் உதவியுடன் நிவித்திக்கல வட்டபொத்த வித்தியாலயத்தில் உளவியல் மற்றும் வைத்திய சிகிச்சை முகாம் ஒன்றினை நடத்தியது.

- PASA 16 வெள்ள நிவாரணங்களை ஜுன் மாதத்தில் விவசாய பீட பட்டதாரிகளுக்கு அன்பளிப்பாக வழங்கியது.

- USA ∴புல்பிரைட் ஆணைக் குழுவுடன் இணைந்து ஆகஸ்ட் 26 ஆம்திகதி பட்டப்பின்படிப்பு மாணவர்களுக்கு விளிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. வளவாளர்களாக ∴புல்பிரைட் ஆணைக் குழுவின் மாணவ ஆலோசகர்கள் செயற்பட் அவர்களது முன்னிலைப் படுத்துகைகளானது அமெரிக்கன் கோனரின் நலத்தை முதன்மைப் படுத்தியும் மற்றும் மாணவர்களுக்கு கிடைக்கும் சந்தர்ப்பங்களைப் பற்றியதாகவும். PASA மேலும் இன்னும் ஒரு நிகழ்ச்சியினை பட்டப் படிப்பு மாணவர்களுக்காக செப்டம்பர் மாதத்தில் இதே நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததுடன் பல பட்டதாரி மாணவர்கள் இதில் பங்கு கொண்டனர். அமெரிக்க கோனரின் இளைஞர்மன்ற இணைப்பாளர்கள் இந்த சிகழ்ச்சியில் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

வருடாந்த மகாசபை

PGIA உடைய 9 ஆவது வருடாந்த மகாசபையானது கண்டி அமாயாகில் விடுதியில் நவம்பர் 16 இல் இருந்து 17 வரைக்கும் நடைபெற்றது. மிருக விஞ்ஞானத்து துறையைச் சேர்ந்த சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி செல்வி எஸ். எம். சி. இமாலி மகாசபையின் இணைப்பாளராக கடமையாற்றினார். ஆறு ஆராய்ச்சிப் பத்திரிகைகள் இந்திய, நேபாள், எதியோப்பியா மற்றும் நைஜீரியா ஆகிய நாடுகள் உள்ளிட்ட தேசிய சர்வதேச நிறுவனங்களைச் சேர்ந்த ஆராய்ச்சி மாணவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்டன.
மீளாய்வுக்கு பின்னர், 31 ஆராய்ச்சிப் பத்திரிகைகள் 7 தொழிநுட்ப தொடர்களின் கீழும் 13 சிறு தொலைத் தொடர்பகங்களில் இருந்தும் மகாசபையில் முன்னிலைப்படுத்தப்பட்டன. அவற்றுள் பத்து மிகவும் தரமான முன்னிலைப்படுத்தல்களாக விருதளிக்கப்பட்டன. முன்னாள் மாணவ சங்கத்தில் இருந்து ஒரு பண விருது மிகத் தரமானதும் மிகுந்த வரவேற்புக்கு உட்பட்டதுமான ஒரு முன்னிலைப் படுத்துகைக்கு மகா சபையில் வைத்து வழங்கப்பட்டது.

ஜோசிம் நினைவு விருது

ஜோசிம் நினைவு விருது ஒரு பணப்பரிசு 2016 ஆம் ஆண்டு அதிகமான GPA ஐ பெற்றுக் கொண்ட மகாசபையில் முன்னிலைப் படுத்துகைக்கு வழங்கப்பட்டது. 2017இல் விவசாயப் பொருளியலில் செல்வி எம்.ஜே ஜி. சி. எம் ஜெயசிறிக்கு விருது வழங்கப்பட்டது.

அடைவுகள்

மாணவர் அடைவுகள்

வெளிநாட்டில் நடைபெற்ற சர்வதேச ஆய்வு மாநாட்டில் தமது ஆய்வுக் கட்டுரைகளை சில மாணவர்கள் முன்னிலைப்படுத்தினர். ஆய்வுக் கட்டுரைகள் உலர் விவசாய ஆய்வு நாளேட்டில் பிரசுரிப்பதற்கும் பேராதனைப் பல்கலைக்கழத்தின் IPURSE இல் முன் வைப்பதற்குத் தெரிவு செய்யப்பட்டது.

ESRI சர்வதேச பயனாளர் மகாநாடு

பூகோள தகவலியல் (GIS) பட்டப்படிப்பின் ஒன்பது மாணவர்கள் (GIS) னுடைய இணைப்பாளர்களுடன் இணைந்து ''சூழல்முறைமை ஆராய்ச்சி நிறுவகம் (ESRI) சர்வதேச பயனாளர் மகாநாடு'' ஜுலையில் ஐக்கிய அமெரிக்கவினுடைய கலிபோர்னியாவில் சான் தீகோ வில் நடைபெற்றது.

எரஸ்மொஸ் மன்டஸ் மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சி

MSC நிகழ்ச்சி பாரியதொரு விவசாயப் பொருளியலினை கொண்டு காணப்படுவதோடு எரஸ்மொஸ் மன்டஸ் மாணவ பரிமாற்ற விருதினை மற்றும் அவருடைய தொடர்ச்சியாக அவருடைய கல்வி சம்பந்தமாக அரையிறுதி நடுத்தர கிழக்கு தொழிநுட்ப பல்கலைக்கழகம் (METU) துருக்கியின் அங்காராவில் நடைபெற்றது.

ஐக்கியராச்சிய கேம்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் மாணவர் வருகை தரு நிலை

ஐக்கியராச்சிய கேம்ரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் இரசாயணவியல் துறையில் ஜோன் ஆராய்ச்சிக் குழுவில் பட்டப் பின்படிப்பு மாணவர் வருகை தரு நிலை ஒன்றுக்கு ஆலை பாதுகாப்பில் பீட சபையில் மாணவர் ஒருவருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பந்தங்கள் / புரிந்துணர்வு உடன்படிக்கைகள்
கடல் கடந்தமாணவர்களை கவரும் நோக்கில் விவசாய பட்டப் பின்படிப்பு பாடநெறிகளைப் பின்பற்றுவதற்கு கீழ் வரும் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு உடன் படிககைகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

விவசாய சார்க் நிலையம் (SAC) மற்றும் விவசாய பட்டப் பின்படிப்புகளுக்கான நிறுவகத்தில் தொழிநுட்ப ஒத்துளைப்பு ஆகியவற்றுக்கிடையில் விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவகத்தில் கலாநிதி பட்டப்படிப்புகளை சார்க் விவசாய நிலையத்தில் நடவடிக்கைகளை இலங்கையில் அமுல்படுத்துதல்.

பேராதனை பல்கலைக்கழகத்திற்கும் கனடாவின் நியூபவுன்ட்லென்ட் ஞாபகார்த்தப் பல்கலைக்கழகத்திற்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைசாத்திடப்பட்டுள்ளது.

பேராதனை பல்கலைக்கழகத்தின விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவகத்திற்கும் பங்களாதேசினுடைய செல்ஹட் விவசாய பல்கலைக்கழகத்திற்குமிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்று கைசாத்திடப்பட்டுள்ளது.

கெப்னட் லங்கா கருத்திட்டம்
கெப்னட் லங்கா கருத்திட்டத்தை மேலும் ஒரு வருட காலப் பகுதிக்கு நீடித்துக் கொள்வதற்கு கெப்னட் லங்கா செயலகத்துக்கும் விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவகத்துக்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று கைசாத்திடப்பட்டது.

தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

இவ்வாண்டு காலப் பகுதிக்குள் குறிப்பிடப்பட்ட தோல்விகள் அவதானிக்கப்படவில்லை. மாணவர்களுக்கு வதிவிட வசதியில்லாத காரணத்தினால் மீளாய்வாண்டில் வெளிநாட்டு மாணவர்கள் நிறுவகத்தில் கல்வி கற்பதற்கு விண்ணப்பிப்பதில் பின்னடைவு காணப்பட்டது.

பல பிரச்சாரங்களும் விளம்பரங்களும் காணப்பட்ட பொழுதிலும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது புதிய அனுமதிகள் சற்றுக் குறைவாகவே காணப்பட்டன. எமது நிறுவனத்தில் காணப்படும் பட்டப்பின்படிப்பு கற்கைநெறிக்கு சமனான கற்கை நெறிகள் வேறு பல்கலைக்கழகங்களிலும் ஆரம்பிக்கப்பட்டதால் அதற்கு எதிர்காலத்தில் சில வருங்கால மாணவர்கள் ஈர்க்கப்பட்டுக் கொண்டு இருப்பது முக்கிய காரணமாக காணப்படுகின்றது.

உரிய ஆலோசனையாளர்களை இந்தக் காலத்தில் தேடிப் பிடித்துக் கொள்வது சிரமமாக உள்ள காரணத்தினால் நிறுவகத்தின் எட்டு நிறுமானப் பணிகளின் கருத்திட்டம் தாமதமாகி உள்ளன.

குறைந்த இளமானிப் பட்டதாரிகள் இத் துறையில் வெளியேறிக் கொண்டு இருப்பதனால் இத்துறையில் ஆராய்ச்சிகளில் உள்ளடங்கி இருக்கும் பகுதிகள் பட்டப் பின்படிப்புகளில் குறைந்து காணப்படுவதால் மற்றும் பட்டப் படிப்பினை தொடரும் மாணவர்களின் ஆராய்ச்சியைத் தொடரும் நேரம் போதாமையால் அவர்களினது படிப்பினை இடை நடுவில் விடுதல் இவற்றுக்கு காரணமாக காணப்படுகின்றது. பாடநெறி வேலைத் திட்டங்களுக்கும் பாடநெறி ஆராய்ச்சிகளுக்கும் நேரடியான தொடர்புள்ள பட்டப்படிப்புகளை உருவாக்குவதன் மூலம் கல்வியாண்டில் இருந்து இந்த நிலை மாற்றமடைந்து வந்துள்ளது.

ஆதாரவளத்திற்கு வசதியளிக்கும் ஆராய்ச்சி நிதி (RFF) மேம்படுத்துவதற்கு மாணவர்களினால் ஆராய்ச்சிகளினை அதிகரித்துக் கொண்டு RFF மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகளுக்கு வசதியளிக்கும் நிதி (RPFF) க்கு வழிகாட்டிகள் மற்றும் விண்ணப்பப் படிவங்கள் செயற்பாடுகளை இவ்வாண்டின் இறுதிப் பகுதிக்குள் மீளாய்வு செய்து முடிக்கப்பட உள்ளது.

எதிர்காலத் திட்டங்கள்

- சமூக வெகுஜன ஊடகங்களை வினைத் திறனுடன் பயன்படுத்தி புதிதாக உள்ளெடுக்கும் மாணவர்களை அதிகரிப்பது.

- மாணவர்களுக்கிடையில் அதிக பிரசித்தத்தை ஏற்படுத்தி RFF வசதியை அதிகரித்து அதிக நிதியை ஒதுக்கீடு செய்து ஆராய்ச்சி மாணவர்களுக்கும் - நிறுவகத்தின் திட்டத்திற்கும் ஏற்ப இந்த வசதிகளை செய்து கொடுத்தல்

- விவசாயப் பட்டப் பின்படிப்பு நிறுவகத்தில் வேறுபட்ட பாடநெறிகளுக்காக வெளிநாட்டு மாணவர்களை உடனுளைப்பு ஒப்பந்தங்கள் ஊடாக அனுமதிப்பது. எதிர்வரும் வருடங்களில் சில வெளிநாட்டு மாணவர்களை அனுப்புவதற்கு FAO வும் ஒத்துக் கொண்டுள்ளது.

- கொழும்பு கிளையில் மேலும் கற்கைநெறிகளையும் மற்றும் பயிற்சிப் பட்டறைகளையும் வழங்குவது.

- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்காக மேலதிக சர்வதேச நிதியை பெற்றுக்கொள்வதற்கு வெளிநாட்டு வருகைதரு பேராசிரியர்களை அழைத்து கல்வி நிகழ்ச்சித் தொடர்களை உடனுளைப்பு ஆராய்ச்சிகளுடன் நடத்துதல்

- ஒரு பல்துறை ஆசிரியர் மதிப்பாய்வீட்டு முறைமையினை அறிமுகப்படுத்துதல்.

- வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுடனும் நிறுவகங்களுடனும் பரஸ்பர நல உடனுளைப்புகளுடன் கட்டி எழுப்பி மேலதிக புரிந்துணர்வு உடன்படிக்கைகளை கைசாத்திடுதல்.

- விருதளிப்பு முறைமைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் புதிய செயலூக்கத் திட்ட முறைமைகளை விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் பணிக்குழுவினருக்கு ஆரம்பித்தல்.

- வெளி நிபுணர்களின் வழிகாட்டுதல்களை பரந்த வெவ்வேறு தேவைப்பாடுகளை கவனித்துக் கொள்வதற்கு நிறுவகத்தின் MIS ஐ மேம்படுத்தி மேலும் அதே நேரம் ஆட்டோமொபைல், மாணவர் / பாவனையாளர் நட்பினை வினைத்தின் மிக்க முகாமைத்துவ முறைமையில் அறிமுகப்படுத்துதல்.

- நிர்மானப்பணி - மூலதனம்
  நிறுவகத்தின் முகாமைசபை நிர்மானப் பணியை ஆரம்பிப்பதற்கு திட்டமிட்டு நிறுவகத்தின் கீழ் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தி மாணவர்களுக்கும் பணிக்குழுவினருக்கும் உகந்த சூழலை வழங்க உள்ளது. தற்போதுள்ள சிற்றூண்டிச் சாலை மேம்படுத்தல், ஒரு சுறுசுறுப்பான வகுப்பறை முறைமைக்கு மாற்றுதல் அரங்கத்தை மேம்படுத்தல், விவசாய பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் வாடி வீட்டினை புதுப்பித்தல் ஆகியன 2018 ஆம் ஆண்டு செய்யவிருக்கும் கருத்திட்டத்தின் சில குறிக்கோள்களாகும்.

3.10.2 விஞ்ஞானப் பட்டப்பின் நிறுவகம் (PGIS)

(பணிப்பாளர் - பேராசிரியர் எச்.எம்.டி.என். பிரியந்த)

அறிமுகம்

பேராதனைப் பல்கலைக்கழகத்துடன் இணைந்த இலங்கையின் தேசிய நிறுவகமாக தற்போது விஞ்ஞானத் துறையில் 2300 மாணவர்களுக்கு சேவை வழங்கி வருவதுடன், இலங்கையில் விஞ்ஞான துறையில் விஞ்ஞானக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மேம்படுத்தல் நோக்காகக் கொண்டு 1996 ஆம் ஆண்டில் உயர்கல்வி அமைச்சினால் தாபிக்கப்பட்டது. பட்டப் படிப்பு துறையில் அனுபவங்களை அதிகரித்தல் பல்வேறு விஞ்ஞான துறைகளில் பட்டப்பின் படிப்பு ஆலோசனைகள், பயிற்சிகள் மற்றும் ஆராய்ச்சி என்பவற்றை மேம்படுத்தலும் வழங்குதலும் விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் அடிப்படை நோக்கங்களாக காணப்படுகின்றன.

அரச மற்றும் தனியார்துறை நிறுவனங்களின் தேவைக்கேற்றவகையில் விஞ்ஞான முதுமானிப் பட்டம், தத்துவவியல் முதுமானிப்பட்டம், மற்றும் கலாநிதிப் பட்டங்களையும் அத்துடன் பட்டப்பின்படிப்பு டிப்ளோமா பட்டம், சான்றிதழ் கற்கை நெறிகள், என்பவற்றை நடாத்துவது அதன் பிரதான செயற்பாடாகவுள்ளதுடன், அதற்கு மேலதிகமாக விஞ்ஞான பட்டப்பின் சேவைக்கால பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், குறுங்கால கற்கைகள், பயிற்சிப் பட்டறைகள் போன்றவற்றையும் அவ்வப்போது நடாத்துகின்றது. விஞ்ஞானப் பட்டப் படிப்பு நிறுவகத்தினால் ‘பிரயோகம், விஞ்ஞானரீதியில் எழுதுதல் தரவு கையாளல் மற்றும் முகாமைத்துவம் ஆகிய பிரசித்தி பெற்ற குறுங்கால நிகழ்ச்சிகளையும் நடாத்துகின்றது. இந் நிகழ்ச்சிகளானவை விஞ்ஞான பட்டப்பின் படிப்பிற்கான நிறுவகத்தின் 11 கற்கைச் சபைகளின் மூலமாக பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞான பீடத்தின் நெருங்கிய ஒத்துழைப்புடனும் நடாத்தப்படுகின்றன. பேராதனைப் பல்கலைக்கழகத்தின் ஒன்பது பீடங்களிலிருந்தும் வேறு பல்கலைக்கழகங்களிலிருந்தும், நிறுவகங்களிலிருந்தும் விரிவுரையாளர் குழாமிற்கான அங்கத்தவர்கள் பெறப்படுகின்றனர். இந் நிறுவகமானது உள்நாட்டு தொழில் துறைக்கும் பொது, அரச/தனியார் நிறுவனங்களுக்கும் ஆலோசனை சேவைகளை வழங்குகின்றது. இருதரப்பு நாடுகளுக்கிடையேயான கல்விசார் கூட்டிணைவினூடாக சர்வதேச விசேட செயலமர்வுகள் நடாத்தப்படுகின்றன.

விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் மற்றுமொரு பிரதான செயற்பாடு உள்நாட்டு, வெளிநாட்டு கல்வியியலாளர்களின் பங்களிப்புடன் விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் ஆய்வு மாநாடுகள், நீரின் தரம் மற்றும் மனித சுகாதாரம் என்கின்ற தலைப்பில் சர்வதேச மாநாடு என்பனவற்றை நடாத்துவதாகும். 2017 ஆம் ஆண்டில் நூதனமான ஆய்வுக் கண்டுபிடிப்புக்களுடன் 200 இற்கு மேற்பட்ட ஆய்வாளர்கள் தமது கண்டுபிடிப்புக்களை முன் வைத்தனர். விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகம் தனது பங்குதாரர்களுக்கு நன்கு பயிற்றுவிக்கப்பட்ட தனது பதவியணியினர் மூலமாக அர்பணிப்புடன் சிறந்த சேவையை வழங்குகின்றது. அதன் சர்வதேசமயமாக்கல் கடந்த சில வருடங்களில் வலுவானதொன்றாக மாறியுள்ளது. 2020 ஆம் ஆண்டளவில் விஞ்ஞானத்துறையிலும் ஆராய்ச்சி செயற்பாடுகளிலும் ஆசியாவின் சிறந்த பட்டப்பின் நிறுவனமாக வர வேண்டும் என்கின்ற தனது நோக்கத்தை எய்துவதற்காக செயற்படுகின்றது.

விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் ஆய்வுகூட அபிவிருத்தி

விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தில் அனைத்து ஆய்வு கூடங்களினாலும் மாணவர்களுக்கு சிறந்த சேவை வழங்கப்படுகின்றது. ஆய்வுகூடங்களை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது தொடர்பான விபரங்கள் பின்வருமாறு

- **கருவிமைய ஆய்வுகூடம் I:** அநேகமான உபகரணங்கள் அதாவது அணுக்காலல் திருசியமானி, வாயு நிறப்பதிவியல், முனைவாக்கும் நுணுக்குக்காட்டி, மின் இரசாயன பகுப்பாக்கி, நிறமாலை போன்றவை தற்பொழுது இந்த ஆய்வு கூடத்தில் வைக்கப்பட்டுள்ளன.
- **கருவிமைய ஆய்வுகூடம் II:** இது 2016 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் பிரதான நோக்கம் உயிர் இரசாயனவியல், உயிர்தொழிநுட்பம், மூலக்கூறு உயிரியல் போன்ற துறைகளில் ஆய்வு நடவடிக்கைகளை வலுப்படுத்துவதாகும். PCR பகுப்பாய்வு கருவி, மையநீக்கி, கலக்கி, நீர்த்தொட்டி, மற்றும் சில நிறமாலைகள் என்பன தற்போது காணப்படுகின்றன. மற்றும் ஜெல் ஆவணமாக்கல் உபகரணம், கழி உயர் நீர் சுத்திகரிக்கு முறைமை என்பனவற்றை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- **GIS ஆய்வு கூடம்**: GIS ஆய்வு கூட வசதிகள் அண்மைக் காலத்தில் பரந்த அளவில் விஸ்தரிக்கப்பட்டது. GIS மற்றும் தொலை தூர உணர்வு விஞ்ஞான முதுமானி நிகழ்ச்சித்திட்டத்தில் கீழ் அதிக எண்ணிக்கையான மாணவர்கள் பதிவு செய்துள்ளனர். கணணிப் பிரயோகப் பயிற்சியை அடிப்படையாகக் கொண்ட பூகோள தகவல் செயலாக்கம் மற்றும் எண்ணியல் சார்ந்த மொடலிங் ஆகியவற்றிற்கு இந்த நன்கு வசதியளிக்கப்பட்ட GIS ஆய்வுகூடம் பயன்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

- **கணனி ஆய்வு கூடம் I**: இந்த கணனி ஆய்வு கூடம் ஒரே நேரத்தில் 80 மாணவர்களுக்குப் பயிற்சியளிக்கக் கூடியவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.
- **கணணி ஆராய்ச்சி ஆய்வுகூடம் :** இந்த ஆய்வு கூடம் ஆறு மாணவர்களுக்கு கணணி விஞ்ஞானத்தில் தமது ஆய்வுகளை செய்து கொள்ளக் கூடியவாறு மேம்படுத்தப்பட்டுள்ளது.
- **தரவு விஞ்ஞான அலகு**: விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 20 ஆண்டு நிறைவை முன்னிட்டு இவ்வலகு 2016 ஒக்டோபர் 09 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. இங்கு 15 கணணிகள் காணப்படுகின்றன. உயர் வலுவையுடைய கணணிகளை கொள்வனவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.
- **இரசாயன ஆய்வுகூடம்**: பகுப்பாய்வு இரசாயனவியல், சுற்றாடல் விஞ்ஞானம் மற்றும் விஞ்ஞானக் கல்வி ஆகிய துறைகளில் விஞ்ஞான முதுமானி பாடத்திட்டத்திற்காக விஞ்ஞான ஆய்வுகூடத்துடன் தொடர்புடைய வகுப்புக்களை நடாத்துவதற்காக கண்ணாடி உபகரணங்கள் மற்றும் பாவனைப்பொருட்கள் என்பன கொள்வனவு செய்யப்பட்டுள்ளன.
- **பாறை மற்றும் மண் தொடர்பான இயக்கவியல் ஆய்வுகூடம்**: இவ்வாய்வுகூடம் தற்பொழுது அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றது. இதனை அபிவிருத்தி செய்த பின்னர், பொறியியல் நிலவியல், மற்றும் நீரியல் விஞ்ஞானம் ஆகிய துறைகளில் முதுமானி நிகழ்ச்சித்திட்டத்தில் கீழ் பிரயோகப் பயிற்சிகளை மாணவர்களுக்கு நடாத்துவதற்கும் மற்றும் மக்கள் சேவையை வழங்குவதற்கு இந்த ஆய்வுகூடம் ப யன்படுத்தப்படும்.
- **தகவல் தொழிநுட்ப ஆய்வுகூடம்:** தகவல் தொழிநுட்ப ஆய்வு கூடத்தினை விருத்தி செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இந்த மேம்படுத்தல் நடவடிக்கைகள் முடிந்தவுடன் 75 மாணவர்கள் ஒரே நேரத்தில் இந்த ஆய்வு கூடத்தை பயன்படுத்த முடியும்.

  விஞ்ஞானக் கல்வி துறையில் தகவல் தொழிநுட்பத்தில் (IT) விஞ்ஞான முதுமானி பாடத்திட்டத்திற்காகவும் பட்டப் பின்படிப்பில் டிப்ளோமா பாடத்திட்டத்திற்காகவும் இவ் ஆய்வுகூடம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

எதிர்கால திட்டங்கள்

விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தின் தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்றுக்கிணங்க செயற்பாடுகளானவை எதிர்வருகின்ற சில வருடங்களுக்காக திட்டமிடப்பட்டுள்ளன. கிடைக்கும் நிதிக்கமைவாக பயிற்சிப்பட்டறைகள், மாநாடுகள், பரீட்சைகள், விரிவுரைகள் ஆகியன பொதுவாக காணப்படும் உபகரணங்கள் / பாத்திரங்கள் உட்பட 2018 ஆண்டில் பல உருப்படிகளின் கொள்முதலுக்கு நவம்பர் 11 ஆம் திகதி நடைபெற்ற 138 ஆவது முகாமைத்துவ சபையில் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இல	கற்கைச் சபை	கோரப்பட்ட உபகரணங்கள்
1	புள்ளிவிபரவியல் மற்றும் கணணி விஞ்ஞானம்	கணணிகள்
2	உயிரியல் இரசாயணம் மற்றும் மூலக்கூற்று உயிரியல்	ஆய்வுகூட நிறமானி
3	இரசாயண விஞ்ஞானங்கள்	நீர் சுத்திகரிக்கும் அமைப்பு முறை
4	புவி விஞ்ஞானங்கள்	பூகோள மின்னியல் தடுப்புத்திறன் உபகரணம் (லன்ட் பட முறைமை)
5	சூழல் விஞ்ஞானம்	எக்ஸ் - கதிர் ∴புலோரசனஸ் நிறமாலை
6	கணிதம்	மல்டி மீடியா அலகுகள் (03) மடிக்கணணிகள் (03)
7	பௌதீகவியல்	ஓட்டோலெப் என் தொடர் பொட்டென்ஸ்டட்
8	தாவர விஞ்ஞானங்கள்	ஒலிசாதனம் நுண்ணோக்கி
9	விஞ்ஞானக் கல்வி	மல்டிமீடியா அலகுகள் (07) மற்றும் மடிக்கணணிகள் (06)
10	விலங்கியல் விஞ்ஞானங்கள்	பைனகுலர் நுண்ணோக்கிப் (10)
11	பொதுவான உபகரணப்பட்டியல்	1. கண்ணொளி மாநாட்டு முறைமை 2. மின்னியல் சிற்றூண்டிச்சாலை சூடாக்கும் சாதனத் தொகுதி 3. மென்பொருள் பொதி – கருத்து திருட்டையும் மற்றும் இலக்கணத்தையும் இலக்கரீதியாக பரீட்சித்தல் 4. தரமான வெண்பலகை (02) 5. தஸ்தாவோஜி புகைப்படக் கருவி (01) 6. கணக்கியல் பொதி

2018 ஆம் ஆண்டில் குறித்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு கீழ்வரும் நடவடிக்கைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளவையாக காணப்படுகின்றது. :

- மேற்படி ஆய்வுகூடங்களை மேலும் அபிவிருத்தி செய்தல். விசேடமாக கருவிமைய ஆய்வுகூடத்தை சர்வதேச தரத்திற்கு ஏற்றவாறு விஸ்தரித்தலுக்கான அதிக தேவைப்பாடுள்ள உபகரணங்கள் கொள்முதல் செய்யப்பட உள்ளன.

- மாணவர் சேவை நிலையம் ஒன்று, உணவகம் ஒன்று, ஊழியர்களுக்காக அறையொன்று, கலந்துரையாடல் அறை ஒன்று, வாசிப்பு அறை ஒன்று, மற்றும் மாநாட்டு அறை ஒன்று, ஆய்வுகூடம் என்பனவற்றை நிறுவுவதற்காக விஞ்ஞானப் பட்டப்பின்படிப்பு நிறுவகத்தில் நான்கு ஆய்வுகூடத்தினை உள்ளடக்கிய புதிய கட்டிடத் தொகுதியொன்றை நிர்மானித்து அதற்கு தேவைப்படும் தளபாடங்களும் மற்றும் கோரப்படும் ஏனைய வசதிகளும் பெற்றுக் கொடுக்கப்படவிருக்கின்றன.

- விஞ்ஞான முதுமானி, தத்துவவியல் முதுமானி மற்றும் கலாநிதிப் பட்டப்படிப்பு நிகழ்ச்சிகளுக்கு அனுமதிக்கும் மாணவர் தொகையை அதிகரித்தல்.

- தேசிய கைத்தொழில் துறையின் கேள்விகளுக்கு ஏற்றவாறு புதிய விஞ்ஞான முதுமானிப் பட்டங்களை அறிமுகப்படுத்துதல்.(உதா.: உயிரியல் வைத்திய விஞ்ஞானங்கள், தரவு விஞ்ஞானம், இலத்திரனியல் பொருள்கள் மற்றும் உபகரணங்கள், மின்னிரசாயன விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம், மருந்தியல் விஞ்ஞானம், பௌதீகவியல் மற்றும் பிரயோக புவியீர்ப்பு விசை)

- தரவு விஞ்ஞான துறையை தாபித்ததன் மூலம் நாட்டிற்கு சேவை வழங்குதல்.

- மேலும் வெளிநாட்டு தொழில் நிபுணர்களுடன் விஞ்ஞானப்பட்டப் பின்படிப்பு நிறுவகத்தினால் ஏற்பாடு செய்யப்படுகின்ற ஆராய்ச்சி மகாசபை, மற்றும் சர்வதேச ஆய்வுக் கலத்தரங்கு ஆகியவற்றினை தொடர்ந்து நடாத்துதல்.

- ஏனைய தேசியமற்றும் சர்வதேச நிறுவனங்களுடன் புரிந்துணர்வு உடன்படிக்கைகளை (MoUs) ஸ்தாபித்தல்

- வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள்/ நிறுவகங்களின் பங்களிப்புடன் நிறுவகத்தை வலுப்படுத்துதல்.

- தேசிய தேவைக்கான ஆராய்ச்சி நிகழ்ச்சிகளை விஸ்தரித்தல்

- விஞ்ஞான பட்டப் பின்படிப்பு நிறுவகத்தில் புதிய பதவி நிலைகளை உருவாக்குதல்

- கல்விசாரா அணியினருக்கு பயிற்சி வழங்குதல்

- தற்போது காணப்படும் முறைமையை மீளாய்வு செய்து மற்றும் நடவடிக்கை யோசனைகளை (SoP) தயாரித்தல்

- கணக்கியல் பிரிவில் கணக்கியல் மென்பொருள் பொதி மேம்படுத்தல் முறைமையினை ஸ்தாபித்தல்

3.10.3 மானுட சமூகவியல் பட்டப்பின் படிப்பு நிறுவகம் (PGIHS)

(பணிப்பாளர் - கலா.ஜே.எம்.ஏ ஜயவிக்கிரம்)

அறிமுகம்

மானுட சமூகவியல் பட்டப்பின் படிப்பு நிறுவகம் (PGIHS) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க நியதியின் கீழ் கட்டளைச்சட்டம் 24 A இன் பிரகாரம் உயர் கல்வி அமைச்சினால் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் துறையில் உயர் கல்வியை வழங்குவதனையும், மேம்படுத்துவதனையும் விருத்தி செய்வதனையும் நோக்காகக் கொண்டு 2014 ஆம் ஆண்டு ஒரு தேசிய நிறுவகமாக தாபிக்கப்பட்டது. இந்நிறுவகம் சமூகம் தொடர்பான கடமையுணர்வுடன் சுயாதீனமான சிந்தனையுடன் தொழிற்படக் கூடிய கல்வியலாளர்களை உருவாக்குவதற்காக மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான கல்வி, ஆய்வு, ஆக்கதிறனான சிந்தனை ஆகிய துறைகளில் சிறந்த மையமாக உருவாக வேண்டும் என்பதனை இலக்காகக் கொண்டு தொழிற்படுகின்றது.

PGIHS ஆல் திட்டமிடப்பட்டுள்ளவைகள்

- சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியவாறு ஏனைய துறைகளுடன் இணைந்து மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் துறையில் உயர் கல்வி வாய்ப்பை வழங்குதல்.
- மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் துறையில் உயர் கல்வி வாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் தொழில்சார்சார் வல்லுனர்கள், பயிற்றுவிப்பாளர்கள், தொழில் வழங்குனர்கள், அக்கறை செலுத்தும் தரப்பினரிடையே சிறந்த இடைத் தொடர்பை ஏற்படுத்துதல்.
- ஆராய்ச்சி நடவடிக்கைகளின் உற்பத்தி திறன் மற்றும் உயர்தரங்களைப் பேணுவதற்காக வெளியீடுகள் மற்றும் முன்வைப்புக்கள் மூலமாக பட்டப்படிப்பு மாணவர்கள் மற்றும் நிறுவகத்தின் ஏனைய ஆராய்ச்சியாளர்களினால் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சி நடவடிக்கைகளை ஊக்குவித்தல்.
- உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தனியார், குழுக்கள் மற்றும் நிறுவனங்களின் அக்கறை / பொறுப்புக்களுடன் உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இடையே செயற்றிறனான இணைப்புக்களை உருவாக்குதல்.
- குறுகிய நிகழ்ச்சித்திட்டங்கள், மாநாடுகள், கருத்தரங்குகள் மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகள் என்பனவற்றின் மூலம் அறிவைப் பரப்புதல் மற்றும் பரிமாறுதல்.

நிறுவகம் பின்வரும் பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குகின்றது:
பட்டப்பின் டிப்ளோமா
கலை முதுமானி
கலை முதுமானி பிரயோக பொருளியல்
கல்வி முதுமானி
அபிவிருத்தி பயிற்சி முதுமானி
தத்துவ முதுமானி
தத்துவத்தில் கலாநிதி

மானுட சமூகவியல் பட்டப்பின் படிப்பு நிறுவகம் (PGIHS) பின்வரும் துறைகளில் பயிற்சிகளை வழங்குகின்றது: அரபு, கணக்கியல், தொல்லியல், பௌத்த கற்கை, ஒப்பீட்டு சமயம், பொருளியல், கல்வி, ஆங்கிலம், அழகியற் கலைகள், புவியியல், கிரேக்க மற்றும் உரோமக் கற்கை (முன்பு மேற்கத்தைய மரபியல் கலாச்சாரம் என அழைக்கப்பட்டது), இந்து நாகரீகம், வரலாறு, சர்வதேச உறவுகள், இஸ்லாமிய நாகரீகம், சட்டம், முகாமைத்துவம், பாலி, தத்துவம், அரசியல் விஞ்ஞானம், உளவியல், சமஸ்கிருதம், சிங்களம், சமூகவியல், புள்ளிவிபரவியல் மற்றும் தமிழ்.

அடைவுகள்

2015 ஆம் ஆண்டு மே மாதம் முதலாவது பணிப்பாளர் நியமிக்கப்பட்டது தொடக்கம் PGHIS செயற்றிறனான முன்னேற்றத்தைக் காட்டுகின்றது. முகாமைத்துவக் குழுவும் கற்கைக் குழுவும் தாபிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகின்றது. 2015 மே தொடக்கம் 2016 ஏப்ரல் வரையான நிறுவகத்தின் செயற்றிட்டம் முகாமைத்துவக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நிறுவகத்தின் கூட்டுத்திட்டம் தயாரிக்கப்படுகின்றது. 2015/16 கல்வி ஆண்டிற்கு முன் பட்டப்பின் கல்விக்காக கலை பீடத்தில் பதிவு செய்து கொண்ட 2764 மாணவர்களை மானுட சமூகவியல் பட்டப்பின் படிப்பு நிறுவகம் உள் வாங்கிக் கொண்டுள்ளது. மேற்படி மாணவர்களின் கல்விசார் நடவடிக்கைகள் தொடர்பான அனைத்துப் பொறுப்புக்களையும் நிறுவகம் பொறுப்பேற்றுள்ளது. கடந்த வருடம் 500 மாணவர்கள் பட்டப்பின் கல்வி டிப்ளோமா, முதுமானி, கலாநிதிப் பட்டங்களை நிறைவு செய்துள்ளனர்.

பல்கலாசார சமூகத்தில் மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக மானுட சமூகவியல் பட்டப்பின் படிப்பு நிறுவகம் (PGIHS) தென் கிழக்கு நோர்வே பல்கலைக்கழகத்துடன் இணைந்து முன் வைத்த உத்தேச செயற்றிட்டத்திற்காக 2016 ஆம் ஆண்டில் NORPART நிதியத்தினால் நிதி உதவிகளைப் பெறும் வாய்ப்பைப் பெற்றுக் கொண்டது. 2018 ஜனவரியில் ஆரம்பித்து ஐந்து வருடங்கள் இச செயற்றிட்டத்தை செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இச் செயற்றிட்டம் மாணவர் நகர்வு, பதவியணியினர் நகர்வு, நிகழ்ச்சித்திட்ட அபிவிருத்தி மற்றும் ஆய்வும் எல்லை நடவடிக்கைகளும் என்பன தொடர்பாக இச் செயற்றிட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

செயற்றிட்டத்தின் கடந்த ஒரு வருட காலத்தினுள் மானுட சமூகவியல் பட்டப்பின் படிப்பு நிறுவகம் பல்துறைக் கட்டமைப்பு தொடர்பான புதிய பட்டக்கல்வி நிகழ்ச் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. நீடித்து நிற்கும் சுற்றுலாத்துறை மற்றும் சர்வதேச உறவுகள் தொடர்பாக விஞ்ஞான முதுமானி பாடத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு மானுட சமூகவியல் பட்டப்பின் படிப்பு நிறுவகம் பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ளது. ஏனைய சில நிகழ்ச்சி மானுட சமூகவியல் பட்டப்பின் படிப்பு நிறுவகம் மானுட சமூகவியல் பட்டப்பின் படிப்பு நிறுவகம் திட்டத்தை ஆரம்பிப்பதற்கும் முயற்சிகள் நடைபெறுகின்றது.

எதிர்காலத் திட்டங்கள்

நிறுவகம் பல்துறையிலும் பாடநெறிகளை அறிமுகம் செய்வதன் மூலம் தனது பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை விரிவாக்க உத்தேசித்துள்ளது. சமூகத்தின் குறிப்பிட்ட பகுதிகளின் தேவைகள் மற்றும் பொருளாதார துறைகளின் தேவைகளை அடிப்படையாகக் கொண்டு புதிய பட்டப்பின் படிப்பு பாடநெறிகள் அறிமுகப்படுத்தப் படவுள்ளன. 2017 ஆம் ஆண்டில், PGIHS ஆனது நிலைத்து நிற்கக் கூடிய சுற்றுலாத்துறை, சர்வதேச உறவுகள், சமூக அபிவிருத்தி, பாலின ஆய்வு, சுற்றாடல் முகாமைத்துவம், பிராந்திய அபிவிருத்தி மற்றும் திட்டமிடல், மொழி பெயர்ப்புக் கற்கை, ஒப்பீட்டு சமயம், பொதுக் கொள்கை முகாமைத்துவம், பண்பறி பொருளியல், சுகாதார பொருளியல் ஆகிய கற்கை நெறிகளை அறிமுகப்படுத்தவதற்கு ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இந்த பாடநெறிகள் அடுத்து வரும் ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் அறிமுகப்படுத்தப்பட

வெளியீடுகள் மற்றும் முன் வைப்புக்கள் என்பனவற்றின் உயர் தரத்தைப் பேணுவதன் மூலமாக நிறுவகம் பட்டதாரி மாணவர்களினால் மேற்கொள்ளப்படும் ஆய்வு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கும் உதவுவதற்கும் எதிர்பார்க்கின்றது. இம் முயற்சியானது நிறுவகத்தின் தற்கால நடவடிக்கைகளையும் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் விரிவுபடுத்தும். நிறுவகமானது தனது மாணவர்களதும் பதவியணியினரினதும் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் துறையில் பட்டப்பின் கல்வியையும் ஆராய்ச்சி நடவடிக்கைகளையும் விரிவுபடுத்துவதற்காக உள்நாட்டு மற்றும் அல்லது வெளிநாட்டு தனிப்பட்டவர்கள், குழுக்கள் மற்றும் முன்னனி அமைப்புக்கள் என்பனவற்றுடன் செயற்றிறனான தொடர்புகளை ஏற்படுத்துதல் மற்றும் அல்லது பொறுப்புக்கள் என்பனவற்றின் மூலமாக உயர் கல்விக்கும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கும் இடையே இணைப்பை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கின்றது. அமைச்சரவைகள், திணைக்களங்கள் மற்றும் முகவர் நிலையங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தனியார் துறை மற்றும் ஏனைய உயர் கல்வி நிறுவனங்கள் மற்றும் பயிற்சி நிறுவகங்கள் போன்ற உள்நாட்டு அமைப்புக்களுடன் இணைப்பை ஏற்படுத்துவதன் மூலம் நிறுவகமானது எமது பட்டப்பின் கல்வி நடவடிக்கைகளிலும் ஆராய்ச்சி நடவடிக்கைகளிலும் தரத்தை மேம்படுத்த உத்தேசித்துள்ளது. வெளிநாட்டு நிறுவகங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதன் மூலம் எமது பட்டப்பின் படிப்பு நடவடிக்கைகளுக்கு வெளிநாட்டு சந்தையில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க உத்தேசித்துள்ளதுடன், எமது மாணவர்களுக்கு வெளிநாட்டில் கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. அறிவுப்பரவல், அறிவுப் பரிமாற்றம் மற்றும் புத்தாக்கம் என்பன தாழ்நிலையிலும் போதிய மட்டத்திலும் இல்லை எனின் சமூகத்தின் அறிவாக்கம் தாழ் மட்டத்திலேயே காணப்படும். மேற்படி தாக்கங்களை அகற்றுவதற்கு நிறுவகம் அறிவைப் பரப்புவதற்கும் பரிமாறுவதற்கும் கருத்தரங்குகளை விரிவுபடுத்துதல், மாநாடுகளை நடாத்துதல், சமூகத்திற்கு ஆராய்ச்சிகளின் விளைவுகளைத் தெளிவுபடுத்தி பிரசுரங்களை மேற்கொள்ளுதல் போன்ற அவசியமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

3.11 பேராதனைப் பல்கலைக்கழக நூலக வலையமைப்பு

(பதில் - நூலகர் திரு ஆர். மகேஸ்வரன்)

அறிமுகம்

பேராதனைப் பல்கலைக்கழக நூலகமானது 1921 ஆம் ஆண்டு இலங்கை பல்கலைக்கழக கல்லூரி நூலகமாக ஆரம்பிக்கப்பட்டது. இது 1952 இல் பேராதனைக்கு மாற்றப்பட்டதோடு தற்போதுள்ள கட்டிடத்திற்கு 1960 இல் மாற்றப்பட்டது. பேராதனைக்கு மாற்றப்பட்ட பின்பு நூலகமானது பிரதான நூலகம் மற்றும் ஏழு கிளை நூலகங்கள் விவசாய, இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள், பல்மருத்துவம், பொறியியல், மருத்துவம், விஞ்ஞானம், மிருக வைத்தியம் என்ற பீட நூலகங்களையும் கொண்ட ஒரு வலையமைப்பாக அபிவிருத்தி செய்யப்பட்டது. ஒன்பதாவது நூலகமானது மஹாஇலுப்பலம விவசாய பீட உப பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. கிளை நூலகங்கள் அவற்றுக்குரிய குறிப்பிட்ட பீடங்களில் காணப்படுகின்றன.

பேராதனைப் பல்கலைக்கழக நூலக வலையமைப்பானது இலங்கையின் மிகப்பழைய மற்றும் மிகப்பெரிய நூலகமாகும்.

தொலைநோக்கு, செயற்பணி, நோக்கங்கள் தொடர்பான விபரங்களைப் பெற்றுக் கொள்வதற்கு தயவுசெய்து கீழுள்ள இணைய முகவரியில் பார்க்கவும்.
http://www.lib.pdn.ac.lk/aboutus/vission_mission.php?about

அடைவுகள்

தற்போதுள்ள பிரதான நூலகக் கட்டிடத்தில் விஸ்தரிப்பானது விஸ்தரிக்க வேண்டியுள்ள நூலகத்தின் வளர்ந்து வரும் நூலக பொருட்களின் சேகரிப்புகளை உள்ளடக்குவதற்கும் மற்றும் தரமான வசதிகளை வழங்குவதற்றும் மற்றும் வாசகர்களுக்கான சேவைகளுக்குமாக தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த கட்டிட நிர்மானப்பணியானது உப வேந்தர் பேராசிரியர் உப்புல் பீ. திசாநாயக்க வின் ஆதரவின் கீழ் ஆகஸ்ட் மாதம் 18 ஆம் திகதி இதற்கான அடிக்கல் நாட்டும் விழாவுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது. பல்கலைக்கழகத்தின் நலனுக்காக நூலக வலையமைப்பில் இது ஒரு குறிப்பிடத்தக்கதும் பயனுள்ளதுமான அடைவாகும்.

KOHO சுழற்சி முறை மென் பொருள் தொகுதியானது இந்த வருடத்தில் வெற்றிகரமாக தொடங்கப்பட்டு முதலாவது படி நிலையாக ஆரம்பத்தில் கல்விசார் பணிக்குழுவினருக்கு இதன் மூலம் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டு, எதிர் காலத்தில் விஞ்சியுள்ள நூலக சமூகத்தினரையும் முழுமையாக இந்த சுழற்சி முறை மென்பொருள் தொகுதிக்குள் உள்ளடக்கம் செய்து பிராதன நூலகத்தில் சேவையைப் பெறும் சகலரையும் உள்ளடக்க முடியும். உப வேந்தர் பேராசிரியர் உப்புல் பீ. திசாநாயக்க ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி சுழற்சி முறைத் தொகுதியை செயற்படுத்தி வைத்தார். நிறுவகங்கள் ரீதியான களஞ்சியம் அல்லது டிஜிட்டல் நூலகமானது 5700 சுருக்கங்களை உள்ளடக்கி டீ ஸ்பேஸ் மென் பொருளைப் பயன்படுத்தி வெற்றிகரமாக பராமரிக்கப்பட்டும் மேம்படுத்தப்பட்டும் உள்ளது. நூலக வலையமைப்பில் இந்த நிறுவன ரீதியான களஞ்சியமானது. இலங்கை பல்கலைக்கழகங்களுக்கிடையில் இணையத்தள வரிசையில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டமைக்கு முக்கிய காரணியாக பங்களிப்பு செய்துள்ளது. கடந்த வருட அறிக்கையில் குறிப்பிட்ட விதத்தில் சகல பீட நூலகங்களும் நூலக பொருட்கள் கணக்கெடுக்கும் கருத்திட்டத்தில் கருத்தில் கொள்ளப்பட்டதுடன் மஹா இலுப்பல்லமையில் உள்ள உப வளாக நூலகமும் உள்ளடக்கப்பட்டு வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

சிரேஸ்ட பதவியணி உறுப்பினரான திருமதி சுரேனி வீரசிங்க நூலகமற்றும் தகவல் விஞ்ஞானத்தில் தனது பட்டப் பின்படிப்பை முடித்ததுடன் கொழும்பு பல்கலைக்கழகத்தின் நூலக மற்றும் தகவல் விஞ்ஞானத்திற்கான தேசிய நிறுவகத்தின் விருதினையும் பெற்றுக் கொண்டார். கலாநிதி (திருமதி) சி. என். கே. அலஹகோன் 2017/2018 வருடத்திற்கான இலங்கைப் பல்கலைக்கழக நூலகர்கள் சங்கத்தின் உப தலைவியாக தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் மேலும் இலங்கை நூலகர் சங்கத்தின் கல்விசார் நூலகக் குழுவை இணைப்பதற்கும் தலைமை வகிப்பதற்கும் தெரிவு செய்யப்பட்டார்.

தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

- புதிய நூலகக் கட்டிடத்தின் ஆரம்ப திட்டப் படத்தில் குறித்த ஒப்புதல்கள் இன்மையால் குறித்தபடி அப்பணியை ஆரம்பிப்பதில் சற்று காலதாமதம் ஏற்பட்டது. எவ்வாறு இருந்த பொழுதிலும், பணித்துறைவர்களும் மற்றும் வடிவமைப்பாளர்களும் ஒருமித்த கருத்துடன் இணக்கப்பாட்டிற்கு வந்ததனை அடுத்து நிர்மானப்பணி ஆரம்பிக்கப்பட்டது.

- கல்விசார் அணியினருக்கு மட்டும் தற்பொழுது தன்னியக்கமாக்கப்பட்ட நூலக சுழற்சி முறை சேவை வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. இந்தப் பணி குறுகிய எதிர் காலத்தில் எஞ்சியுள்ள பல்கலைக்கழக சமூகத்திற்கு விசேடமாக மாணவர்களுக்கு வழங்கப்பட உள்ளது. மாணவர்களுக்கும் ஏனைய வாசகப் பிரிவினருக்கும் பொதுவான பார்கோடு அடையாள அட்டை வழங்கிய பின்னர் மிக விரைவில் இச் சேவை வழங்கப்பட உள்ளது.

- குறித்த சில நடைமுறைப் பிரச்சினைகளை எதிர் நோக்கிய காரணத்தினால் நூலக தானியங்கும் முறை தாமதமாகியுள்ளது. தும்பறை இரவல் சேகரிப்பு தவிர்ந்த ஏனைய அனைத்து இரவல் நூல்களும் பார் கோட் அடையாளமிடப்பட்டுள்ளன. DDC விடய பகுப்பாய்விற்கு அமைய தும்பறை சேகரிப்பில் உள்ள நூல்கள் பேராதனை சேகரிப்பிலுள்ள பகுப்பாக்க இலக்கங்கள் மிகவும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இதனால் நூலக முகாமைத்துவம் பேராதனை சேகரிப்புகளுக்கு அமைவாக தும்பறை சேகரிப்பு நூல்களை மீள் பகுப்பாக்கம் செய்வதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இதனால் தானியங்கி சுழற்சி முறைக் கருத்திட்டத்தை முடிவிற்கு கொண்டு வருவது தாமதமாகியுள்ளது. தும்பறை சேகரிப்பின் பார்கோடின் மீளமைப்பும் மற்றும் ஒதுக்கீடும் மிக விரைவில் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

- பேராதனைப் பல்கலைக்கழகம் இணையச்சேவைகளில் முதலாம் இடத்தைப் பெற்றிருந்த பொழுதிலும் நூலக வலையமைப்பில் டிஜிட்டல் நூலகம் அல்லது நிறுவன ரீதியான களஞ்சியம் இன்னும் முதலாம் இடத்திற்கு வருவதற்கு பெரு முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றது. இதனை அடைந்து கொள்வதற்கு எமது கல்விசார் அணியினரினதும் மற்றும் ஆராய்ச்சியாளர்களினதும் ஒத்துழைப்புகளுடன் எமது பல்கலைக்கழகத்தின் மேலும் ஆராய்ச்சி வெளியீடுகளையும் பதிவேற்றம் செய்வதன் மூலமேயாகும்.

- பிரதான நூலகத்தினதும் மற்றும் சகல கிளை (பீட) நூலகங்களினதும் இருப்பெடுப்பு கணக்கெடுக்கப்பட்டு இருந்த பொழுதிலும் நூலக முகாமைத்துவமும் பதவியணியினரும் இன்னும் தொலைந்த நூலகப் பொருட்களின் சரியான எண்ணிக்கையினை உறுதி செய்ய முடியாமல் போய்விட்டது. இது எமது நூலகவரலாற்றில் சில கட்டங்களில் நூல் சேகரிப்பு பதிவேடுகளைப் பராமரிப்பதில் தவறியுள்ளதே முக்கிய காரணமாக உள்ளது. இது அண்மைக் காலத்தில் நூல் உள்வாங்கும் செயற்பாடுகளில் சேகரிப்பு பதிவேடுகளை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து பிழை நீக்கப்பட்டு வருகின்றது.

4. பல்கலைக்கழகத்தின் பிரதான நிலையங்கள்

4.1 தகவல் தொழிநுட்ப நிலையம்

(பணிப்பாளர் - கலா. ஜனக விஜேகுலசூரிய)

அறிமுகம்

தகவல் தொழிநுட்ப நிலையமானது (ITC) பேராதனைப் பல்கலைக்கழகத்தின் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சிக்காக 2004 இல் தாபிக்கப்பட்டதாகும். இதன் பிரதான நோக்கங்களில் ஒன்றாக பல்கலைக்கழக இளமானிப்பட்ட மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழக சமூகத்தின் ஏனைய அங்கத்தவர்களின் தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப திறன்களை வளர்ப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவதுமாகும். இதனை அடைவதற்காக பல்வகையான பகுதிநேர மற்றும் ஒழுங்குமுறையான பயிற்சி நிகழ்ச்சிகள் திட்டமிடப்பட்டும் நடாத்தப்பட்டும் வருகின்றன.

இந்நிலையமானது 320 வேலைத்தளங்களை உள்ளடக்கியதாகவும் அவை பல்வேறு VLANs உடன் ஒன்றுடனொன்று இணைக்கப்பட்டதாகவும் 1000Mbps இல் 100 Mbps ஐ தரவு விகிதமாக கணினிக்கு வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டது. தற்போது இந்நிலையமானது ஒவ்வொரு கோப்பு சேவர், ஒரு இணைய சேவர், ஒரு அஞ்சல் சேவர், ஒரு பதிலி சேவர், ஒரு தரவுத்தளச் சேவர் மற்றும் ஒரு உள்ளடக்க முகாமைத்துவ சேவர் என்பவற்றையும் 160 இற்கும் மேலாக முறையாக செயற்படும் வேலைத்தளங்களையும் கொண்டிருக்கின்றது. இவ்விணைப்புகளுக்கான பட்டை அகலமானது குத்தகை அடிப்படையில் இணைய இணைப்பு 20Mbps ஆகவும் 01Mbps என்பதை ஒதுக்கமாக கொண்டதாகவும் இணைய வசதியானது இலங்கை கல்வி மற்றும் ஆராய்ச்சி வலைப்பின்னல் மூலமாகவும் பெறப்படுகின்றது. (LEARN). இணைய இணைப்புகளுக்காக ஒரு ADSL இணைப்புகளும் காணப்படுகின்றன.

அடைவுகள்

பல்கலைக்கழகத்தின் மூதவை மற்றும் பேரவையினால் அனுமதி வழங்கப்பட்டு தகவல் தொழிநுட்பத்தில் டிப்ளோமா பாடத்திட்டம் 2018 ஜனவரியில் இருந்து ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்படவுள்ளன.

ICT நிகழ்ச்சிகளை இளமானிப்பட்ட மாணவர்களுக்காகவும் குறுங்கால பாடநெறிகளை பொதுமக்களுக்காகவும் வழங்குதல். கடந்த காலத்துடன் ஒப்பிடும் போது உள்வாரி மாணவர்களுக்கான பல குறுங்கால பாடநெறிகள் வழங்கப்பட்டன.

பேராதனைப்பல்கலைக்கழகத்தின் ஒன்லைன் பரவல் (UPOD), பல்கலைக்கழக இணையவாயில் பின்வரும் வசதிகள் ஸ்தாபிக்கப்பட்டதுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளன

i. மல்டிமீடியா அறை மற்றும்

ii. கலை விரிவுரை அறையின் கூற்று

தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

மாணவர்களின் ஒப்புதல் பெறுபேறுகளுக்கு அமைவாக உள்ளக மாணவர்களுக்காக நடாத்தப்பட்ட அடிப்படை தகவல் தொலைத் தொடர்பு தொழில் நுட்ப திறமைக்கான பாடநெறி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் பரிந்துரைக்கப்பட்ட தகவல் தொழிநுட்ப டிப்ளோமா பாடநெறியின் அறிமுகமானது அதனை ஈடு செய்வதாக காணப்படுகிறது.

எதிர்காலத் திட்டங்கள்

தகவல் தொழிநுட்ப நிலையம் அதன் சேவைகளை இளமானி மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் சேவைகளை வழங்குவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

4.2 ஆங்கில மொழி கற்பித்தல் அலகு (ELTU)

(துறைத் தலைவர் - திரு. ஏ.என்.எம். சல்காது)

அறிமுகம்

பேராதனைப் பல்கலைக்கழக ஆங்கில மொழி கற்பித்தல் அலகானது (ELTU) கல்வி உதவி அலகாகவும் இளமானிப்பட்ட மாணவர்களுக்கு ஆங்கில மொழியை கற்பித்தல் அதன் அடிப்படை நோக்கமாகவும் காணப்படுகிறது. ஆங்கில மொழி கற்பித்தல் அலகானது 9 பீடங்களிலும் ஆங்கில கற்கை நிகழ்ச்சிகளை நடாத்துவதோடு தற்போது 15000 மாணவர்கள் வரையில் இவ் அலகின் மூலம் வழங்கப்படுகின்ற கற்பித்தல் பாடநெறிகளுக்காக பல்வேறு மட்டங்களில் பதிவு செய்துள்ளனர். குறித்த பீடங்களின் தேவைகளுக்கேற்ப ஆங்கில கற்கை நெறிகளானவை முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் வருட இளமானிப்பட்ட மாணவர்களுக்காக நடாத்தப்படுகின்றன. இரண்டாம் மொழியாக ஆங்கிலம் (ESL), விசேட நோக்கங்களுக்காக ஆங்கிலம் (ESP), மற்றும் கல்வி நோக்கங்களுக்காக ஆங்கிலம் (EAP) என்பன கற்கை நெறிகளாக கற்பிக்கப்படுகின்றன.

இவ் அலகின் தொலைநோக்காக ஆங்கில அறிவை வழங்குவதன் மூலமாக இளமானிப்பட்ட மாணவர்களுக்கான அதிசிறந்த வலுவூட்டல் நிலையமாக திகழ்கின்றது. எமது ஆவலானது மாணவர்களுக்கு ஆங்கில திறன்களை விருத்தியடையச் செய்வதன் மூலம் அவர்களின் ஒழுக்கங்களில் மற்றும் எதிர்கால தொழில்களில் செயற்திறனாக செயற்பட வைப்பதாகும்.
முன்பதாக இவ்வலகானது ஆங்கில துறையின் ஆங்கில உப துறையாக செயற்பட்டு வந்துள்ளது. இது சுயாதீன அலகொன்றாக 1987 இல் தாபிக்கப்பட்டது.
இவ்வலகின் பிரதான பொறுப்பாக ஆங்கில வகுப்புகளை புதிய அனுமதி மாணவர்களுக்காக அவர்கள் தாய்மொழி மூலமான பாடசாலை கல்வியிலிருந்து ஆங்கில கல்வியை உயர்கல்வி மட்டத்திற்காக கற்பித்தலாகும். இவவலகால் இரண்டு வகையான கற்கை நெறிகள் நடாத்தப்படுகின்றன. மாணவர் பல்கலைக்கழக அனுமதி பெற்றவுடன் அவர்கள் கற்கைநெறிக்கு உள்வாங்கப்பட்டு அடிப்படை ஆங்கில திறன்களை விருத்திசெய்து அவர்கள் தமது பட்டப்படிப்பினை ஆரம்பிக்கும் போது ஆங்கில மொழிமூலமாக இலகுவில் விளங்கிக்கொள்வதற்கு உதவியாக அமையும். இரண்டாவதாக கற்கை நிறைவுற்றதும் தொடர்தேர்ச்சியான ஆங்கில கற்கை நெறியாக ஆங்கில கற்கை நெறி அமையும். தற்பேது பருவத்தவணை முறை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் “Intensive” என்ற பதம் பயன்படுத்தப்படுவதில்லை. எனினும் ஆங்கில மொழி கற்கைகளானவை பல்கலைக்கழக அனுமதியுடன் ஆரம்பிக்கப்பட்டு தொடர்ச்சியாக நடைபெறுவதோடு முதலாம் பகுதியான ஆங்கில நிகழ்ச்சி சுமார் 10 வாரங்கள் வரை நடைபெறுவதோடு அது ஒவ்வொரு பீடங்களினதும் தேவைகள் மற்றும் வேண்டுகோள்களுக்கமைய வேறுபடும். தொடர்ச்சியாக நடைபெறும் கற்கைநெறியின் காலம் 1 – 3 வருடங்கள் வரை வேறுபடும்.
மாணவர் வரவு கட்டாயமாக்கப்பட்டுள்ளதோடு 80 வீதமான வகுப்புகளுக்கு வருகை தரவேண்டியது முதல் இரு பருவத் தவணைகளுக்குமான பரீட்சைகளுக்கு தகுதி பெறுவதில் கவனிக்கப்படும். ஒழுங்கான வருகையானது வெற்றியுள்ள கற்றல் விளைவுகளை உறுதிப்படுத்துவதோடு அனைத்து மாணவர்களும் ஆங்கில திறமைகளை வளர்த்துக் கொள்வதற்காக வகுப்புகளுக்கு வருகைத்தர உற்சாகப்படுத்தப் படுகின்றனர். ஆங்கிலத்தில் சித்தியானது ஒரு மாணவர் ஆங்கில வகுப்புகளுக்கு சமுகம் தருவதற்கான கட்டாய தேவையாகும்.
தற்போது உலக வங்கி மூலமான HETC மானியம் மூலமாக மாணவர்களுக்கும் கல்விசார் அலுவலர்களுக்கும் பயிற்சிப்பட்டறைகளை ஏற்பாடு செய்ய உபயோகப்படுத்தப்படுவதோடு ஆங்கில கற்பித்தல் அலகின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யவும் இந்நிதி பயன்படுத்தப்படுகின்றது.

அடைவுகள்

HETC நிகழ்ச்சியை அமுல்படுத்துதல்

தோல்விகளும் சரிப்படுத்தல்களும்

எம்மால் பணிக்குழுவினர் வெளியேறுதலுக்கு முகம் கொடுத்தல். உதாரணமாக ஆசிரியர்கள்/ பயிற்றுனர்கள் ஆகியோர் தகுதிகாண் விரிவுரையாளர் பதவிகள் ஏனைய பல்கலைககழகங்களில் வழங்கப்படுதல்

எதிர்காலத் திட்டம்

சகல பீடங்களிலும் முழுமையாக HETC நிகழ்ச்சியை செயற்படுத்துதல்

4.3 தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகு (CGCU)

(பணிப்பாளர் - கலாநிதி திரு. டீ.ஏ.என். தர்மசேன)

அறிமுகம்

தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகானது 2005 இல் தாபிக்கப்பட்டதோடு மேலும் அதற்கு வயது 12 வருடங்கள் ஆகின்றது. அதன் இலக்கு எல்லா மாணவர்களுக்கும் அவர்களது இலக்குகளை அடைதலுக்கும், அவர்களது தொழிலை அபிவிருத்தி செய்து கொள்வதற்கும், அவர்களின் வாழ்க்கையின் எல்லா விடயங்களுக்கும் அத்திவாரம் இடும் வகையில் அவர்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்குவதாகும். எனவே இதன் பிரதான பணி மாணவர்களுக்கு அவர்களிடையே காணப்படுகின்ற போட்டியை உணர்த்தி மேலும் தனிப்பட்ட, கல்வி சார், பொருளாதார, சமூக ரீதியில் தனிப்பட்ட, குடும்ப, சமூகத்துக்கு, நாட்டுக்கு நன்மை பயக்கத்தக்க முக்கியமான திறன்களை வளர்த்துக் கொள்ளல் தொடர்பில் திட்டமிட்டு செயற்பட பயிற்சி வழங்குதலாகும். மேலும், இவ் ஆண்டினுள் இவ் அலகானது மாணவர்களுக்கும், பல்கலைக்கழக பதவியணியினருக்கும் அவர்களது வேண்டுகோளுக்கு அமைவாக பல உள வளத் துணை ஆலோசனை கூறல் சேவைகளை வழங்கியது. எமது இலக்குகளை அடையும் நோக்கில் ஏனைய பீடங்கள் மற்றும் கல்வி சார் துறைகளுடனும் இணைந்து வெளி வேலைகளில் ஒன்றிணைந்து செயற்பட முயற்சித்தலே எமது வருடாந்த திட்டமாக இருந்தது. மீளாய்வாண்டில் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகினது சேவையின் அவசியம் உயர்வாகக் காணப்பட்டதுடன், அலகானது மாணவர்களுக்கும், கல்வி சார் பதவியணியினருக்கும் ஏனைய குழுக்கள் மற்றும் அமைப்புக்களுக்கு 27 தொழில் வழிகாட்டல் செயலமர்வுகள், கருத்தரங்குகள் மற்றும் விரிவுரைகளை நடாத்தியது. மேலும் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகானது 13 சுய தொழில் கருத்திட்டங்களை தேசிய நிறுவன அபிவிருத்தி அதிகார சபையின் உதவியுடன் பட்டதாரிகளுக்கும் பட்டப் படிப்பு மாணவர்களுக்கும் ஆரம்பித்து வைக்கக் கூடியதாக இருந்தது. அதனை விட மேலதிகமாக தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகானது உளவியல் ஆலோசனைகள் தேவையான மாணவர்களுக்கு வெற்றிகரமாக உளவியல் ஆலோசனைகளை வழங்கியதுடன், மாணவர்களின் அதிர்ச்சிகரமான உளநிலைகளின் போது ஏற்படும் நிலைமைகளைச் சமாளிப்பதற்கு ஏற்ற திறன்களை வளர்த்தல் நிலவும் கேள்விகளுக்கு ஏற்றவாறு தந்திரோபாய திட்டங்களிற்கு அமைய நடாத்தப்பட்டன.

தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகானது மாணவர் நலன்புரி சங்கங்கள ின் தலைவர்களுக்கு உன்னிப்பான உதவிகளை வழங்கி சேவை செய்வதற்கு சகல பீட மாணவர்களின் பங்கேற்றல்கள் உடன் 'ரபரோசியா' என்ற புதிய மாணவ சங்கத்தை ஸ்தாபிக்க கூடியதாக இருந்தது. சமூக சேவையாளர்களாக சேவையாற்றுவதற்கு தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகின் கீழ் அங்கத்தவர்களுக்கு பயிற்ச்சி அளிக்கப்பட்டது. தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகானது பல்கலைக்கழகத்துக்காக ஒரு கைத் தொழில் காப்பகத்தை ஸ்தாபித்துக் கொள்வது முன்னின்று நடவடிக்கை எடுத்ததுடன் மேலும் விஞ்ஞான தொழில் நுட்ப அமைப்புக்கு பரிந்துரை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டு அது ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் அந்த செயற்பாடு இப்போது செயற்பாட்டில் உள்ளது.

இவ்வலகானது பதவியணியினருக்கு தொழில் வழிகாட்டல் பயிற்சி அளிப்பதற்காக இலங்கை இந்திய மன்றத்தின் மானியத்தை பாதுகாத்துக் கொள்ள முடியுமாக இருந்தது. இந்த மானியத்தைப் பயன்படுத்துவதில், மூன்று அங்கத்தவர்கள் சர்வதேச பயிற்சியைப் பெற்றுக் கொண்டதுடன் முழுப் பல்கலைக்கழக சமூகத்தினருக்கும் எமது தொழில் வழிகாட்டல் சேவைகளை மேலும் விஸ்தரிக்கும் நோக்குடன் அந்தப் பயிற்ச்சி அறிவானது பீடங்களின் தொழில் வழிகாட்டல் ஆலோசகர்களுக்கிடையில் பகிரப்பட்டது. தொழில் வழிகாட்டல் ஆலோசனை சபையும் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகினுடைய தொழில் வழிகாட்டல் நடவடிக்கைகளை முறைப்படுத்துவதற்கு 2017 ஆம் ஆண்டு உப வேந்தரினால் ஸ்தாபிக்கப்பட்டது. தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகானது முதன் முறையாக பீட இனைப்பாளர்கள் குழு ஒன்றினை தொழில் வழிகாட்டல் ஆலோசனை சபையின் அனுமதியுடன் உருவாக்கிக் கொள்வதற்கு முடியுமானதாக இருந்தது.

2017 ஆம் ஆண்டு பட்டமளிப்பு விழா முடிந்த அண்மை நாட்களில் தொழிற் சந்தை ஒன்றை நடத்தியதுடன் அதில் சுமார் 600 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

அடைவுகள்

தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகினால் 2017 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட 26 பணிகள் கீழே தரப்பட்டுள்ளன:

- பொறியியல், கலை, முகாமைத்துவ, விவசாய, விஞ்ஞான, மற்றும் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் (AHS) பீடங்களைச் சேர்ந்த புதிய மாணவர்களுக்கான ஆரம்ப நிகழ்ச்சிகள்.
- விஞ்ஞான பீடத்திற்கான ஒப்புமையை கட்டியெழுப்பும் நிகழ்ச்சித் திட்டம்

- வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா CADD நிலையத்தின் உடனுழைப்புடன் விவசாயப் பீட மாணவர்களுக்கான கணணி உதவியுடனான வடிவமைப்பு விதிகள் (CAD) இல் சான்றிதழ் பாடநெறி
- விஞ்ஞானப் பீடத்துக்கான தொழில் அபிவிருத்தி நிகழ்ச்சி
- பணிக்குழு அபிவிருத்தி நிலையத்தில் 2017 இளம் கல்விசார் அணியினருக்கான அறிமுக நிகழ்ச்சி
- விவசாய பீடத்துக்கான தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சி
- விவசாய பீடத்தின் கல்விசார் அணியினருக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி
- விவசாய பீடத்தின் தற்காலிக பணிக்குழுவினருக்கான பயிற்ச்சி நிகழ்ச்சி
- கலைப்பீடத்தின் பட்டப்படிப்பு மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சை திறன் அபிவிருத்தில் பயிற்சி பட்டறை
- அனுராதபுர IPHT இன் உடைய ஆராய்ச்சி உத்தியோகத்தவர்களுக்கான தொழிலபிவிருத்தி நிகழ்ச்சி
- மஹாஇலுப்பல்லம 1 ஆம் வருட மாணவர்களுக்கான வெற்றியளிக்கக் கூடிய எதிர் காலத்திற்ாகன ஆலோசனைகள்
- தொழில் மற்றும் தொழில் சங்க உறவுகள் அமைச்சின் உடனுழைப்புடன் ‘‘ஓப அசிரிமத்தய’’ என்ற தொழில் அபிவிருத்தித் திறனில் மூன்று நாட்கள் பயிற்ச்சிப் பட்டறைகள்
- இறுதி வருட மாணவர்களுக்கான மேலுறைக் கடிதம், சுயவிபரக்கோவை எழுதுதல் மற்றும் தொழில் தேடும் நுட்பங்கள் என்ற தலைப்புகளில் தொழில் வழி காட்டல் நிகழ்ச்சிகள்
- இறுதியாண்டு மாணவர்களுக்கான தொழில் வழி காட்டலில் சுயவிபரக்கோவை எழுதுதல்
- ‘‘உங்கள் சுய தொழிலைத் தொடங்குங்கள்’’ எனும் தலைப்பில் தேசிய நிறுவன அபிவிருத்தி அதிகார சபையின் (NEDA) உடனுழைப்புடன் பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு மாணவர்கள் மற்றும் பட்டதாரிகளுக்கான தொழில் முனைவோர் அபிவிருத்தியில் எட்டு நிகழ்ச்சிகள்
- முகாமைத்துவ பீட மாணவர்களுக்கான தொழில் வழி காட்டல் நிகழ்ச்சிகள்
- வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா CADD நிலையத்தின் உடனுழைப்புடன் விவசாயப் பீட மாணவர்களுக்கான கணணி உதவியுடனான வடிவமைப்பு விதிகளில் சான்றிதழ் பாடநெறி
- ஜோன் கீல்ஸ் நிறுவனத்தின் உடனுளைப்புடன் நான்கு பீட மாணவர்களை நோக்காகக் கொண்ட தொழில் சந்தை
- சுயவிபரக்கோவை எழுதுதல் மற்றும் எவ்வாறு நேர்முகப் பரிட்சை ஒன்றுக்கு முகம் கொடுப்பது என்ற தலைப்பில் தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சி
- முகாமைத்துவ பீடத்தின் உடனுளைப்புடன் தொழில் அபிவிருத்தி மற்றும் பெண்களுக்கு அதிகாரம் அளித்தல் என்ற தலைப்பில் பயிற்சிப் பட்டறை
- 2010 / 11 தொகுதி மாணவர்களுக்காக வைத்திய பீடம் ஒழுங்கு செய்த தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு
- சகல பீட மாணவர்களுக்கான தொழில் அபிவிருத்தியில் திறந்த நிகழ்ச்சி
- சகல பீட மாணவர்களுக்கான உள – சமூக கருத்துரை வழங்குதலில் பயிற்சி நிகழ்ச்சி
- இணைந்த சுகாதாரங்கள் விஞ்ஞான பீட மாணவர்களுக்கான கருத்துரை வழங்குதலில் தனி மனித அபிவிருத்தி நிகழ்ச்சி
- பொறியியல், முகாமைத்துவ, இணைந்த சுகாதாரங்கள் விஞ்ஞானங்கள், விஞ்ஞான மற்றும் கலைப் பீட மாணவர்களுக்கான ஆரம்ப அறிமுகப்படுத்தும் நிகழ்ச்சி
- பிரிட்டிஸ் கவுன்சில் குழுவுடன் தொழில் வழிகாட்டல் செயற்பாட்டுத் திட்டம்

தோல்விகள் மற்றும் நியாயப்படுத்தல்கள்

தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகினால் நடாத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் விளைவுகள் தொடர்பில் இன்னமும் மதிப்பாய்வு இடம் பெறவில்லை. பட்டமளிப்பின் பின்பு விளைவுகளின் மதிப்பாய்வானது செய்யப்படவும் அவற்றை எதிர்கால செயற்பாடுகளில் உள்ளடக்கவும் இன்னும் கருணைக் காலம் தேவைப் படுகிறது. தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகினால் எதிர்பார்க்கப்பட்ட வருட காலப்பகுதிக்குள் இணையத்தளத்தை உருவாக்கிக் கொள்ள முடியவில்லை மற்றும் 2018 ஆம் ஆண்டு முதலாம் காலாண்டுப் பகுதிக்குள் அது முடிவுறுத்தப்பட உள்ளது. தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகினால் வேறுபட்ட பீடங்களின் பட்டதாரிகளின் வேலை வாய்ப்புத் திறன்களினுடைய கற்கை நெறிகளின் அடிச் சுவடுகள் ஆரம்பித்து வைக்க முயற்சிக்கப்பட்ட பொழுதிலும் அது வெற்றியளிக்கப் படவில்லை.

எதிர்கால திட்டங்கள்

தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகினால் பல்கலைக்கழகத்துக்கு புதிதாக நுழைந்த மாணவர்களுக்கு தொழில்வாய்ப்பினை பெற்றுக் கொள்ளும் வகையில் எவ்வாறு தமது மென் திறன்களை அபிவிருத்தி செய்வது என்பது தொடர்பான அறிவூட்டல் போன்ற வருடாந்தம் நடாத்தும் வழமையான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்கிறது. அதற்கு மேலதிகமாக தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகினால் சுய தொழில் தொடர்பான செயற்றிட்டங்களையும் தேசிய நிறுவன அபிவிருத்தி அதிகார சபையுடன் இணைந்து ஆரம்பித்துள்ளது.

எதிர்காலத்தில், தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகானது அதன் தொழில் வழிகாட்டல் சேவைகளின் மேம்படுத்திய வசதிகளையும் சேவைகளையும் மேலும் விஸ்தரிப்பதற்கு திட்டமிடுகின்றது. இணையத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு தொழில் மையத்தினூடாக மாணவர்களின் விளிப்புணர்வு மற்றும் தொழில் தொடர்பான தகவல் தொலைத் தொடர்பு மையம் ஸ்தாபிக்கப் படவுள்ளது. இந்த நோக்கத்திற்காக, இணையத்தளப் பிரிவு மேம்படுத்தப் படவுள்ளது. தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகினால் மாணவர் வேலைவாய்ப்புத் திறன் மற்றும் தொழில் வரை படத்தை அடிப்படையாகக் கொண்ட தயாரிப்புகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட தரவுகளை பீட மட்டத்திலான கற்கைநெறி அடிச்சுவடுகள் அறிமுகப்படுத்தப்பட உள்ளது. தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகினால் மாணவ சங்கங்களுடன் இணைந்து சில எதிர்கால ஆலோசனை நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு மற்றும் அவர்களுடைய செயற்பாட்டு ரீதியான ஒழுங்குபாடுகளிலும் தொழிலபிவிருத்தி மேம்பாட்டு நடவடிக்கைகளிலும் ஈடுபாடுகளைப் பெற்றுக் கொள்வதற்கும் திட்டமிட்டு வருகிறது.

தொழில் ஆலோசனை சபையினதும் மற்றும் பல்கலைக்கழக மூதவையினதும் உதவியுடன் திறமைகளை விருத்தி செய்வதற்காக சுய கற்றல் அறை, கலந்துரையாடல் அறை போன்ற மேலும் தொழில் வழிகாட்டல் / சேவைகள் மாணவர்களுக்கு ஆகியவற்றை வழங்கும் நோக்குடன் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகினுடைய சில கீழ் கட்டமைப்பு வசதிகளை விஸ்தரிப்பதற்கு எண்ணியுள்ளது.

பல்கலைக்கழகத்தில் கிடைக்கும் வழங்களை பயன்படுத்தி, மாணவர்களுக்கான சில வெளியிடத்தில் தங்கியிருந்து பெறும் பயிற்சி நடவடிக்கைகளையும் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

சர்வதேச கொடையாளிகளின் உதவியுடன் இந்த அலகின் ஊடாக மனித வள பயிற்சியினை மேம்படுத்துவதற்காக புதிய சர்வதேச கருத்திட்டங்களை ஏற்படுத்துவதில் தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் அலகு சர்வதேச ஆராய்ச்சி நிறுவனத்துடன் (InRC) நெருங்கி வேலை செய்ய உள்ளது.

4.4 தொலை மற்றும் தொடர்கல்வி நிலையம் (CDCE)

(பணிப்பாளர - பேராசிரியர் டெரன்ஸ் மதுஜித்)

அறிமுகம்

தொலை மற்றும் தொடர் கல்வி நிலையத்தின் (CDCE) ஆரம்பமானது 1979 இல் வெளிவாரி பரீட்சை நிலைய உருவாக்கலின் மூலம் அடையப்பட முடிந்தது. பல அபிவிருத்திக் கட்டங்களை கடந்து பல பெயர்களில் அழைக்கப்பட்ட இந்நிறுவனத்தின் நடப்பு நிர்வாகக் கட்டமைப்பானது அதன் புதிய பெயரான “தொலை மற்றும் தொடர்கல்வி நிலையம்” என்ற பெயரால் 2007 ஏப்ரல் மாதம் முதல் அழைக்கப்படுகின்றது. இந்த நிலையத்தை தாபிப்பதற்கான பிரதான நோக்கமாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் இணைக்கப்பட்ட திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களில் ஒன்றான “திறந்த மற்றும் தொலைக் கல்வியில் அதியுயர் நிலையமாக முன்வரல்” என்பதை அடைவதாக காணப்படுகிறது. தொலை மற்றும் தொடர்க்கல்வி நிலையத்தின் தொலைநோக்காக அனைவருக்கும் அவர்கள் தொழில் குறிக்கோள்களையிட்டு சமமான வாய்ப்புக்களை வழங்குதல் என்பது காணப்படுகின்றது. இதன் பணிக்கூற்று திட்டமாக கல்வி வாய்ப்புக்களை தடைகள் இன்றி அவற்றை எதிர்பார்ப்போருக்கு வழங்குவதன் மூலமாக அனைவருக்கும் கல்வியை வழங்குதல் ஆகும்.

அடைவுகள்

தொலை மற்றும் தொடர் கல்வி நிலையத்தின் (CDCE) மூலம் இவ் ஆண்டு அடையப் பெற்ற பிரதான அடைவுகளின் பட்டியல்

தொலை மற்றும் தொடர் கல்வி நிலையத்தினால் இவ் ஆண்டு அடையப் பெற்ற அடைவுகளின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளன.

- 75 மாணவர்களுக்கு பேரவை அறையில் மார்ச் மாதம் 11 ஆம் திகதி முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சியில் டிப்ளோமா பாடநெறி – 2015 / 2016 க்கான சான்றிதழ் வழங்கி வைக்கும் வைபவம் நடைபெற்றது.
- 2017 வர்த்தக நிர்வாகப் பட்டதாரி (இணையத்தளத்தினூடான கற்கை) பட்டக் கற்கைக்காக பதிவு செய்த புதிய மாணவர்களுக்காக தொலை மற்றும் தொடர் கல்விக்கான நிலைய (CDCE) கேட்போர் கூடத்தில் அறிமுக நிகழ்ச்சித் திட்டத்தினை செப்டம்பர் மாதம் 24 ஆம் திகதி CDCE கேட்போர் கூடத்தில் நடாத்தியது.
- கலைமானி மற்றும் கலைமானி முதற்கலைத் தேர்வுகள் வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டது.
- கலைமானி மற்றும் கலைமானி முதற்கலைத் தேர்வு நாடிகளுக்கு கருத்தரங்குத் தொடரொன்று நடாத்தப்பட்டது.
- 2016 ஆம் வருடம் வெளிவாரிப் பட்டதாரிகளுக்கான எட்டாவது பட்டமளிப்பு விழா கண்டி பொல்கொல்ல கூட்டறவு அபிவிருத்தி தேசிய நிறுவகத்தின் மகிந்த ராஜபக்ஷ கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. ஆயிரத்தி இருநூற்றி இருபத்திரெண்டு (1222) கலைமானி மற்றும் வியாபார நிர்வாகமானி ஆகியபட்டங்களை முடித்தோருக்கு பட்டமளித்து வைக்கப்பட்டது. இன் நிகழ்வின் பிரதம அதிதியாக ஓய்வு பெற்ற பேராசிரியர் கபில குணசேகர கலந்து சிறப்பித்தார்.

புதிய பாடநெறிகள் அறிமுகம்

- முகாமைத்துவ பீடத்தினால் அமைக்கப் பெற்ற ஐந்து டிப்ளோமா பாட நிகழ்ச்சிகள் தொலை மற்றும் தொடர் கல்வி நிலையத்தினால் வழங்கப்பட்டன. அவையாவன
  - கணக்கியலிலும் மற்றும் நிதியியலிலும் டிப்ளோமா
  - வணிக முகாமைத்துவத்தில் டிப்ளோமா
  - கருத்திட்ட முகாமைத்துவத்தில் டிப்ளோமா
  - மனிதவள முகாமைத்துவத்தில் டிப்ளோமா
  - சந்தைபடுத்தல் முகாமைத்துவத்தில் டிப்ளோமா
- முகாமைத்துவ பீடத்தினால் அமைக்கப் பெற்ற ஆறு டிப்ளோமா பாட நிகழ்ச்சிகள் தொலை மற்றும் தொடர் கல்வி நிலையத்தினால் வழங்கப்பட்டன. அவையாவன
  - மனிதவள முகாமைத்துவத்தில் சான்றிதழ்
  - கணக்கியலும் மற்றும் நிதியியலில் சான்றிதழ்

- தொழில் முனைவோர் மற்றும் துணிகர அபிவிருத்தியில் சான்றிதழ்
- வணிக முகாமைத்தவத்தில் சான்றிதழ்
- உபசரணை மற்றும் சுற்றுலாத் துறை சந்தைப்படுத்தலில் சான்றிதழ்

- இதனை விட மேலதிகமாக, தொலை மற்றும் தொடர் கல்வி நிலையத்தினால் ஆங்கில மொழி சான்றிதழ் மற்றும் அளவியல் அளவில் டிப்ளோமா ஆகிய பாட நெறிகள் ஆரம்பிப்பதற்கு கலந்துரையாடல்கள் நடைபெற்றன.

புதிய கற்கைநெறி ஒன்றை ஸ்தாபித்தல்

- தொலை மற்றும் தொடர் கல்வி நிலையத்திற்கும் விஞ்ஞான பீடத்திற்கும் இடையில் ஒரு தசாப்தத்திற்கு முதல் வெளிவாரி விஞ்ஞானமானி பட்டப்படிப்பு பாடநெறி நிறுத்தி வைக்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்திற்கு வந்திருந்தது. விஞ்ஞான பீடத்தின் பீட கற்கை சபை புதிய பட்டப்படிப்பு, டிப்ளோமா, மற்றும் சான்றிதழ் பாடநெறிகளின் தொகுதிகளை விஞ்ஞான பீடம் இணைத்ததுடன் ஏனைய பீடங்களில் இருந்தும் உதாரணமாக முகாமைத்துவ மற்றும் பொறியியல் பீடங்களில் இருந்தும் வரவழைக்கப்பட்டிருந்தன.

2016 - 2020 காலப்பகுதிக்குரிய கலைமானி மாணவர்களுக்கான மாணவர் கையேடும் மற்றும் விஷயத் தொகுப்புகளையும் அச்சுப்பதித்தல்

- கலைமானி மாணவர்களுக்கான மாணவ கையேடுகள் அச்சிடப்பட்டு மாணவர்களுக்கிடையில் பகிர்ந்தளிக்கப்பட்டன. பாடநிகழ்ச்சிகளை விளக்கி விஷயத் தொகுப்புகள் முதன் முறையாக வெளியிடப்பட்டு உரிய பகுதியினருக்கு நிலையத்தால் பகிர்ந்தளிக்கப்பட்டது.

பௌதீக வள அபிவிருத்தி

- கீழ் மாடியில் அமைந்துள்ள ஓய்வறையின் முன் மற்றும் பின் பகுதிகள் தூசு, பூச்சிகள் மற்றும் பீடைகள் உட்புகுவதைத் தடுக்கும் வகையில் கண்ணாடிச் சட்டகம் பொருத்தப்பட்டது. இதற்கான நிதி உதவி HETC திட்டத்தினால் வழங்கப்பட்டது.
- பொது மக்களுக்குத் தேவையான முக்கியமான செய்திகளை காட்சிப்படுத்தும் நோக்கில் கண்டி – கொழும்பு பிரதான பாதைக்கு அருகில் LED அறிவித்தல் பலகையொன்று பொருத்தப்பட்டதோடு அது பொது மக்களுக்கு அறிவித்தல்களை தெரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.
- மூன்று வாகனங்களை ஒரே நேரத்தில் நிறுத்தி வைக்கக்கூடிய வசதி கொண்ட வாகன நிறுத்தல் கூடமொன்று CDCE யில் அமைக்கப்பட்டது.
- HETC திட்டத்தின் உதவியுடன் தொலை மற்றும் தொடர் கல்வி நிலையத்திற்கு வீடியோ தகவல் பரிமாற்றுத் தொகுதியொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது. இத் தகவல் பரிமாற்றுத் தொகுதியின் மூலம் தொலை மற்றும் தொடர் கல்வி நிலையம் உலகிலுள்ள பல நிறுவனங்களுடன் ஒரே நேரத்தில் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டு கூட்டங்கள், கலந்துரையாடல்கள், விரிவுரைகள், முன்வைப்புக்கள் மற்றும் பரீட்சைகள் ஆகியவற்றை நடாத்த முடிந்துள்ளது.

தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

- தொலை மற்றும் தொடர் கல்வி நிலையத்திற்கு நான்கு மாடிக் கட்டடமொன்றினை நிர்மாணிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட அது முடியாமல் போனது.
- கணக்கியல் மென் பொருள் ஒன்றினை தொலை மற்றும் தொடர் கல்வி நிலையத்திற்கு பெறுவதற்கு கோரிக்கை விடுத்திருந்த பொழுதிலும் அதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

எதிர்காலத் திட்டங்கள்

- தொலை மற்றும் தொடர் கல்வி நிலையம் மாணவர் அனுமதி, கற்கை நெறிகளுக்கான பதிவுகள், கருத்தரங்குகளையும் பரீட்சைகளையும் நடாத்துதல் பட்டமளிப்பு விழாக்கள் ஆகியவற்றை இலகுவாகச் செய்துகொள்ள முடிகின்ற வகையில் சகல வசதிகளுடனும் கூடிய முகாமைத்துவ தகவல் மையமொன்றினை (MIS) ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது. மாணவர்கள் அவர்களது தரங்களை மதிப்பீடு செய்து கொள்வதற்கும் முன்னேற்றங்களை அவதானிப்பதற்கும் வினைத்திறன் மிக்க வகையில் தொலை மற்றும் தொடர் கல்வி நிலையத்துடன் தொடர்பினை வைத்துக்கொள்வதற்கும் விசேடமான மாணவர் தரவு விபரங்களை MIS கொண்டுள்ளது.
- அறிமுகப்படுத்த உள்ள புதிய செவிப்புல, வகுப்பறைகள் மற்றும் கணணி ஆய்வு கூடங்கள் ஆகியவற்றினை விஸ்தரித்துக் கொள்ளும் முகமாக தொலை மற்றும் தொடர் கல்வி நிலையத்தின் தற்பொழுதுள்ள கட்டிடத்தினை புதுப்பிப்பதற்கு புதிதாக ஒரு பரிந்துரையை உருவாக்குதல்

4.5 சுற்றாடல் கற்கைகளுக்கான நிலையம் (CES)

(பணிப்பாளர் - பேராசிரியர் எஸ்.பீ. நிஸ்ஸங்க)

அறிமுகம்

இயற்கை வளங்கள் மற்றும் புவியின் உயிர் கோளம் என்பன மனித நடத்ததையினால் எதிர்நோக்கும் பரந்த வீச்சினாலான சுற்றாடல் சார் பிரச்சினைகளுக்கு உதவுவதற்கும் நாடு இதனை சிறந்த முறையில் எதிர் கொள்ளும் இயல்பை மேம்படுத்துவதற்குமாக செயற்றிறனான நிர்வாகத்தை வழங்குவதற்காகவே 1992 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சுற்றாடல் கற்கைகளுக்கான நிலையம் (CES) தாபிக்கப்பட்டது. சுற்றாடல் கற்கைகளுக்கான நிலையம் ஆனது உரிய துறைகளைச் சேர்ந்த கல்விசார் உத்தியோகத்தர்கள், ஆர்வமுள்ள மாணவர்கள், முன்னனி வகிக்கும் பங்குதாரர்கள் மற்றும் பல்கலைக்கழக முறைமையின் கீழ் உள்ள பரந்த சமூகம் என்பனவற்றை இணைத்துக்கொண்டு புத்தாக்கத்துடனும் முறையான நெறிப்படுத்தலுடனும் அணுகுவதன் மூலம் தனது இந்நோக்கங்களை நிறைவேற்றி வருகின்றது. தற்பொழுது புவியியல் கட்டிடத்தில் அமைந்துள்ள சுற்றாடல் கற்கைகளுக்கான நிலையம் ஒரு பணிப்பாளர், மற்றும் மூன்று பிரதிப் பணிப்பாளர்கள் ஆகியோர் பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் ஆலோசனைகள் ஆகியவற்றுக்கு பொறுப்பாக கொண்டு, கொண்டு நடாத்தப்படுகின்ற

சுற்றாடல் கற்கைகளுக்கான நிலையம் சூழலியல் ஆலோசனைகளை வளர்த்து வரும் மற்றும் நாட்டினை கட்டி எழுப்ப கை கொடுக்கும் கொள்ளவை விஷேடமாக சூழலியல் தொடர்பான கோட்பாடுகளை உருவாக்குகின்றது. அது பல குறுகிய கால பாடநெறிகளை அதாவது விஷேடமாக நிலைத்து நிற்க கூடிய சூழல் முகாமைத்துவம் மற்றும் சூழல் மதிப்பீட்டில் உயர்தர தொழில் ரீதியான ஆலோசனை வேலை, சமூக மதிப்பீடு செயலாக்க கற்கை மற்றும் அரச தனியார் துறைகள் மற்றும் சர்வதேச நிறுவனங்களில் போட்டி மட்டத்திலான சூழல் கண்காணிப்பு ஆகியவற்றில் வழங்குகின்றது. சுற்றாடல் கற்கைகளுக்கான நிலையம் பல்கலைக்கழகத்தை சூழலுக்கு ஈடு கொடுக்கும் வளாகமாக ஆக்குவதற்கு ISO14001 ஐ நியமங்களாக ஸ்தாபித்துக் கொள்ளும் பொருட்டு பணிசெய்து வந்திருக்கின்றது.

நடாத்தப்பட்ட செயற்பாடுகளின் பட்டியல்

- நாடித்தலாவையில் கால நிலைக்கு ஏற்ப சுறுசுறுப்பான கிராம அபிவிருத்தி நிகழ்ச்சியாளர்கள் (கொள்ளவைக் கட்டி எழுப்பும் நிகழ்ச்சியாளர்கள் தொடர் ஜனவரி 27 ஆம் திகதி சமூக – பொருளாதாரக் கணக்கெடுப்பு (மே – ஜுன் வரை நடாத்தப்பட்டது.) மற்றும் சுகாதார வளாகம் (செப்டம்பர் 16 நடத்தப்பட்டது))
- கைத்தொழில் பாதுகாப்பு, அவசர நிலைக்கு தயார் படுத்தும் சூழல் முகாமைத்துவத்தில் ஒரு குறுகிய கால பாடநெறி (ஒக்டோபர் 2016 இல் ஆரம்பித்து ஏப்ரல் 2016 இல் முடிவுறுத்தப்பட்டது.)
- பல்கலைக்கழகத்துக்கு உறுதிப்படுத்த ISO14001 ஐ பெற்றுக் கொள்வதற்கான பீட மட்டத்திலான சூழல் முகாமைத்துவக் குழு கொள்திறனை கட்டி எழுப்பும் பயிற்சிப் பட்டறைகள் (பெப்ரவரி 02 ஆம் திகதி பெப்ரவரி 13 ஆம் திகதி பெப்ரவரி 15 ஆம் திகதி மார்ச் 16 ஆம் திகதி ஆகிய திகதிகளில் பயிற்சிப் பட்டறைகள் நடைபெற்றன.)
- ISO14001 இல் சான்றிதழ் பாடநெறி இரு முறை நடாத்தப்பட்டது. (ஜுலை 1ஆம் 2 ஆம் திகதிகள் மற்றும் செப்டம்பர் 16 ஆம் 17 ஆம் திகதிகளில் இரு பயிற்சிப் பட்டறைகளுக்கும் 266 க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.
- வாழ்வாதாரத்தை உருவாக்குதல் மற்றும் இயற்கை நிலக்காட்சிக்கான சூழல் பாதுகாப்பு மற்றும் UNDP னுடைய கடல் சார் பிராந்தியத்தின் கடற் காட்சியின் மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் வரைக்குமான பகுதி என்ற தலைப்பிலான ஆலோசனைப் பணி (செப்டம்பர் 2017 இல் இருந்து இன்னும் நடந்துக் கொண்டிருக்கின்றது)

தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

- சில குறுகிய காலப் பாடநெறிகள் மற்றும் சூழலியல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் ஆகியன குறித்த பீடங்களின் தேர்வுகள் நடைபெறும் காலப் பகுதி ஒன்றுடன் ஒன்று இணைந்து காணப்படுவதால் திட்டமிட்டவாறு அவற்றினை கொண்டு நடாத்திக் கொள்ள முடியாது போனது. சுற்றாடல் கற்கைகளுக்கான நிலையம் ஆளனி வள முகாமைத்துவ சான்றிதழ் பாடநெறியை நடாத்திக் கொண்டிருக்கின்றது எனினும் முகாமைத்துவப் பீடத்தின் கருத்து மேலெழுந்ததினால் அந்த பாடநெறியை வழங்க முடியாமல் போயுள்ளதுடன் மற்றும் 2018 இல் கூட்டு முறையில் அதனை நடத்த முடியும் என எதிர்பாாக்கப்படுகின்றது.
- இந்த வருடத்தில் பல்கலைக்கழகத்துக்கு ISO14001 ஐ பெற்றுக் கொள்வதற்கு சுற்றாடல் கற்கைகளுக்கான நிலையம் திட்டமிட்டுக் கொண்டு இருந்த பொழுதிலும் வேலைச் சுமை மற்றும் வேறு தேவைகளின் ஏற்பாடுகளை செய்வதற்கு நேரம் எடுத்திருந்ததாலும் என்னால் ஆரம்பத்தில் திட்டமிட்டிருந்தவாறு முடிவுறுத்த முடியாமல் போயுள்ளது.

எதிர்கால திட்டங்கள்

- சுற்றாடல் கற்கைகளுக்கான நிலையம் அதிக அடுக்கு நகல்வுகளுடன் மற்றும் நிலைத்து நிற்கக்கூடிய நில முகாமைத்துவம், நீர் பிடிப்பு பாதுகாப்பு ஆகியவற்றில் புதுப் பாடநெறிகளை உருவாக்கி வழமையான சகல சான்றிதழ் பாடநெறிகளையும் கொண்டு நடாத்த உள்ளது.
- தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கைத் தொழில் பாதுகாப்பு 4 மாத சான்றிதழ் பாடநெறிக்கு ஒரு டிப்ளோமா பாடநெறியை உருவாக்குவது.
- மஹாவலி அபிவிருத்தி மற்றும் சூழல் அமைச்சின் உடனுழைப்புடன் EIA பயிற்சி நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
- இலங்கை மத்திய சுற்றாடல் அதிகார சபை (CES) இன் உடனுழைப்புடன் ஹந்தான பேணுதல் பிரதேச பாதுகாப்பு மற்றும் காடாக்குதல் நிகழ்ச்சியினை நடாத்துதல்.
- மஹாவலி அபிவிருத்தி மற்றும் சூழல் அமைச்சின் உடனுழைப்புடன் செப்டம்பர் 2018 இல் நிலைத்து நிற்கக் கூடிய நிலப் பேணுகை கருத்தரங்கை ஏற்பாடு செய்தல்
- காலநிலைக்கேற்ப சுறுசுறுப்பான கிராமிய அபிவிருத்தித் திட்டத்திற்கு செயற்பாட்டு திட்டத்தினை தொடர்தல்
- பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆராய்ச்சி நிலையம் InRC மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆராய்ச்சி நிலையம் ஆகியவற்றின் உடனுளைப்புடன் வெளி நிதியளிப்பு முகவர்களுக்கு ஆராய்ச்சி பரிந்துரைகளை சமர்பித்தல்.
- நிலைத்து நிற்கக் கூடிய சுற்றுச் சூழல் அபிவிருத்தி நிகழ்ச்சியில் UNDP உடன் ஆரம்பிக்கப்பட்ட ஆலோசனைப் பணியைத் தொடர்தல்.
- வனவிலங்கு பேணும் இலாகாவுடன் பல புதிய ஆலோசனைப் பணிகள் ஆரம்பிக்கடவுள்ளது.

4.6 மனித உரிமைகள் கற்கை நிலையம்

(பணிப்பாளர் - பேராசிரியர் அர்ஜுன பராக்கிரம)

அறிமுகம்

பல்கலைக்கழக பேரவையினதும் மற்றும் மூதவையினதும் அனுமதியுடன் வெளிநாட்டு நிதி கருத்திட்டத்தின் பிரகாரம், தற்போதைய நிலையம் 2002 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது. வெளிநாட்டு நிதிக் கருத்திட்டமானது 2008 இல் முடிவடைந்ததுடன் மேலும் மூன்று செயற்திட்டங்கள் அதாவது மனித உரிமைகளில் டிப்ளோமா, மனித உரிமைகளில் சான்றிதழ் பாடநெறி மற்றும் இந்தக் கருத்திட்டக் காலப் பகுதிக்குள் மேற் கொள்ளப்பட்ட பயிற்சி நிகழ்ச்சிகள் அவற்றுக்கு காணப்பட்ட அதிக கேள்விகளால் கற்பித்தல் பாடநெறிகளாக தொடரப்பட்டன. மனித உரிமைகள் தொடர்பான கற்றலுக்கான நிலையத்தின் குறிக்கோளானது மனித உரிமைகளுக்கும் மற்றும் அடிப்படை சுதந்திரத்தையும் செயற்பாட்டு எண்ணங்களாக கருத்தில் கொண்டு அதனை சமூகத்தில் உருவாக்குவதற்கும் அதனை கடினமான நிலையாக இருந்தாலும் சமூகத்தில் உள்ளீடு செய்வதனையும் கொண்டுள்ளது. இதனது முக்கிய இலக்கானது பல்கோட்பாடு, கல்வியியல் மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகள் அகியவற்றை பல்கலைக்கழக சமூகத்துக்கும் மற்றும் பொது சனத்திற்கும் ஈடுபாடு உடையதாக்கி மனித உரிமைகளில் அறிவினை ஊக்குவிப்பதாகும்.

இந்த நிலையத்தின் கட்டமைப்பின் உள்ளடக்கம் பின்வருமாறு :

- ஆளுநர் சபை
- பணிப்பாளர்
- இரண்டு கல்வி இணைப்பாளர்கள்
- நிருவாக உத்தியோகத்தர்
- ஆளுநர் சபையால் நேரத்துக்கு நேரம் தேவை எனக் கருதப்படும் குறிப்பிட்ட நபர்கள்

மனித உரிமைகள் தொடர்பான கற்றலுக்கான நிலையத்தினுடைய ஆளுநர் சபையானது முகாமைத்துவத்தின் வரவு செலவு மற்றும் மனித வளங்கள் ஆகியவற்றை நிலையத்திற்கு கோருவது தனது கொள்கைகளில் இருந்து மாறாத ஒன்றாக காணப்படுகின்றது. ஆளுநர் சபையானது கலைப்பீ டத்தின் பீடாதிபதி (முன்னாள் தலைவர்) அரசியல் விஞ்ஞானத்துறையின் தலைவர் (முன்னாள் அலுவலர்)கலைப் பீட சபையை பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு மனித உரிமை பாடநெறியை கற்பிக்கும் துறை சம்பந்தமான துறையை ஏனைய இரு அங்கத்தவர்களும் மற்றும் ஒன்பது பீடங்களையும் பிரதிநிதித்துவப் படுத்துவதற்கு பேரவையால் நியமிக்கப்பட்ட ஒன்பது உறுப்பினர்களும் அடங்குவர். நிலையத்தின் பணிப்பாளரும் அதன் செயற்பாட்டைக் கவனிக்கும் செயலாளராக (முன்னாள் அலுவலர்) காணப்படும் அவர் ஆளுநர் சபையை சேர்ந்தவராவார். இந் நிலையத்தின் நாளாந்த செயற்பாடுகள் கையாளப்படுவது பணிப்பாளர் மூலமாக இருப்பதுடன் சாதாரணமாக ஆளுநர் சபைக்கு பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட கல்விசார் அணி உறுப்பினர்களுக்கு இடையில் விண்ணப்பங்கள் கோரப்படுவதாக பணிப்பாளர் இரு கல்வி இணைப்பாளர்கள் மூலமாகவும் ஒரு நிர்வாக உத்தியோகத்தர் மூலமாகவும் உதவி அளிக்கப்பட்டு வருகின்றார். CHR-UPDN ஆனது கலைப் பீடத்தின் கன்னங்கர கட்டிடத்தில் இலக்கம் 4 ஐ கொண்ட அறையில் அமைந்துள்ளது.

அடைவுகள்

2004 இல் இருந்து 2011 க்கு இடைப்பட்டுள்ள காலப் பகுதிக்குள் நிலையமானது 19 மில்லியன் ரூபாய்களை இரண்டு கற்கை நிகழ்ச்சிகள் மூலம் சம்பாதித்துக் கொண்டதுடன் மேலும் அண்ணளவாக 6 மில்லியன் ரூபாய்களை சேமிப்பில் தக்கவைத்துள்ளது. தற்பொழுது, நிலையத்தின் இரண்டு கற்பித்தல் பாடநெறிகள் பல்கலைக்கழக பட்டப்படிப்பு மாணவர்களுக்கும், பட்டதாரிகளுக்கும், காவற்படைக்கும், இராணுவத்திற்கும் சிறைச்சாலை உத்தியோகத்தவர்களுக்கும் பாடசாலை ஆசிரியர்களுக்கும் அவ்வாறே அரச சார்பற்ற நிறுவன அங்கத்தவர்களுக்கும் இடையில் அதிக கேள்வி உள்ளதாக காணப்படுகின்றது. 2004 ஆம் ஆண்டில் இருந்து 2011 ஆம் ஆண்டிற்கு இடைப்பட்ட காலப் பகுதிக்குள் நிலையமானது 2718 சான்றிதழுக்கு உரித்துள்ளவர்களையும் மற்றும் 849 பெயர் டிப்ளோமாவுக்கு உரித்துள்ளோர்களையும் உருவாக்கி உள்ளது. 2017 ஆம்ஆண்டு ஜூலை 07 ஆம் திகதி கலைப்பீடத்தின் கருத்தரங்கு அறையில் இதன் தேசிய அறிக்கையான UN பிரபஞ்ச கால மீளாய்வின் 3 ஆவது சுழற்சியின் பிராந்திய பொது ஆலோசனையை ஏற்படுத்தல் மற்றும் இணைத்தல் ஆகியவற்றினை சிவில் சமூகத்தின் அமைப்புகள் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் மற்றும் பேராதனை பல்கலைக்கழகத்தின் கல்விசார் அணியினர்ஆகியோரின் கலந்து கொள்ளலுடன் நடைபெற்றது.இந்த ஆலோசனையில் ஆதிவாசி சமூகத்தைச் சேர்ந்த கலந்து கொள்ளல்கள் இங்கு விஷேடமாக கொள்ளப்படும் முக்கியமான ஏற்பாடுகளாக இருந்தன.

தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு காலப் பகுதிகளுக்குள் எந்த ஒரு பாடநெறிகளும் நடாத்தப்படவில்லை என்பதுடன் 2016 ஆம் ஆண்டு ஜனவரி முற்பகுதியில் முன்னாள் பணிப்பாளர் / மனித உரிமைகள் தொடர்பான கற்றலுக்கான நிலையம் காலாவதியாகி இருந்தது. அவர்களுடைய சேவை ஜனவரி 2017 இல் இருந்து அவரது பதவி வெற்றிடம் நிரப்பப்படும் வரைக்கும் ஒவ்வொரு மூன்று மாத காலப்பகுதிக்கும் நீடிக்கப்பட்டுக் கொண்டிருந்தது. பணிப்பாளரை நியமிப்பது கால தாமதமாகியதன் பெறுபேறாக இணைப்பாளர்களை நியமிப்பதும் முடியாமல் போனது. அதனால், பாடநெறிகளை ஆரம்பிப்பதும் காலதாமதம் ஆகியது. எவ்வாறெனினும் பெப்ரவரி நடுப்பகுதியில் பணிப்பாளரை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் இணைப்பாளர் பகுதியை நிரப்புவதற்கு இரு முறை கோரப்பட்டிருந்தனர். அங்கு இந்தப் பதவிக்கு பொருத்தமான விண்ணப்பதாரிகள் ஒருவரும் இல்லாத காரணத்தினால் முதலாவது சந்தர்ப்பத்தில் இணைப்பாளர்களை தெரிவு செய்வது இயலாது போய் விட்டது. எவ்வாறெனினும் 2018 ஜனவரி 01 ஆம் திகதியில் இருந்து அமுலுக்கு வரும் வகையில் 02 இணைப்பாளர்கள் நிலையத்திற்கு இரண்டாம் சந்தர்ப்பத்தில் டிசம்பரில் இணைத்துக் கொள்ளப்பட்டனர். 2016 ஆகஸ்ட் மாதத்தில் இருந்து புதிய அங்கத்தவர்கள் நியமிக்கப்படுவதற்கான ஏற்பாடுகளை 2016 ஜுலையில் ஆளுநர் சபை அங்கத்தவர்களின் உத்தியோக பூர்வமாக அவர்களது பதவிக் காலம் காலாவதியானது. 2015 ஆம் ஆண்டின் சிங்கள மொழி மூல டிப்ளோமா பாடநெறியின் பெறுபேறுகள் வெளியிடுவது இன்னும் கிடப்பில் உள்ளது. இதற்கு காரணம் சில ஆசிரியர்கள் தமது பட்டப் பின்படிப்பு கல்வியைத் தொடர்வதற்கு வெளிநாடுகளுக்கு சென்றுள்ளதனால் காலதாமதம் ஆகிறது எனினும் கூடிய விரைவில் பெறுபேறுகளைப் வெளியிடுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

2018 ஆம்ஆண்டின் கீழ் வரும் பாடநெறிகள் நடாத்தப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

தொடரவிருக்கும் பாடநெறிகள் பின்வருமாறு

1. தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலமான இரண்டு டிப்ளோமா பாடநெறிகள், மொத்தமாக 4
2. தமிழ் மற்றும் சிங்கள மொழி மூலமான மூன்று சான்றிதழ் பாடநெறிகள், மொத்தமாக 6

எதிர்காலத் திட்டங்கள்

தற்பொழுது காணப்படும் பாடநெறிகளை பொது சமூகத்தின் தேவைக்கும் கேள்விக்கும் ஏற்றவாறு வடிவமைத்தல்

- இன நல்லிணக்கம், அடிப்படைப் பெறுமதிகள் மற்றும் உரிமைகள் ஆகியவற்றில் குறுகிய காலப் பாடநெறிகள்
- சிறைச்சாலை உத்தியோகத்தர்களுக்கான குறுகிய காலப் பாடநெறி (ஏற்கனவே ஒப்புக்கொள்ளப்பட்டவாறு)
- விழிப்புணர்வைத் திரட்டுதல் மற்றும் பொதுத்தேவையை எட்டுதல்
- வேலைத் தளங்களில் உரிமை அடிப்படையிலான அணுகலை மத்திய மாகாணத்தில் ஒரு நாள் கருத்தரங்கின் மூலம் வடிவமைத்தலும் மற்றும் அமுல்படுத்தலும் (4 கருத்தரங்குகள்)
- பல்கலைக்கழக பணிக்குழு, மாணவர்கள் மற்றும் பொது சனம் ஆகியோருக்கு அதிக நாட்டத்தினையும் முக்கியத்துவத்தினையும் கொண்ட தலைப்புகளில் விளித்து வழமையான மாதாந்த மன்றத்தினை உருவாக்குதல்.
- உதவும் மார்க்கத்தினை வழங்கி (பரிந்துரைகள் மற்றும் வேறு ஊடகங்கள் மூலம்) மனித உரிமை தொடர்பான வாத செய்திகளையும் பிரச்சினைகளையும் நிலையத்தில் தீர்க்க நாடி வருவோருக்கு உதவி செய்தல்.
- அறிவு மற்றும் ஆராய்ச்சிகளை பரப்புதல் அரையாண்டு மும்மொழி சஞ்சிகையின் வருடத்தின் இரண்டு வெளியீடுகளை பொது சனத்திற்கு இடையில் பெருவாரியாக சுழற்சியில் ஈடுபடுத்துதல்.
- உயர் தர ரீதியில் வருடாந்த ஆராய்ச்சி சஞ்சிகையை வெளியிடும் தன்மையை கண்டறிந்து மனிதஉரிமையை அடிப்படையாக கொண்ட அபிவிருத்திக்கான அணுகலில் பல்வேறு கோட்பாடுகளை உடைய அம்சங்களை வெளிப்படுத்தல்.
- மனித உரிமைகள் தொடர்பான கற்றலுக்கான நிலையத்தின் இணையத்தளத்தினை மேம்படுத்துதல்
- நிலையத்தின் வெளிநாட்டு மானியத்தினை பெற்றுக் கொள்ளும் முறையை விருத்தி செய்தல்
- மனித உரிமை பாடநெறியை ஆங்கிலமொழியில் அறிமுகம் செய்தல்.

4.7 பொறியியல் வடிவமைத்தல் நிலையம்

(பணிப்பாளர் - கலாநிதி பி.ஜி.எல்.டி சமரநாயக்க)

அறிமுகம்

பொறியியல் வடிவமைத்தல் நிலையமானது (EDC) 1993 இல் பொதுநலவாய விஞ்ஞான பேரவையின் உதவியுடன் தாபிக்கப்பட்டது. ஆரம்ப கட்டத்தில் பொறியியல் வடிவமைத்தல் நிலையமானது விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப தனிப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டம் என்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் மூலமாக நிதி வசதியளிக்கப்பட்டதோடு தற்போது முழுமையாக சுயமாக இயங்க கூடிய அலகாக பல்கலைக்கழகத்தினுள் காணப்படுகின்றது. பொறியியல் வடிவமைத்தல் நிலையமானது ஆனது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் வர்த்தக கருவியாக செயற்படுகின்றது.
இன் நிலையத்தின் ஆளுகையானது பல்கலைக்கழக விதி முறைகளுக்கேற்ப அமைவதோடு கொள்கைத் தீர்மானங்களானவை குறிப்பிட்ட முகாமைத்துவக் குழு மூலம் எடுக்கப்படுகின்றன. இக் குழுவானது பீடச் சபையின் ஒன்பது உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. இதில் பணிப்பாளரும் தொழில்சார் அங்கத்தவரும் அடங்குவர்.

பொறியியல் வடிவமைத்தல் நிலையத்தின் பதவியணியினர்

இந் நிலையத்தின் கல்விசார் பதவியணியின் அங்கத்தவரொருவர் பகுதி நேர பணிப்பாளராக பதவி வகிக்கின்றார். பதவியணியானது இரண்டு பொறியியலாளர்களையும் நான்கு கல்விசாரா பதிவியணியினரையும் உள்ளடக்கியுள்ளது.

அடைவுகள்

2017 ஆம் ஆண்டில் பொறியியல் வடிவமைத்தல் நிலையமானது 147 செயற்றிட்டங்களையும் 30 செயலமர்வுகளையும் நிர்வகிக்கின்றது. நாம் அரச நிறுவனங்களின் 60% செயற்றிட்டங்களை மேற்கொண்டோம். இவற்றுள் வீதி அபிவிருத்தி அதிகாரசபை , உணவு திணைக்களம், நீர் விநியோக, வடிகாலமைப்பு சபை , இலங்கை மின்சார சபை , தொல்லியல் திணைக்களம், மத்திய சுற்றாடல் அதிகாரசபை , நீர்பாசனத் திணைக்களம், யாழ்ப்பாணம் மற்றும் மாத்தளை ஆகிய நகர சபைகள் போன்றவை இவற்றுள் அடங்கும்.
பொறியியல் வடிவமைத்தல் நிலையத்துடன் கைகோர்த்து சிங்கப்பூரின் நயாங் தொழிநுட்ப பல்கலைக்கழகமானது பொறியியல் நிபுணத்துவ சேவைகள், தேசிய மற்றும் சர்வதேச ரீதியான தொழில் சார் சேவைகளை வழங்குகின்றது. இதனை விட மேலதிகமாக யப்பானின் குறிட்ட நீர் சுற்றாடல் நிறுவனம் இலங்கை நீர்த் தரம் தொடர்பான கருத்திட்டத்தில் வாடிக்கையாளராக மாறியுள்ளதுடன் பொறியியல் வடிவமைத்தல் நிலையமானது பொறியியல் சேவைகளில் தொழில் நிபுணத்துவத்தினை வழங்குகின்றது.
இந்த வருடத்தில் இருந்து, ஆய்வு கூடங்களில் சகல பொறியியல் பரிசோதனைகளையும் பொறியியல் வடிவமைத்தல் நிலையத்தினூடாக உச்சபட்சத்தில் இயலச் செய்வதில் வெளிப்படைத் தன்மையைக் கொண்டு, தரமான சேவையை மற்றும் சரியான நேரத்திலான வினியோகத்தினையும் கொண்டு நிர்வகிக்கப்பட உள்ளது.
பொறியியல் வடிவமைத்தல் நிலையமானது கௌசிக உருவாக்க பயிற்சிப் பட்டறைகளை அரச நிறுவனங்களுக்கும் அதாவது கல்வி அமைச்சு, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சு வாசோ – ஆசியா கருத்திட்டம் போன்றன இந்த காலப்பகுதிக்கள் மீளாய்வுக்கு கீழ் உள்ளன.
இதனை விட மேலதிகமாக, வழமையான பயிற்சிப் பட்டறைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் இலங்கை பொறியியல் நிறுவகத்தின் உடனுளைப்புடன் இந்தியாவின் பூனையைச் சேர்ந்த கந்துரட்ட சாப்டர் மற்றும் போபர்ஸ் மார்ஸல் தனியார் நிறுவனம் என்பனவற்றுடன் இணைந்து மேலும் பல செயற்றிட்டங்கள் நடாத்தப்படுகின்றன.
உலக வங்கியின் நிதியுதவியுடன் மகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் அமைச்சினுடைய வெற்றிகரமாக முடிக்கப்பட்ட பயிற்சியாளர் பயிற்சி நிகழ்ச்சியின் வடக்கு மற்றும் கிழக்கு உள்ளுர் கீழ் கட்டமைப்பு மேம்படுத்தும் கருத்திட்டத்தில் 140 தொழில் நுட்ப உத்தியோகத்தர் வரை சான்றிதழ்கள் வழங்குவிக்கப் பட்டன.
2017 வருடாந்த கருத் திட்டங்களிலிருந்தும் நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்தும் ரூபா 67 மில்லியன் புரள்வாக பெற்றுக் கொள்ளப்பட்டது. இதில் 49 மில்லியன் பொறியியல் கருத்திட்டங்களிலிருந்தும் ரூபா 18 மில்லியன் பயிற்சிப் பட்டறைகளில் இருந்தும் கிடைத்தது. 2016 இல் புள்ளிவிபர தொடர்புகளில் இருந்து 32 மில்லியன் புரள்வாகவும் அதே நேரம் பொறியியல் கருத்திட்டத்திலிருந்து 22 மில்லியன் ரூபாயும் மற்றும் பயிற்சிப் பட்டறையில் இருந்து 10 மில்லியன் ரூபாயும் கிடைத்தன.

எதிர்கால திட்டங்கள்

இலங்கை அரசாங்கத்தினால் தேசிய அபிவிருத்தியினை அடையாளப்படுத்தி புத்தாக்கத்தினை முக்கியமாகக் கொண்டுள்ளது. பொறியியல் வடிவமைப்பு நிலையமானது பொறியியல் பீடத்தின் முக்கியமானதொரு அலகாக காணப்படுவதுடன் அதன் குறிக்கோள்களுக்கு ஏற்ப செயற்படுகின்றது. பேராதனைப் பல்கலைக்கழகம் பொறியியல் வடிவமைப்பு நிலையத்தின் முகாமைத்துவ குழுவிற்கு அனுமதி வழங்கியுள்ளது. இது 2018 ஆம் ஆண்டின் பொறியியல் பீடத்தின் ஒரு நிலையமாக உருவாக்கப் பட்டுள்ளதுடன் பட்டப்படிப்பு மற்றும் பட்டப் பின்படிப்பு கருத்திட்டங்களை வியாபார மயப்படுத்தி மேலும் அந்த நிறுவனம் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

4.8 அவசர வைத்திய மற்றும் இடர் முகாமைத்துவ பயிற்சி நிலையம் (HEDMaTC)

(பணிப்பாளா - பேராசிரியர் எம். டி. லமாவன்ச)

அறிமுகம்

அவசர வைத்திய மற்றும் இடர் முகாமைத்துவ பயிற்சி நிலையம் (HEDMaTC) ஆனது இலங்கையில் பேராதனை பல்கலைக்கழக வைத்திய பீடத்தில் 2005 ஆண்டில் அதன் ஆரம்ப நிலையைக் கொண்டு அவசர வைத்திய மற்றும் இடர் முகாமைத்துவ பயிற்சி நிகழ்ச்சியை நடத்துவதில் முன்னணியில் திகழ்ந்து கொண்டு இருக்கின்றது. பொது சன அவசர வைத்திய மற்றும் இடர் முகாமைத்துவ பயிற்சி பாடநெறிகள் (PHEDMa) உலக சுகாதார அமைப்பின் உடனுழைப்புடன் இந்த அலகினால் சுகாதார, உணவூட்டல் மற்றும் சுதேச வைத்திய அமைச்சு சுகாதார நிருவாகிகள், தொழிநுட்பவியலாளர்கள், கல்வி நிறுவனங்களின் ஆசிரியப் பணிக்குழு அரச நிர்வாகிகள் சட்ட அமுலாக்க உத்தியோகத்தர்கள் ஏனைய அத்தியாவசிய சேவைகளில் உள்ள நகர சபை அங்கத்தவர்கள் தேசிய கொள்கைகளை முறைப்படுத்துவதில் / மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளவர்கள், வழிகாட்டிகள் / நியங்கள் விதிகளை இயக்குபவர்கள் அல்லது சுகாதரத் துறையில் இடர் முகாமைத்துவத்திற்கு கற்பிப்பவர்கள் / பயிற்சி அளிப்பவர்கள் ஆகியோருக்கு நடாத்தப்படுகின்றது. ஆதலால் 11 மேற்படி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டுள்ளது. அதனை விட, பொது சன அவசர வைத்திய மற்றும் இடர் முகாமைத்துவ பயிற்சி பாடநெறிகள் பாடநெறி மதிப்பீடு மற்றும் பாடநெறி மீளாய்வு பயிற்சிப் பட்டறை மற்றும் பொது சன அவசர வைத்திய மற்றும் இடர் முகாமைத்துவ பயிற்சி பாடநெறி பாடத் திட்ட அபிவிருத்தி பயிற்சிப் பட்டறை ஆகியன நடாத்தப்பட்டுள்ளது. அவசர வைத்திய மற்றும் இடர் முகாமைத்துவ பயிற்சி நிலையம் சுகாதார அமைச்சு (MoH) மற்றும் ஐக்கிய நாடுகள் மக்கள் தொகை நிதி ஆகியவற்றின் உடனுழைப்புடன் தொகையீட்டுக்குரிய பாலியல் மற்றும் இனப் பெருக்க சுகாதார சேவைகள் பிரச்சினைகள் (SRH) ஆகியவற்றில் 11 தேசிய பயிற்சிப் பட்டறைகளை வெற்றிகரமாக நடத்தியது. அதனை விட மேலதிகமாக வைத்தியர்கள் முதல் பணியாளர்கள், தாதிகள் மற்றும் பாடசாலைப் பிள்ளைகள் ஆகியோருக்காக 10 முதன் நிலை வைத்தியசாலை பாதுகாப்பு நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன.

அடைவுகள

இந்த நிலையம் சகல பங்கு பற்றுனர்களின் விபரங்களை அடையாளம் கண்டு கொள்வதற்கு மற்றும் தொகையீட்டுக்குரிய பாலியல் மற்றும் இனப் பெருக்க சுகாதார சேவைகள் பிரச்சினைகள் (SRH) பயிற்சிப் பட்டறைகளில் பங்கு பற்றிய வளவாளர்கள், பொது சன அவசர வைத்திய மற்றும் இடர் முகாமைத்துவ பயிற்சி பாடநெறிகள் (PHEDMa) GIS இல் படமிடல் தொழிநுட்பத்தைப் பயன்படுத்தி முகாமைப் படுத்தப்பட்டது. இந்த விபரங்கள் நிலையத்தின் இணையத் தளத்தில் காணப்படுகின்றது.

தோல்விகளும் மற்றும் சரிப்படுத்தல்களும்

10 ஆவது மற்றும் 11 ஆவது PHEDMa நிகழ்ச்சிகள் மற்றும் மேலும் ஒரு PHEDMa தனியார் துறைக்காக 2017 ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் PHEDMaTC உலக சுகாதர நிறுவனத்தில் இருந்து அல்லது சுகாதார அமைச்சகத்தில் இருந்து இந்த வருடம் முழுவதும் எது விதமான நிதியையும் பெற்றுக் கொள்ளவில்லை என்பதனால் எந்த ஒரு பயிற்சிப் பட்டறையையும் நடத்த முடியாமல் போய்விட்டது.

எதிர்கால திட்டம்

- ஏனைய பீடங்களில் உள்ள பல்கலைக்கழக பணிக்குழுவிற்கும் மாணவர்களுக்கும் முன்னிலை வைத்தியசாலை பாதுகாப்பில் தொகுதியொன்றினை உருவாக்குதல்.
- வங்கியாளருக்காக ஏற்றவாறு வடிவமைக்கப்பட்ட ஒரு நாள் பயிற்சியினை நடத்துதல்.
- இந்த நிலையத்திற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவில் இருந்து அனுமதியைப் பெற்றுக் கொள்ளுதல்.
- பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞான பட்டப் பின்படிப்பு நிறுவகத்தின் பட்டப் பின்படிப்பு மாணவர்களுக்கு பொதுஜன அவசர வைத்திய மற்றும் இடர் முகாமைத்துவ பயிற்சி பட்டறையை நடாத்துதல்
- சுகாதர அமைச்சின் உடனுளைப்புடன் நோயாளி வண்டி சாரதிகளுக்கு வருடாந்த பயிற்சி நிகழ்ச்சிகளை தயாரித்தல்.

4.9 உள்ளகத் தர உத்தரவாதப் பிரிவு (IQAU)

(பணிப்பளா - பேராசிரியர் பிரசாத் சேத்துங்க)

அறிமுகம்

உள்ளகத் தர உத்தரவாதப் பிரிவு (IQAU) ஆனது பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பல்கலைக்கழக மானிய ஆணைக் குழுவின் 04 / 2015 இலக்கத்தை உடைய புதிய சுற்றிக்கையில் நிர்ணயிக்கப்பட்டுள்ள வழிகாட்டலுக்கு ஏற்ப 2016 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மீள் ஸ்தாபிக்கப்பட்டது. உள்ளகத் தர உத்தர வாதப்பிரிவின் நோக்கத்தினை மேம்படுத்திக் கொள்ளவும் மற்றும் ஸ்தாபன மயப்படுத்தும் ஒரு தர கலாச்சார நடவடிக்கைகளை பல்கலைக்கழகத்துடன் திட்டமிடுதல், ஏற்பாடு செய்தல், ஒருங்கிணைப்பு செய்தல், உதவுதல், அமுல்படுத்தல், கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் ஆகிய சகல உள்ளகத் தர உத்தர வாத நடவடிக்கைகள், பல்கலைக்கழகங்கள் மானிய ஆணைக் குழுவின் தர உத்தரவாத சபை (QAC) அவற்றை ஒருங்கிணைத்து கொள்ளுதல் ஆகும். உள்ளகத் தர உத்தர வாதப்பிரிவின் நடவடிக்கைகள் முகாமைத்துவக் குழுவில் உள்ளடக்கி சகல பீடங்களுக்குமான பிரதிநிதிகள் நிர்வகிக்கப் பட்டுள்ளதுடன் ஏனைய பல்கலைக்கழக அதிகாரிகளுக்கு உள்ளகத் தர உத்தர வாதப்பிரிவின் பணிப்பாளரினால் தலைமை வகிக்கப்பட்டது.

அடைவுகள்

இவ்விலக்கினை அடையும் வகையில் உள்ளகத் தர உத்தர வாதப்பிரிவின் பணிப்பாளர் மற்றும் சம்பந்தப்பட்ட உறுப்பனர்கள் தர உத்தரவாத சபையினால் (QAC) நடாத்தப்பட்ட இரண்டு நாள் செயலமர்விலும் பல்கலைக்கழக மாணிய ஆணைக்குழுவின் தர நிர்ணய நிறைவேற்றுக் குழுவினால் (QASC) நடாத்தப்பட்ட அனைத்துக் கூட்டங்களிலும் கலந்து கொண்டனர். தர நிர்ணய மற்றும் அதிகாரப்படுத்தல் நிறைவேற்றுக் குழுவினால் கோரப்பட்ட தகவல்கள் குறித்த நேரத்தில் வழங்கப்பட்டதுடன் உள்ளகத் தர உத்தரவாதப் பிரிவின் முன்னேற்றம் தொடர்பாக தர நிர்ணய மற்றும் அதிகாரப்படுத்தல் நிறைவேற்றுக் குழுவில் தெரிவிக்கப்பட்டது. பெறப்பட்ட தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் அமுல்படுத்தப்பட வேண்டிய செயன்முறைகள் தொடர்பாக கலந்தாலோசிப்பதற்குமாக பன்னிரெண்டு (12) கூட்டங்களை உள்ளகத் தர உத்தர வாதப் பிரிவு நடாத்தியது. அதற்கமைய கீழ்வரும் செயற்பாடுகள் 2017 ஆம் வருடம் முன்னெடுக்கப்பட்டு அமுல்படுத்தப்பட்டன.

- இந்த வகையில் வெவ்வேறு நடவடிக்கைகளை செயற்திறன் மதிப்பெண் அட்டையுடன் (PSC) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் தர உத்தரவாத மற்றும் அங்கிகார சபையினால் (QAAC) அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளகத் தர உத்தர வாதப்பிரிவின் இந்த வருட இலக்குகளில் 70 வீதத்தக்கும் மேலாக குறைந்த பட்ச் 60 வீதம் வரையும் அடையப்பட்டுள்ளது.
- பேராதனைப் பல்கலைக்கழகத்தின் உள்ளகத் தர உத்தர வாதப்பிரிவு இணையத் தளத்தை பராமரிக்க அர்பணித்து இருந்தது.
- உள்ளகத் தர உத்தர வாதப்பிரிவின் உடைய வரைபு உருவாக்கத்தின் இடைக் கால விதிகளுக்கு பல்கலைக்கழகத்தின் பீடங்கள், பிரதி உபவேந்தர் மற்றும் சட்ட வல்லுநர் ஆகியோரிடம் இருந்து கருத்துக்களையும் மற்றும் அபிப்பிராயங்களையும் பெற்றுக் கொண்டது.
- உள்ளகத் தர உத்தர வாதப்பிரிவு மற்றும் பீட தர உத்தர வாதப்பிரிவு (FQAC) ஆகியவற்றிற்கான எதிர்வரும் மூன்று வருடங்களுக்கான செயற்பாட்டுத் திட்டம் மற்றும் வரவு செலவுத் திட்டம் (2017 - 2019) ஆகியவற்றைத் தயாரித்தலும் தேவையான நடவடிக்கைகளுக்காக உயர் அதிகாரிகளிடம் சமர்ப்பித்தலும்.
- ஆணைக்குழுவின் 04/2015 சுற்றறிக்கையின் பிரமாணங்களுக்கமைய உள்ளகத் தர உத்தர வாதப்பிரிவின் பங்கு மற்றும் பொறுப்புக்கள் ஆகியன தொடர்பான பீட மட்டத்திலான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடாத்தல்.

ஏற்பாடு	நிகழ்ச்சி	திகதி	இலக்காகக் கொண்ட குழு	பங்கு பற்றுனர்களின் எண்ணிக்கை
உள்ளகத் தர உத்தர வாதப்பிரிவு	தர உத்தரவாதத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி	25.11.2016	கல்விசார் பணிக்குழுவினர்	45
பீட தர உத்தர வாதப்பிரிவு /பல் மருத்துவ விஞ்ஞானங்கள்	விழிப்புணர்வு நிகழ்ச்சியில் தர உத்தரவாத விடயங்கள் மற்றும் PR	28.03.2017	கல்விசார் பணிக்குழுவினர்	25

ஏற்பாடு	நிகழ்ச்சி	திகதி	இலக்காகக் கொண்ட குழு	பங்கு பற்றுனர்களின் எண்ணிக்கை
உள்ளகத் தர உத்தர வாதப்பிரிவு	விழிப்புணர்வு நிகழ்ச்சியில் தர உத்தரவாதசெயற்பாடுகள் மற்றும் IR பின்னூட்டிகளைப் பற்றிய IR 2016 நிபுணர்களின் கலந்துரையாடல் IR 2021 ஐ நோக்கிய முன்னீட்சிகள்	24.04.2017	பீடாதிபதிகள் / பீட தர உத்தர வாதப்பிரிவு தலைவர்கள் மற்றும் அங்கத்தவர்கள்	80
பீட தர உத்தர வாதப்பிரிவு / பொறியியல் பீடம்	தர உத்தரவாதத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடவடிக்கைகள் மற்றும் PR	18.05. 2017	கல்விசார் பணிக்குழுவினர்	58
தர உத்தரவாத சபை / பல்கலைக்கழக மானிய ஆணைக் குழு மற்றும் உள்ளகத் தர உத்தரவாதப் பிரிவு / பேராதனைப் பல்கலைக்கழகம்	நிகழ்ச்சி மீளாய்வாளர்களுக்கான பயிற்சியில் பயிற்சிப் பட்டறை	7.06. 2017	அரச பல்கலைக்கழகங்களின் சகல மீளாய்வாளர்கள்	65
உள்ளகத் தர உத்தரவாதப் பிரிவு மற்றும் பீட தர உத்தர வாதப்பிரிவு / கலைப் பீடம்	கலைப் பீடத்தின் SER:PR 2017 தயாரிப்பில் இறுதி பயிற்சிப் பட்டறை ஆலோசனை	12.06. 2017	SER எழுத்தாளர்கள் மற்றும் பீட தர உத்தர வாதப்பிரிவு அங்கத்தவர்கள்	47
உள்ளகத் தர உத்தரவாதப் பிரிவு மற்றும் பீட தர உத்தர வாதப்பிரிவு / இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடம்	தர உத்தரவாதத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி	20.06. 2017	இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தின் கல்விசார் பணிக்குழுவினர்	32
உள்ளகத் தர உத்தரவாதப் பிரிவு	தர உத்தரவாதத்தில் 4 வது விழிப்புணர்வு நிகழ்ச்சி	11.08. 2017	பல்கலைக்கழக நிர்வாக பணிக்குழுவினர்	62
உள்ளகத் தர உத்தரவாதப் பிரிவு /மிருகவைத்தியம் மற்றும் விலங்கு விஞ்ஞானங்கள் பீடம்	தர உத்தரவாதத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி	11.09. 2017	கல்விசார் பணிக்குழுவினர்	38
உள்ளகத் தர உத்தரவாதப் பிரிவு மற்றும் பீட தர உத்தர வாதப்பிரிவு /மருத்துவபீடம்	விழிப்புணர்வு நிகழ்ச்சில் தர உத்தரவாத செயற்பாடுகள்	19.10.2017	பீடத்தின் கல்விசாரா பணிக்குழுவினர்	220
பீட தர உத்தர வாதப்பிரிவு /பல் மருத்துவ விஞ்ஞானங்கள் பீடம்	தர உத்தரவாதத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி	09.10. 2017	பீடத்தின் கல்விசாரா பணிக்குழுவினர்	85
உள்ளகத் தர உத்தரவாதப் பிரிவு மற்றும் பீட தர உத்தர வாதப்பிரிவு / கலைப் பீடம்	சுய மதிப்பீட்டு அறிக்கை எழுதுதல் 2018	16.11.2017	பணிக்குழு உறுப்பினர்கள்	10
பீட தர உத்தர வாதப்பிரிவு /முகாமைத்துவபீடம்	தர உத்தரவாத மற்றும் நிகழ்ச்சி மதிப்பீட்டில் பயிற்சி பட்டறை	29.11.2017	கல்விசார் பணிக்குழு உறுப்பினர்கள்	30
உள்ளகத் தர உத்தரவாதப் பிரிவு	தர உத்தரவாதத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி	14.12.2017	பல்கலைக்கழகங்கத்தின் கல்விசாரா பணிக்குழுவினர் (எழுது வினைஞர் மற்றும் அதனோடு இணைந்த தரங்கள்)	82
பீட தர உத்தர வாதப்பிரிவு /விஞ்ஞான பீடம்	தர உத்தரவாதத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சி	15.12.2017	பீடத்தின் கல்விசாரா பணிக்குழுவினர்	94

எதிர்காலத் திட்டங்கள்

- தர உத்தரவாத விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை திட்டமிட்டு நடத்தலும் மற்றும் தர உயர்வு கலாச்சாரத்தினை மேம்படுத்துவதற்கு பல்கலைக்கழக சமூகத்தின் உரிய அங்கத்தவர்களை இந்த பயிற்சி நிகழ்ச்சியில் கலந்து கொள்ளச் செய்தல்
- பீட தர உத்தர வாதப்பிரிவு யின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- சுய மதிப்பீட்டு அறிக்கை தயாரித்தலிலும் திட்ட மீளாய்விற்காக தயார்படுத்துவதிலும் FQAC இற்கு வழிகாட்டல்.
- 2016 இல் நடாத்தப்பட்ட நிறுவன ரீதியான மீளாய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கான ஒரு செயற்றிட்டத்தினை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கான ஒரு செயலமர்வினை நடாத்தல் மற்றும் தேவையான நடவடிக்கை எடுத்தல்.
- தர உத்தரவாத மற்றும் அங்கிகார சபையினால் அறிமுகப்படுத்தப்பட்ட உள்ளகத் தர உத்தர வாதப்பிரிவு புள்ளிப்படிவத்தில் 80% இற்கு மேலான மொத்தப் புள்ளிகளைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.
- உள்ளகத் தர உத்தர வாதப்பிரிவின் இடைக் கால விதிகளை இறுதிவடிவம் பெறச் செய்தல்
- சகல நடவடிக்கைகளுக்கும் நியம செயற்பாட்டு விதிகளை தயாரித்தல்
- முகாமைத்துவ குழு உறுப்பினர்களுக்கும் மற்றும் FQAC க்கும் TOR ஐ தயாரித்தல்

4.10 சர்வதேச ஆராய்ச்சி நிலையம் (InRC)

(பணிப்பாளர் - கலாநிதி நந்த குணவர்தன)

அறிமுகம்

2011 ஆம் ஆண்டில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவானது இலங்கையின் ஆறு பல்கலைக்கழகங்களை உலக தரம் வாய்ந்த பல்கலைக்கழகங்களாக பறிமாற்றுவதற்காக பரிந்துரைத்திருந்தது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவானது இந்த நிகழ்ச்சிக்காக குறிப்பிட்டளவு நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டுள்ளதோடு அதற்கான கருத்திட்ட பரிந்துரைகளை ஆறு பல்கலைக்கழகங்களிலிருந்தும் விண்ணப்பங்களை கோரியுள்ளது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 2011 ஜுன் 25 இல் நடைபெற்ற 397 ஆவது பேரவைக் கூட்டத்தில் பல்ஒழுக்க ஆராய்ச்சி நிலையம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென பரிந்துரை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தின் தொலைநோக்கு சர்வதேச ரீதியாக பேரதானைப் பல்கலைக்கழகம் தொடர்பான தெளிவைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை வழங்குதல் மற்றும் கல்வி மற்றும் ஆராய்ச்சி நடவடிக்கைகளில் சிறந்த நிறுவகமாக செயற்படுதல் என்பதாகும்.

மேலதிக விடயங்களுக்காகவும் தகவல்களுக்காகவும் தயவுசெய்து எமது இணைய முகவரியான http://www.pdn.ac.lk/uop/inrc/index.php என்பதை பார்க்கவும்.

அடைவுகள்

கடந்த ஆறு ஆண்டுகளுக்கு மேலாக சர்வதேச ஆராய்ச்சி நிலையமானது 2017ஆம் ஆண்டில் அதன் குறிக்கோள்களை அடைவதற்காக பல செயற்பாடுகளில் ஈடுபட்டதோடு அதன் பிரதான செயற்பாடுகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

1. கீழ் வரும் அமைப்புகள் / பல்கலைகடகழகங்களுடன் சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தால் ஐந்து புரிந்துணர்வு உடன் படிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு கையெழுத்திடப்பட்டது. :
   i. ரோமானியா க்லஜ் - நபோகா தொழிநுட்ப பல்கலைக்கழகம்
   ii. இத்தாலி பொக்கியா பல்கலைக்கழகம்
   iii. சிங்கப்பூர் நங்யங் தொழிநுட்பவியல் பல்கலைக்கழகம்
   iv. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் கனெக்டிகட் பல்கலைக்கழகம்
   v. சீன ஹுவாக்கியோ பல்கலைக்கழகம்

2. சர்வதேச ஆராய்ச்சி நிலையமானது கீழ் வரும் நிறுவனங்களுடன் இன்னும் 04 புரிந்துணர்வு உடன்படிக்கைகளை 2018 ஆம் ஆண்டு கையெழுத்திடுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்துள்ளது.
   i. சீன ஜியோ டங் பல்கலைக்கழகம்
   ii. சீன செங்டு தேசிய பல்கலைக்கழகம்
   iii. நோர்வேயின் தென்கிழக்கு கல்லூரி பல்கலைக்கழகம்
   iv. ஐக்கிய அமெரிக்க நாடுகளை சேம் கவுஸ்ரன் அரச பல்கலைக்கழகம்

சர்வதேச ஆராய்ச்சி நிலையமானது உடனுழைப்பு நடவடிக்கைகளை ஆரம்பிக்கவும் மற்றும் பாடநெறிகளை பரிமாற்றிக் கொள்ளவும் சர்வதேச பல்கலைக்கழகங்களில் இருந்து 10 ஆணைப்பேராள் குழு ஒன்றினை பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்தலை ஒருங்கிணைப்பு செய்தது. மாணவ பரிமாற்ற நிகழ்ச்சியின் விளைவாகவும் பல கல்வி நிகழ்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டதன் விளைவாகவும் பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு கணிசமான அளவு நன்மைகளை பயக்குவதாக இருந்தது.

இவை ஐக்கிய அமெரிக்க நாடுகளின் தீபாஊ பல்கலைக்கழகம், இத்தாலியின் பெரேசியாப் பல்கலைக்கழகம், யப்பனின் ஹொாக்கைடோ பல்கலைக்கழகம், ஸ்கெயார்ட் ஹார்ட் பல்லைக்கழகம் மற்றும் தென்மேல் மின்சூ பல்கலைக்கழகம் ஆகிய பல்கலைக்கழகங்கள் தங்கியிருந்தும் வெளியில் சென்றும் கற்பதற்கு நீண்ட நாள் பாடநெறி நிகழ்ச்சிகளையும் மற்றும் நீண்ட நாள் மாணவர்களை பரிமாற்றிக் கொள்ளும் நிகழ்சிகளையும்.

பொக்கியா, பெரேசியா பல்கலக்கழகம், மத்திய கிழக்கு தொழிநுட்ப பல்கலைக்கழகம் (METU), துருக்கி மற்றும் சகா பல்கலைக்கழகம், யப்பானால் பராமரிக்கப்பட்ட வெளியிட பரிமாற்றங்கள், அதே சமயம் யப்பானின் உட்டுசுமியா பல்கலைக்கழகம் ஸ்பெயினின் எக்ஸ்ட்ரீமதுர பல்கலைக்கழகம், கிரீஸீன் கிரட்

பல்கலைக்கழகம் யப்பனின் சகா பல்கலைக்கழகம் ஆகியன மாணவர்களை உள்ளிடத்தில் தங்கியிருந்து கற்கும் மாணவர் பரிமாற்ற பல்கலைக்கழகம் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சர்வதேச ஆராய்ச்சி நிலையம் இவ்வருட மீளாய்வின் கீழ் ERASMUS எரஸ்மஸ் நிகழ்ச்சியின் கீழ் கருத்திட்ட பரிந்துரைவுகள் சமர்பிக்கப் பட்டுள்ளதுடன் உயர் கல்வித் துறையில் புதிய கண்டு பிடிப்புகளையும் ஊக்குவிக்கக் கூடிய திறமையான திட்டங்களையும் அபிவிருத்தி செய்து கொள்ள ஏற்றுக் கொண்டுள்ளது. இன்னொரு பரிந்துரை முன்னர் அதிகரிக்கப்பட்ட யப்பனின் டெக்டோக்கியோ பல்கலைக்கழகத்தில் தொழிநுட்ப மற்றும் இலங்கையில் புதிய தொழிநுட்பங்களை அதிகரிக்கும் போது குறைவான நீரும் மின்சாரமும் பயன்படுத்த முடியுமானதாக இருக்கும்.

தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

விமான டிக்கட்டுக்களை கொள்வனவு செய்வதில் காணப்படுகின்ற சில விதிமுறைகள் காரணமாக 2015 மற்றும் 2016 ஆகிய ஆண்டுகளில் பிரயாண மானிய செயன் முறையில் சில தாமதங்கள் காணப்படுகின்றன. இதன் பிரதிபலனாக, சர்வதேச ஆராய்ச்சி நிலையமானது பங்கு பற்றுனர்களாக இருக்கும் வெளிநாட்டு புலமையாளர்களைக் கவர்வதில் இடர்களுக்கு முகங் கொடுத்து வருகின்றதனால் போதுமான சர்வதேச மாநாடுகளை ஒழுங்கு செய்வது தாமதமாகி வருகிறது.
சர்வதேச விவகார அலுவலகம் பதவிநிலைகளை உருவாக்கிக் கொள்வதில் சிரமங்களுக்கு முகங் கொடுத்ததால் நாளாந்த அலுவலக செயற்பாடுகளும் பாதிக்கப்பட்டுள்ளன. மூதவையின் அனுமதியுடன் சர்வதேச ஆராய்ச்சி நிலையம் என்ற பெயர் சர்வதேச விவகார அலுவலகம் என்ற பெயருக்கு மாற்றப்பட்டு புதிதாக பதவிநிலைக் கோரிக்கைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவின் அனுமதிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

எதிர்காலத் திட்டங்கள்

IAO ஆனது ஐரோப்பிய சங்கத்தின் உடனுழைப்புடன் 2018 ஆம் ஆண்டின் மூன்று புதிய மானியங்களை ஆரம்பித்து வைக்கவுள்ளது. ஐரோப்பிய சங்கத்துடன் இணைந்து மாணவர் / பணிக்குழுவினர் பரிமாற்ற நிகழ்சிகளுக்கு இந்த மானியத்தைப் பயன்படுத்தி பல்கலைக்கழகத்தில் இணைந்துள்ள கல்விசார் அணியினரின் நலத்திற்கு இதனைப் பயன்படுத்த உள்ளது.

கன்பியூசியஸ் நிலையம் சீன புஜியன் விவசாய மற்றும் வனவியல் பல்கலைக்கழகத்தின் உடனுளைப்புடன் பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்துடன் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதன் ஆரம்ப செயன் முறைகளில் மொழி மற்றும் கல்வி நிலையங்களின் செயற்பாடுகள் ஏற்கனவே செயன்முறைகளில் உள்ளன.

2018 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்படவுள்ள பேராதனைப் பல்கலைக்கழகத்தின் அதி நவீன வானிலை நிலையம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதன் படி, ஆரம்ப கட்ட கலந்துரையாடல்கள் சீனாவின் சீன விஞ்ஞானக் கலைக் கூடம் மற்றும் இலங்கையின் வானவியல் திணைக்களம் (DoM) உடன் கொண்டு நடாத்தப்படுகின்றது. பௌதீகவியல் பூகோளவியல் மற்றும் புவியியல், விஞ்ஞானப் பீடம் ஆகியன இந்தக் கருத்திட்டத்தில் ஈடுபட்டு மேலும் ஒரு அதி நவீன டோப்லர் ரேடார் முறைமையையும் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

சக்குரா விஞ்ஞான நிகழ்ச்சி 2018 ஆம் ஆண்டு தொடரப்பட உள்ளதுடன் மேலும் 02 புனைக்கதை நிகழ்ச்சிகளும் ஜப்பானிய நிறுவனங்களின் உடனுழைப்புடன் உருவாக்குவதற்காக ஆரம்பிக்கப்பட உள்ளது.

4.11 அலுவலர்கள் அபிவிருத்தி நிலையம்
(பணிப்பாளர - கலாநிதி ரஞ்சித் பல்லேகம)

அறிமுகம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பணிக்குழு அபிவிருத்தி நிலையமானது (SDC) 1999 மார்ச் மாதம் தாபிக்கப்பட்டது. தனிப்பட்ட பீடங்களின் வேறுபட்ட அலகுகளின் பொது நிறுவனமாக இந்நிலையமானது பேராதனைப் பல்கலைக்கழக மற்றும் முறைமையிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்களின் பணிக்குழு அபிவிருத்தியை மேம்படுத்தும் செயற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. தற்போது பணிக்குழு அபிவிருத்தி நிலையமானது நாட்டின் ஏனைய நிறுவனங்களுக்கும் பணிக்குழு அபிவிருத்தி சேவைகளை வழங்கக் கூடிய இயலளவை பெற்று காணப்படுகிறது.

அடைவுகள்

இந்த ஆண்டிற்குள் பணிக்குழு அபிவிருத்தி நிலையமானது பின்வரும் பயிற்சிப் பட்டறைகளையும், பயிற்சி நிகழ்ச்சிகளையும் நடாத்தியுள்ளது.

விஞ்ஞான பீட தற்காலிக கல்விசார் பணிக்குழுவிற்கு மூன்று நாள் ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சி
விஞ்ஞான பீட தற்காலிக கல்விசார் பணிக்குழுவிற்கு மூன்று நாள் ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சி ஜனவரி 17 ஆம் - 19 ஆம் திகதி வரைக்கும் பணிக்குழு அபிவிருத்தி நிலையத்தில் நடைபெற்றது. பேராசிரியர் எஸ். ஆர். கொடிதுவக்கு, கலாநிதி ரஞ்சித் பல்லேகம, கலாநிதி சஞ்சீவ மைத்திரிபால, கலாநிதி ஜெயலத் எதிரிசிங்க, கலாநிதி சாலிந்த பௌரகம, கலாநிதி ருவான் நவரத்ன, பேராசிரியர் மாதவமீகஸ் கும்புர, பேராசிரியர் அனுரவிக்ரமசிங்க மற்றும் கலாநிதி செல்ரன் பெரேரா ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டதுடன் மற்றும் பதினெட்டு தற்காலிக கல்விசார் பணிக்குழு உறுப்பினர்கள் இந்த நிகழ்ச்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்தனர்.

வளவாளர்களுக்கு இடையிலான ஆழ்ந்து கற்கின்ற செயலமர்வு
அரைநாள் “ஆழ்ந்து கற்கின்ற செயலமர்வு ஒன்று வளவாளர்களுக் கிடையில் நடைபெற்றது. இந்த நிகழ்வின் பிரதான நோக்கம் மிக வினைத் திறனுடைய வளவாளர்களாக இருந்தவர்கள் மற்றும் ஏற்கனவே நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சிகளில் அனுபவமுள்ள பிரச்சனைகளுக்கு நடைமுறைக்கு ஏற்ற தீர்வுகளைக் காணுதல் ஆகியனவாக இருந்தன. இந்த அமர்வு ஜனவரி 20 ஆம் திகதி நடை பெற்றதுடன் இருபது வளவாளர்கள் இந் நிகழ்ச்சியில் பங்கு பற்றினர்.

“உற்பத்தி மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கான சாதகமான வேலைக்கலாச்சாரம் ” தொடர்பான ஒரு - நாள் எழுது வினைஞர் தரம் சார் பணிக்குழு அங்கத்தவர்களுக்கான செயலமர்வு
“உற்பத்தி மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கான சாதகமான வேலைக்கலாச்சாரம் ” தொடர்பான ஒரு – நாள் செயலமர்வு சுருக்கெழுத்தாளர்கள், எழுது வினைஞர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் அதனோடு இணைந்த தரத்திலானவர்களுக்கு நடாத்தப்பட்டது. இந்த பயிற்சிப் பட்டறையானது மார்ச் 13 ஆம் திகதி கலைப் பீடத்தின் கல்வித் துறையில் நடாத்தப்பட்டது. இந்த பயிற்சிப் பட்டறையில் பேரவைக்கட்டிடத்தில் உள்ள வெவ்வேறு நிர்வாகப் பிரிவுகளில் இருந்தும் நூலகச் சேவைகளில் இருந்தும் எண்பத்தியாறு பணிக்குழு உறுப்பினர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். இந்த பயிற்சிப் பட்டறையை பேராசிரியர் எம் திலகசிறி [பி. எஸ். சி. கௌரவம் எம்பிஏ (பெர்மிங்காம்) எப்சிஎம்ஏ] இலங்கை அபிவிருத்தி நிர்வாகத்துக்கான நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் நடத்தினார்.

எழுது வினைஞர் மற்றும் அதனோடு இணைந்த தரப் பணிக்குழு உறுப்பினர்களுக்கான ஐந்து நாள் ஆரம்ப செயலமர்வு நிகழ்ச்சி
ஐந்து – நாள் ஆரம்ப செயலமர்வு நிகழ்ச்சி சுருக்கெழுத்தாளர்கள், எழுது வினைஞர்கள் மற்றும் பல்கலைக்கழகத்தின் அதனோடு இணைந்த தரத்திலானவர்களுக்கு 2 ஆம் தொகுதி உறுப்பினர்களுக்கு நடாத்தப்பட்டது. முதலாவதாக நடைபெற்ற இந்த நிகழ்ச்சிகளில் 2017 ஆம் ஆண்டு மார்ச் 17 ஆம் திகதியும் ஏப்ரல் 7 ஆம் 21 ஆம் மற்றும் 28 ஆம் திகதிகளிலும் மற்றும் மே 5 ஆம் திகதியும் 33 பேர் பங்கெடுத்துக் கொண்டனர். இரண்டாவதாக நடைபெற்ற இந்த நிகழ்ச்சிகளில் 2017 ஆம் ஆண்டு ஜூன் 21 ஆம் திகதியும் மற்றும் 30 ஆம் திகதியும் மற்றும் ஜூலை 14 ஆம் திகதியும் மற்றும் 28 ஆம் திகதியும் ஓகஸ்ட் முதலாம் திகதியும் 34 பேர் பங்கெடுத்துக் கொண்டனர்.

நிர்வாகத் துறைப் பணிக்குழுவினருக்கான தர உத்தரவாத நடவடிக்கையில் விழிப்புணர்வு நிகழ்ச்சி
உள்ளகத் தர உத்தரவாதப் பிரிவு (IQAU) வின் உடனுழைப்புடன் நிர்வாகத் துறை பணிக்குழுவினருக்கான தர உத்தரவாத நடவடிக்கையில் ஒருநாள் விழிப்புணர்வு நிகழ்ச்சி ஒன்று ஆகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி கலைப் பீடத்தின் கல்வித் துறையில் நடைபெற்றது. இந்தப் பயிற்சிப் பட்டறையில் முப்பத்தி ஒன்பது

பணிக்குழு அலுவலகர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். பேராசிரியர் நாரத வர்ணசூரிய, பேராசிரியர் தீப்தி பண்டார மற்றும் பேராசிரியர் பிரசாத் சேதுங்க ஆகியோர் வளவாளர்களாக சேவையாற்றினர்.

பல்கலைக்கழகத்தின் ஆய்வு கூட சேவகர்களுக்கான மூன்று நாள் பயிற்சி நிகழ்ச்சி

பல்கலைக்கழக ஆய்வு கூட சேவகர்களுக்கான மூன்று நாள் பயிற்சி நிகழ்ச்சி ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி மற்றும் செப்டம்பர் மாதம் 6 ஆம் மற்றும் 19 ஆம் திகதிகளில் நடைபெற்றன. இந்த நிகழ்ச்சியில் முப்பத்தி மூன்று பணிக்குழு அங்கத்தவர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். பேராசிரியர் ஆர் எல் விஜயவீர, பேராசிரியர் ஆர்.டபிளியூ. பல்லேகம, திரு யூ.டி. தொடங்வெல்ல, கலாநிதி சாலிந்த பெனரகம, கலாநிதி டபிளியூ. டி. சந்ரசேன, கலாநிதி ஜெயலத் எதிரிசிங்க, கலாநிதி எஸ் மைத்திரிபால, செல்வி சியாமளி திலகரத்ன மற்றும் கலாநிதி எஸ் பண்நாயக்க ஆகியோர் வளவாளர்களாக சேவையாற்றினர்.

பல்கலைக்கழகத்தின் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் அதனுடன் இணைந்த தரத்தில் உள்ள பணிக்குழுவினருக்காக ஆறு நாள் ஆரம்ப பயிற்சி நிகழ்ச்சி

பல்கலைக்கழகத்தின் தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் அதனுடன் இணைந்த தரத்திலான பணிக்குழுவினருக்கு ஆறு நாள் பயிற்சி நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டன. ஆகஸ்ட் மாதம் 24 ஆம் திகதி செப்டம்பர் மாதம் 8 ஆம், 12 ஆம், 20 ஆம் மற்றும் 27 ஆம் திகதிகளிலும் மற்றும் ஒக்டோபர் 4 அம் திகதியும் பணிக்குழு அபிவிருத்தி நிலையத்தில் நடாத்தப்பட்ட இந்தப் பயிற்சி நிகழ்ச்சியில் முப்பத்தி நான்கு பணிக்குழு உறுப்பினர்கள் பங்கு பற்றினர்.

கல்விசார் பணிக்குழுவினருக்கான பயிற்சி நிகழ்ச்சிகள்

கல்விசார் பணிக்குழுவினருக்கான 13 ஆவது மற்றும் 14 வது ஆரம்ப கட்டப் பயிற்சி நிகழ்ச்சிகள்

2017 ஆம் ஆண்டு காலப்பகுதிக்குள் கீழ்வரும் காலப்பகுதிக்குள் தகுதி காண் கல்விசார் பணிக்குழுவினருக்கான இரண்டு ஆரம்ப கட்ட இரு பயிற்சி நிகழ்ச்சிகளை பணிக்குழு அபிவிருத்தி நிலையம் நடாத்தியது.

பிரிவுகள்	காலப்பகுதி மற்றும் 13 ஆவது ஆரம்ப கட்ட நிகழ்ச்சி	காலப்பகுதி மற்றும் 14 ஆவது ஆரம்ப கட்ட நிகழ்ச்சி
1 வது பிரிவு	ஜனவரி 23 ஆம் திகதியில் இருந்து ஜனவரி 27 ஆம் திகதி வரைக்கும் மற்றும் ஜனவரி 30 ஆம் திகதியில் இருந்து பெப்ரவரி 03 ஆம் திகதி வரைக்கும்	2017 ஒக்டோபர் 16 ஆம் திகதியில் இருந்து 20 ஆம் திகதி வரைக்கும் மற்றும் 2017 ஒக்டோபர் 23 ஆம் திகதியில் இருந்து 27 ஆம் திகதி வரைக்கும்
2 வது பிரிவு	2017 பெப்ரவரி 27 ஆம் திகதியில் இருந்து மார்ச் 03 ஆம் திகதி வரைக்கும் மற்றும் மார்ச் 6 ஆம் திகதியில் இருந்து 10 ஆம் திகதி வரைக்கும்	2017 நவம்பர் 13 ஆம் திகதியில் இருந்து 17 ஆம் திகதி வரைக்கும் மற்றும் 2017 நவம்பர் 20 ஆம் திகதியில் இருந்து 24 ஆம் திகதி வரைக்கும்
3 வது பிரிவு	மார்ச் 20 ஆம் திகதியில் இருந்து 24 ஆம் திகதி வரைக்கும் மற்றும் 27 ஆம் திகதியில் இருந்து 31 ஆம் திகதி வரைக்கும்	2017 டிசம்பர் 04 ஆம் திகதியில் இருந்து 08 ஆம் திகதி வரைக்கும் மற்றும் 2017 டிசம்பர் 11 ஆம் திகதியில் இருந்து 15 ஆம் திகதி வரைக்கும்
பங்கு பற்றுனர்களின் எண்ணிக்கை	27 (பேராதனை, கொழும்பு மற்றும் தென் கிழக்கு பல்கலைக்கழகங்களில் இருந்து)	27 (பேராதனை, தென் கிழக்கு, பிக்கு, கிழக்கிலங்கை பல்கலைக்கழகங்களில் இருந்தும் மற்றும் இலங்கை உயர்தர தொழிநுட்பவியல் கல்வி நிறுவகத்தில் இருந்தும்)

தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

தற்போது பணிக்குழு அபிவிருத்தி நிலையமானது பல்கலைக்கழகத்தின் பல பதவியணியினர் வகைக்கு பயிற்சிகளை வழங்க கூடியதாக உள்ளதுடன், அடுத்த ஆண்டில் ஏனைய பதவியணியினருக்கு அதிக பயிற்சிகளை வழங்க உத்தேசித்துள்ளது.

பணிக்குழு அபிவிருத்தி நிலையத்தின் சேவைகளின் தரம் மற்றும் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு பின்வரும் தேவைகள் வேண்டப்படுகின்றன:

- எழுதுவிளைஞர் தரத்தில் இன்னும் ஒருவர் தேவைப்படுகின்றார்
- இன்னும் ஒரு தொழிலாளர்
- நிகழ்ச்சி முகாமையாளராக சேவையாற்ற குறைந்த பட்சம் பகுதி நேர உதவிப் பதிவாளர் ஒருவர்
- கீழ் கட்டமைப்பு அபிவிருத்தி வசதிகள் வேண்டப்படுகின்றன. (2018 ஆம் ஆண்டு முற்பகுதியில் பணிக்குழு அபிவிருத்தி நிலையத்தின் முகாமைத்துவக் குழுவிற்கு முழு விபரத்துடன் கூடிய அறிக்கை ஒன்று இந்த விடயம் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட உள்ளது.

எதிர்காலத் திட்டங்கள்

பணிக்குழு அபிவிருத்தி நிலையமானது 2018 - 2020 காலப்பகுதியில் பல்கலைக்கழகத்தின் அனைத்து மட்டங்களையும் சேர்ந்த சகல பணிக்குழு அங்கத்தவர்களுக்கும் ஒரு பயிற்சி நிகழ்ச்சியையாவது வழங்க திட்டமிட்டுள்ளது.

5. துணைச் சேவைகள்

5.1 சுகாதார நிலையம் மற்றும் சுகாதார சேவைகள்

(பிரதம மருத்துவ அதிகாரி வைத்தியக் - கலாநிதி பீ.எம்.எ.சமரக்கொடி.)

அறிமுகம்

பேராதனைப் பல்கலைக்கழக சுகாதார நிலையமானது அரசாங்கத்தால் பராமரிக்கப்படும் அல்லது அரசாங்கவுடைமை அல்லது தனியார் உடைமை நடுத்தர மட்ட நிறுவனங்களுடன் ஒப்பிடும் போது இணையற்ற நிலையமாக உள்ளது. இந்நிலையமானது மாணவர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள் மற்றும் அவர்களின் குடும்ப அங்கத்தவர்கள் என மருத்துவ பராமரிப்பு சேவைகளை சுமார் 20,000 பேரிற்கு வழங்குகிறது. மேலும் சமுக / சுற்றாடல் சுகாதார பராமரிப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்வதோடு குப்பைகளை அகற்றுவதையும் முகாமை செய்கிறது.

நன்கு திட்டமிடப்பட்ட வேலைத்திட்டமானது மாபெரும் சனத்தொகையின் சுகாதார தேவைகளை பூர்த்தி செய்வதற்காக அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதோடு ஒவ்வொரு நபருக்குமான தனித்தனியான கோப்புகள் சுகாதார நிலையத்தால் பராமரிக்கப்படுகின்றன. ஒரு ஊழியரின் கோப்பானது அவரின் ஆட்சேர்ப்பு தகுதிக்கான மருத்துவ அறிக்கையுடன் தொடங்கப்படுவதோடு ஒரு மாணவரின் கோப்பானது அவரின் ஆரம்ப மருத்துவ அறிக்கையுடன் தொடங்கப்படுகிறது. ஊழியர்களின் கோப்பானது அவர்கள் சேவையிலிருந்து ஓய்வு பெறும் வரை பராமரிக்கப்படுவதோடு மாணவர்களின் கோப்புகள் அவர்கள் பல்கலைக்கழக கல்வியை பூர்த்தி செய்யும் வரை பராமரிக்கப்படுகின்றன.

ஒரு அவதானிப்பாளருக்கு ஒவ்வொரு தனிநபர்களுக்குமான "சுகாதாரக் கோப்பை" அவதானிப்பதன் மூலம் அவர்கள் நோய்வாய்ப்பட்டிருப்பினும் இல்லாவிட்டாலும் அவர்களை ஒப்பிடுவதற்கு ஏற்றவாறான கோப்புக்களை பராமரித்துவரும் ஒரே நிறுவனமாக இந்நிலையத்தை கண்டு கொள்ள முடியும்.

மாணவர்கள் மற்றும் ஊழியர்களுடன் தொடர்புடைய பொது மருத்துவ ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக பின்வரும் சேவைகளும் வழங்கப்படுகின்றன.

- அதிக அபாய நிலைமையுள்ள மாணவர்களுக்கு தடுப்பூசி ஏற்றுதல் (கல்லீரல் விக்கம் B/ARV/TT)
- விளையாட்டிற்கான மருத்துவ தகைமை பரீட்சை
- ஆய்வுகூட புலனாய்வுகள்
- முதலுதவி நிகழ்ச்சிகள்
- மாணவர்கள் மற்றும் அலுவலர்களுக்காக மருத்துவ சபைகளை நடாத்துதல்
- பல்கலைக்கழகத்தின் சுகாதார வசதிகள் குறித்ததான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை புதிய மாணவர்களுக்காக நடாத்துதல்
- மாணவர்களுக்கான சுகாதார கல்வி
- தேவைக்கேற்ற ஆலோசனை சேவை

ஒரு நியமத்திற்குட்பட்ட வைத்தியசாலையிலிருந்து அதற்கு வருகை தருவோருக்கு மருத்துவ சேவை வழங்கப்படுவதே எதிர்பார்க்கப்படும். எனினும் பல்கலைக்கழக சுகாதார நிலையமானது விசேடத்துவம் வாய்ந்ததாக சுகாதார பராமரிப்பு வசதிகளுக்கு மேலதிகமாக பின்வரும் சமுக சேவைகளையும் வழங்குகிறது.

- பல்கலைக்கழக கழிவு முகாமைத்துவம்
- சுற்றாடல் ஆரோக்கியம்
- டெங்கு கட்டுப்பாடு
- தெரு நாய்கள் தடுப்பூசி / நாய்க்கடி கட்டுப்பாடு தடுப்பூசி ஏற்றல்
- ஆரோக்கியம் தொடர்பாக மாணவர் விடுதி பரிசோதனை மற்றும் மேற்பார்வை
- சிற்றுண்டிச்சாலை பரிசோதனை மற்றும் சுகாதார பராமரிப்பு
- எல்லா பல்கலைக்கழக கட்டிடங்களுக்குமான கரையான் தடுப்பு
- உணவு மற்றும் நீர் ஆரோக்கியம்
- திறந்த வடிகாலமைப்பு முறையைப் பேணுதல்

வினைத்திறனான நோயாளி வண்டிச் சேவையானது 24 மணிநேரமும் நடைமுறைப்படுத்தப்படுவதோடு எந்த நேரத்திலும் நோயாளி வண்டியானது நோயாளிகளை மருத்துவ கவனத்திற்காக ஏற்றும்பொருட்டு அவர்கள் இருக்கும் இடத்தை அடைவதோடு அந்த இடத்திற்கு வருவதற்கு ஆறு கிலோமீற்றர் தூரம் வரையில் ஒரு நிமிடத்திலிருந்து ஐந்து நிமிடம் வரை எடுக்கும் (இம்முறையானது அபிவிருத்தியடைந்த நாடுகளில் மாத்திரமே காணப்படுவதோடு இந்நாட்டில் வேறு எங்கும் காணமுடியாது). தினமும் சுமார் 100 நோயாளிகள்

வெளி நோயாளர் சேவைப் பிரிவிற்கு வருகை தருவதோடு அவர்களது அனைத்து மருத்துவ தேவைகளும் இந்நிலையத்தால் வழங்கப்படும். சில காரணங்களால் தேவைப்படும் மருந்து மாத்திரைகள் இந்நிலையத்தில காணப்படாத பட்சத்தில் அவை குறுகிய நேரத்திற்குள் உள்ளூர் சந்தையில் கொள்வனவு செய்யப்பட்டு நோயாளிகளுக்காக வழங்கப்படும். இதுவும் ஒரு பிரத்தியேக சேவையாக காணப்படுவதோடு எந்த ஒரு அரச வைத்தியாசலைகளின் வெளிநோயாளர் பிரிவுகளிலும் பொதுவாக காணப்படவில்லை.
ஒரு விசேட செயற்பாடு பல்கலைக்கழக ஊழியர்களின் மருத்துவ கண்காணிப்பு நிகழ்ச்சியாக நடப்பாண்டினுள் ஆரம்பிக்கப்பட்டது. அதன்படி பல்கலைக்கழகத்தின் 40 வயதிற்கு மேற்பட்ட அனைத்து ஊழியர்களிலும் சுமார் 900 ஊழியர்கள் வருடமொருமுறை அல்லது இரு வருடத்திற்கொருமுறை தேவைக்கேற்றபடி பரிசோதிக்கப்பட்டு அனைத்து ஆய்வுகளும் இலவசமாக நடைபெறுகின்றன.
அனைத்து பல்கலைக்கழக ஊழியர்களும் இந்நிகழ்ச்சிக்கு உட்படுத்தப்படுவதோடு ஓய்வுபெறும் வரையில் தேவைக்கேற்ப மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுவர். இந்நிகழ்ச்சியின் நோக்கமானது ஒரு தனிநபர் ஓய்வு பெற்ற பின்பு நோயற்ற நபராக வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்குவதாகும். இந்நிகழ்ச்சியானது குறைந்த கிரயத்துடன் அமுல்படுத்தப்பட்டதோடு இதனை தேசியமட்டத்தில் அமுல்படுத்தினால் பெறுமதியாக அமையும். அவ்வாறான சூழ்நிலையில் பல்கலைக்கழக நிகழ்ச்சியானது ஒரு மாதிரி கருத்திட்டமாக கற்க முடியும்.
தேசிய சுகாதார பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தனிநபருக்கான வருடாந்த மொத்த தேசிய செலவு ரூபா 5500 ஆகும். எனினும் தனிநபருக்கான பரந்தளவிலான சுகாதார பாதுகாப்பு செலவாக பல்கலைக்கழகத்தினால் அமுல்படுத்தப்பட்டதற்கான தொகை ரூபா 3000 ஐ விட குறைவாக காணப்படுகிறது.
இவ்வனைத்து செயற்பாடுகளுக்காகவும் 4 மருத்துவ உத்தியோகத்தர்களும், 9 தாதியரும், மற்றும் 40 ஏனைய உதவிச்சேவை ஊழியர் குழுவும் மாத்திரமே ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
சுகாதார நிலையத்திற்கான உட்கட்டமைப்பு கட்டட தங்குமிட வசதியானது அதன் அனைத்து செயற்பாடுகளிலும் ஈடுபடுவதற்காக ஓர் பழைய மேல்மாடி உத்தியோகபூர்வ விடுதி மற்றும் சமூக மற்றும் சுற்றாடல் அலகு என்பவற்றோடு 2000 சதுர அடி அளவை கொண்ட நிலப்பரப்பே காணப்படுகின்றது. செழுமையான தேசிய சுகாதார நிகழ்ச்சிக்காக கொள்கைத் திட்டங்களை தயாரித்தல் தொடர்பாக அக்கறையுள்ள ஒருவர் அல்லது சுகாதார பொருளியலில் ஈடுபட்டுள்ள விசேட நிபுணர் ஒருவர் பல்கலைக்கழகத்தினால் அமுல்படுத்தப்பட்டிருக்கும் சுகாதார பாதுகாப்பு நிகழ்ச்சியை கற்றலானது பெறுமதியாக அமையும் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

அடைவுகள்

- பல்கலைக்கழகத்தின் திண்மக் கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டத்தில் 75% நிறைவடைந்துள்ளது.
- டெங்கு கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தை வெற்றிகரமாகத் தொடருதல் - 16 முறைப்பாடுகள் பல்கலைக்கழகத்தில் இருந்து அறிக்கை இடப்பட்டுள்ளன.
- மனநிலை பாதிக்கப்பட்ட மாணவர்களை நலப்படுத்துவதற்கு திட்டங்களை மெதுவாகச் செயற்படுத்துதல். – நடைமுறையில் உள்ளது
- விடுதிகளிலுள்ள மூட்டைப் பூச்சி பிரச்சினைக்கான தீர்வு – நடைமுறையில் உள்ளது (புகையடித்தல்)
- விடுதி முகாமைத்துவக் கையேட்டைத் தயாரித்தல்.
- உரிய முறையில் கறையான் கட்டுப்படுத்தல் நிகழ்ச்சி – முடிவுறுத்தப் பட்டுள்ளது. வருடாந்தம் பல்கலைக்கழகத்துக்கு 12 மில்லியன் ரூபாய்களை சேமிக்கக் கூடியதாக இருக்கின்றது.
- தெருநாய் பிரச்சினைகளை முகாமை செய்தல் - “ பொறுப்புடை யல்லெப் பிராணி உரிமையாளர் உன்ற ஒரு நிகழ்ச்சி அமுல் படுத்தல் - ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத் திட்டங்கள்

- பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்யும் சுற்றுலாப் பயணிகளுக்கு நலன்புரி சேவைகளை மேற்கொள்ளுதல்.
- பச்சை மெட்ரிக் உலக பல்கலைக்கழக தரவரிசைக்கு ஏற்றவாறு தயாரிப்படுத்தல்.
- சரியான முறையில் பல்கலைக்கழக ஆய்வுகூடங்களில் உள்ள அபாயகர கழிவுகளை முகாமை செய்வதற்கான நிகழ்ச்சிகளைத் தயாரித்தல்.
- பல்கலைக்கழக உணவகங்களை மீள் ஒழுங்குபடுத்துவதோடு அவர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட நியமங்களுக்கேற்ப பராமரித்தலை உறுதிப்படுத்துதல்.
- பொது சுகாதார பாதுகாப்பு மட்டங்களை மாணவர் விடுதிகளில் விருத்தி செய்தல் மற்றும் தொடர்புபட்ட அடிப்படைகளுக்கான பயிற்சிப்பட்டறைகளை மாணவர்களுக்காக நடாத்துதல்.
- பல்கலைக்கழகத்திற்கு சுமையற்ற வகையில் நிலையத்தின் உட்கட்டமைப்பு வசதிகளை (கட்டிடங்கள்) மேம்படுத்துதல்.
- மாணவர்களுக்கான சுகாதார கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை பலப்படுத்துதல்.
- ஊழியர்களுக்காக தொழில் ரீதியான சுகாதார ஆபத்து தடுப்பு நிகழ்ச்சியை ஸ்தாபித்தல்.

5.2 நில வடிவமைப்புப் பிரிவு

(நில வடிவமைப்பு காப்பாளர் - திரு. டபிள்யு. என். ஆனந்த)

அறிமுகம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மொத்த நிலப்பரப்பானது 700 ஏக்கர்கள். பீடங்கள், மாணவ விடுதிகள், உத்தியோகத்தர்களுக்கான வாசஸ்தலங்கள் மற்றும் ஏனைய வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஏரத்தாள 250 ஏக்கர்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. பல்லின பூ மரங்களை நடுதல், நிழல் மரங்கள், வெட்டப்பட்ட வேலிகள், மற்றும் பாரியளவான புற்தரைகள் என்பன அடங்கலாக பல்கலைக்கழக பூங்காவின் நில வடிவமைப்பானது குறிப்பிடத்தக்களவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி நில வடிவமைப்பை தத்துவங்களுக்கு அமைய நில வடிவமைப்பைப் பராமரித்தல் மற்றும் உரிய முறையில் பேணுதல் என்பன நிலவடிவமைப்புப் பிரிவின் பிரதான நோக்கமாகும்.

நில வடிவமைப்பு பிரிவானது பின்வரும் செயற்பாடுகளுக்கு பிரதான பொறுப்புடையதாகும்

- பல்கலைக்கழகத்தின் தற்போதுள்ள நில வடிவமைப்பைப் பேணுதல்.
- ஒரு தாவர நாற்றுமேடையை பராமரித்தலும் பல்கலைக்கழக விழாக்களுக்கு ஏற்கனவே தயாரிக்கப்பட்ட தாவரச் சாடிகளை வழங்குதலும்.
- அபாயகரமான மற்றும் பல்கலைக்கழகத்தின் சொத்துக்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய மரங்கள் மற்றும் அவற்றின் கிளைகளை வெட்டுதல், பொதுச் சேவைகள் மற்றும் பாதுகாப்பு பிரிவுகளின் உதவியுடன் அவற்றை விற்பனை செய்வதற்கான கேள்வ ிமனு செயற்பாடுகளை கையாளுதல்.
- பல்கலைக்கழக நிலவடிவமைப்புகளை தரமுயர்த்தலும் விருத்திசெய்தலும்.
- புதிய நிலவடிவமைப்பு திட்டங்களை தயாரித்தல் மற்றும் அவற்றுக்கான கிரய மதிப்பீடுகளை மேற்கொள்ளல் மற்றும் புதிய நிலவடிவமைப்பை நடைமுறைப்படுத்தல்.

அடைவுகள்

பல்கலைக்கழகத்தின் எதிர்பார்த்த நிலவடிவமைப்பு முகாமைத்துவம் மற்றும் பராமரிப்பு தொடர்பான இலக்குகள் எய்தப்பட்டது. நில வடிவமைப்பு பிரிவானது பொது பட்டமளிப்பு விழா, ஆராய்ச்சி கூட்டத்தொடர் ஆராய்ச்சி கூட்டத்தொடர், நாடக விழாக்கள், ஆரம்ப விழாக்கள் மற்றும் மர நடுகை நிகழ்ச்சிகள் போன்ற பல்கலைக்கழக விழாக்களுக்கு பசும் புற்றரையைப் பேணுதல், மலர் மேடைகளைப் பேணுதல், மலர்ச் சாடிகளை வழங்குதல், சரத்சந்திர திறந்த வெளி அரங்கத்தை நாடக விழாக்களுக்காக முறையாக பராமரித்தல் போன்ற செயற்பாடுகளில் தனது முழுமையான பங்களிப்பை வழங்கியது. நில வடிவமைப்புப் பிரிவு 2015 நவெம்பரில் நடைபெற்ற பல் மருத்துவ பீட iPURSE மாநாட்டிற்காக பல் மருத்துவ பீட நில வடிவமைப்பை மறுசீரமைத்து ஒழுங்குபடுத்திக் கொடுத்தது.

விசேட முன்னேற்றங்களும் செயற்பாடுகளும்

- மருத்துவ பீடத்தில் மர நடுகை நிகழ்ச்சியை ஒழுங்கு செய்யப்பட்டது. பருவ கால மலர்களைக் கொண்ட புதிய மலர்ப்படுக்கைகள் அறிமுகஞ் செய்யப்பட்டன.
- உடைந்த, அபாயகரமான மரங்களை பொதுச் சேவைகள் மற்றும் மரக் கூட்டுத்தாபனத்துடன் இணைந்து பாதுகாப்பு பிரிவின் மேற்பார்வையின் கீழ் அகற்றுதல்.
- பல்கலைக்கழக பூங்காவின் அழகைப் பேணுவதற்கு நில வடிவமைப்புப் பிரிவுக்கு அவசியமான அனைத்து தாவரங்களையும் பெற்றுக் கொள்வதற்காக தாவர மேடைகளைப் பேணுதல்.
- குரங்குகள் மற்றும் காட்டு விலங்குகளிலிருந்து தாவரங்களை பாதுகாப்பதற்கு நாற்று மேடையைச் சுற்றி வேலி அமைக்கப்பட்டது.
- ஹில்டா பூங்காவை அபிவிருத்தி செய்வதற்கான ஒரு முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டு, முழுமையான
- பணிகள் உரிய நிறைவுசெய்யப்பட்டது.
- நில வடிவமைப்புப் பிரிவு காணப்படுகின்ற பழைய கட்டிடத்திற்குப் பதிலாகப் புதிய கட்டிடமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கான செயற்திட்டப் பிரேரணையைத் தயாரிக்கப்படுகின்றது. இதனால் வருடாந்தம் பல்கலைக்கழகம் ரூபா 350,000 ஐச் சேமிக்க முடியும்.
- தற்போதைய நிலைமையைப் பகுப்பாய்வு செய்து பதவியணியினரின் தேவைப்பாட்டை பூர்த்தி செய்து கொள்வதற்கான அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது.
- சில பீடங்களுக்கான கட்டிடங்கள், விடுதிகள் மற்றும் பதவியணியினருக்கான உத்தியோகபூர்வ விடுதி என்பனவற்றை நிர்மாணிப்பதற்காக சில நிலங்கள் சுத்தப்படுத்தப்பட்டுள்ளன.

நிலவடிவமைப்பு மேம்பாடுகளும் புதிய நில வடிவமைப்புகளும்

- முகாமைத்துவ பீடத்தின் நில வடிவமைப்பு மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டு நிலக் கட்டடம் மற்றும் பராமறிப்புக் குழுவின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.
- பொறியியல் பீடத்தின் மின்னியல் துறைக்கட்டடத்திற்கு அண்மையில் நில வடிவமைப்பு மேம்படுத்தப்பட்டு மீளமைக்கப்பட்டுள்ளது.
- 2016 ஆம் ஆண்டின் பட்டமளிப்பு விழாவிற்காக மாணவர் விடுதிகள், பீடங்கள், முதவைப் கட்டிடம் என்பவற்றின் நிலவடிவமைப்பு மேம்பாடுகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.
- AHS பீடத்திற்கு அருகில் அகஸ்டா வளைவில் நில வடிவமைப்பு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

தோல்விகளும் நியாயப்படுத்தல்களும்

- துறையின் தொழிலாளர் பற்றாக்குறையானது நாளாந்த நிலவடிவமைப்பு பராமரிப்பு செயற்பாடுகளை உயர் தரத்தில் பேணுவதற்கு பெரும் தடையாக அமைந்தது.
- நிலவடிவமைப்பு பராமரிப்பு நடவடிக்கைகள் நியம அளவில் இல்லாமை.
- பாரியளவு வேலைகளை விசாலமான பிரதேசத்தில் மேற்கொள்வதை பரிசீலிக்க மேற்பார்வை இயலளவு போதாமை.
- நில வடிவமைப்பு மேற்பார்வையாளர்களின் மேற்பார்வை இயலளவை மேம்படுத்துவதற்கு மோட்டார் வண்டிகள் போதாமை.
- வேலையாட்களையும் பொருட்களையும் போக்குவரத்து செய்வதற்குப் போதிய கள வாகனங்கள் (கெப் வண்டிகள்) போதாமை.
- எரிபொருள் மற்றும் உபகரணங்களைக் களஞ்சியப்படுத்தி வைப்பதற்குப் போதிய வசதிகள் இன்மை.
- டிராக்டர்கள், புல் வெட்டும் இயந்திரம் மற்றும் ஏனைய வாகனங்களுக்குப் போதிய தரிப்பிட வசதிகள் இன்மை.
- ஒரேயொரு மரம் வெட்டுபவர் நில வடிவமைப்புப் பிரிவில் காணப்படுகின்றார். அவர் திடீர் மருத்துவ விடுமுறையில் சென்றுள்ளார். இதனால் அபயகர மரங்களை அகற்றுவது கடினமான காரியமாகவுள்ளது.

எதிர்காலத் திட்டங்கள்

- குறைந்தது இரண்டு நிலவடிவமைப்பு மேற்பார்வையாளர்களை ஆட்சேர்ப்பு செய்வதன் மூலம் மேற்பார்வை இயலளவை அதிகரித்தல்.
- பல்வேறுபட்ட பிரிவுகளுக்கும் அலகுகளுக்கும் அவற்றின் வேண்டுகோள்களுக்கிணங்க தொழிலாளர்களை இடமாற்றம் செய்வதை தடுத்தல்.
- வேலிக்கன்று வெட்டுதல், மரவெட்டு உதவியாளர், மர ஒட்டு தொழில்நுட்பவியலாளர், புல் வெட்டும் இயந்திர இயக்குனர் போன்ற பதவிகளுக்கு ஆட்சேர்த்தல்.
- களஞ்சிய மற்றும் வாகன தரிப்பிட வசதிகளுடன் கூடிய புதிய கட்டிடத்திற்கு நில வடிவமைப்பு பிரிவை இடமாற்றுதல் மற்றும் போதிய இடவசதிகளுடன் கூடிய தாவர நாற்று மேடைகளை உருவாக்குதல்.

5.3 மார்சல் பிரிவு
(தலைமை மார்சல் - திரு. டப்.ஏ.ஏ`வேறஹெர)

அறிமுகம்

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் மார்ஷல் பிரிவின் பிரதான நோக்கம் பல்கலைக்கழக சூழலில் சுயாதீனமான அமைதியான மற்றும் கல்வி - நட்பை பராமரிப்பதாகும். இச் செயற்பாட்டினால் பேராதனைப் பல்கலைக்கழக இளங் கலை பட்டதாரிகள், ஆராய்ச்சியாளளாளர்கள் மற்றும் கல்விசார் உறுப்பினர்களின் ஆராய்ச்சி மற்றும் கவ்வி நோக்கங்களுக்கு பொருத்தமாகும்.
இந்த அலகில் ஒரு பிரதான ஒழுக்காற்று அதிகாரி, தமிழ் ஒழுகாகற்று சேவை உறுப்பினர் உள்ளிட்ட ஐந்து ஆண் ஒழுக்காற்று சேவை உறுப்பினர்கள், மற்றும் ஒரு பெண் ஒழுக்காற்று சேவை உறுப்பினரையும் உள்ளடக்கியுள்ளது. இந்த அலகானது பேராதனைப் பல்கலைக்கழக பிரதி உபவேந்தரின் மேற்பார்வையின் கீழ் இயங்குகிறது. இதன் சேவையின் முக்கிய அம்சமானது மாணவர்களின் ஒழுக்கத்தை பராமரிப்பது ஆசிரியர், நிலையங்கள் மற்றும் மாணவர் வதிவிடங்களில்,விளையாட்டு மைதானங்களில், ஜம்னாசியம் போன்ற முக்கியமான இடங்களில் நன்நடத்தை பற்றி கூடிய விழிப்புடன் இருப்பதாகும்.

சாதனைகள்

இந்த அலகினால் 2017ம் ஆண்டு வெற்றிகரமான விழிப்பபுணர்வு திட்டங்களை மேற்கொண்டுள்ளது. புதிய மாணவர் உட்கட்டமைப்புக்கள் மற்றும் சட்டம் ஒழுங்கை மீறுவதற்கு சீர்த்திருத்த நடைமுறைகள் பற்றி விவாதிக்கப்பட்டது. ஒரு சிறப்பு பகிடி வதை தடை திட்டம் ஒன்று உப வேந்தர் பிரதி துணை வேந்தர் மற்றும் ஒழுக்காற்று பணிப்பாளார்கள் மாணவர் ஆலோசகர்கள் இணைந் ஏற்பாடு செய்யப்பட்டது.
மேலும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் அனைத்து பாதுகாப்பு சேவை உறுப்பினர்களுக்கும் ஹந்தான பயிற்சி நிலையத்தில் மார்ஷல் அலகால பயிற்சி நிகழ்ச்சி திட்டம் ஒன்று` மேற்கொள்ள்பட்டது.
பாடசாலை மாணவர்களுக்கு "தலைமைத்துவம் மற்றும் நேர் மறை அணுகுமுறை மேம்பாடு " பற்றிய பயிற்சி திட்ட நிகழ்வை மார்ஷல் அலகானது ஹந்தான பயிற்சி நிலையத்தில் நடாத்தியது.
கால்நடை மருத்துவம் மற்றும் விலங்கு விஞ்ஞானப்பீடத்தில் இறுதி ஆண்டு மாணவர்களுக்கு சீரீஉடை , நெறிமுறைகள், சாப்பாட்டு மேசை பழக்கவழக்கங்கள் பற்றிய செயலமர்வொன்றை நடாத்தியது.
நடைமுறையாண்டில் 25 சம்பவங்கள் குறிததுத கண்ணோட்டத்தை செலுத்தி அவற்றிற்கான உண்மையான காரணங்களை கண்டறிவதில் வெற்றியை கண்டது.
பல்கலைக்கழக பகிடி வதை தடுப்பு விடயத்தில் ஊழியர்களுக்கும் மாணவர்களுக்கும் பாதுகாப்பு வழங்குவதன் மூலம் பாதுகாப்பு பிரிவிற்கு உதவியது. இந்த அலகானது ஒழுக்காற்று விசாரணைகளை நடாத்துவதற்கு அவ் விசாரணைக்கு உதவியாக குறிப்பிட்ட பீட பீடாதிபதிகளையும், விடுதி அதிபதிகளையும் செயலக உதவியாளர்களையும் ஒழுக்காற்று ஆலோசனை உறுப்பினர்கனினதும் ஆதரவைப் பெற்றுக் கொடுக்கின்றது.
பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா கண்காட்சிகள், நாடக விழா மற்றும் தழிழ் சிங்களப் புத்தாண்டு விழா கொண்டாடத்தின் போது இந்த அலகானது தமது முழு ஆதரவையும் அளித்துள்ளது.
இந்த அலகால் ஹிந்தகல, கலஹா சந்தி, தங்கொல்ல சந்தி , பேராதனை மற்றும் மஹகந்த பஸ் நிலையங்களில் உள்ள முன்று சக்கர வண்டி ஒட்டுணர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையில் இடையில் அவர்களின் சேவையை பெறுவதில் உள்ள முக்கியத்துவத்தை காட்டி புரிந்துணர்வை ஏற்படும் வகையில் ஒரு ஒருங்கிணைப்பு திட்டமொன்று நிறுவப்பட்டது.`

தோல்விகள் மற்றும் நியாயங்கள்

மார்ஷல் பிரிவின் பிரதான சவால் என்வெனில் 12,000 மாணவர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு 06 மார்ஷல் சேவை உறுப்பினர்கள் என்பது மிகவும் கடினமானதாகும்.
நடைமுறையிலுள்ள ஒழுங்கு முறையைப் பொறுத்தவரை மார்ஷல் சேவை உறுப்பினர்களுக்கு குறிப்பிட்ட பட்டதாரி கற்றல் சட்டம், மற்றும் நாட்டின் ஒழுங்கு முறை, மனித உரிமைகள், முகாமைத்துவம் மற்றும் ஆலோசனை போன்ற கற்கை நெறி பயிற்சிகளை வழங்கி அவர்களின் அறிவை மேம்படுத்துவது முக்கியமாகும்.

எதிர்கால திட்டங்கள்

மார்ஷல் அலகின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை 12ஆக உயாத்தி ஒரு பிரதி மார்ஷல் அதிகாரி பதவியையும் உருவாக்கவேண்டும். மற்றும் இந்த அதிகாரிகளுக்கு ஆலோசனை, மோதல் தீர்மானம் , முகாமைத்துவம் மற்றும் வெளிநாட்டு பயிற்சி நெறிகள் போன்றவற்றை தொடர்ந்து மார்ஷ் உறுப்பினர்கள் `பின்பற்றவேண்டும் மற்றும் அலகிற்கு ஒரு நிரந்தர லிகிதர் ஒருவரின் தேவை குறிப்பிடப்பட்டுள்ளது.

